Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily


மழைக்கான சாத்தியம் உண்டு.
27°c 26°c


சுடர்: 28 கதிர்: 333 வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 09, சனி 26.10.2013

# கன்னி அமர்வுடன் நடைபயில ஆரம்பித்தது தமிழரின் அரசு

## வடக்கின் வரலாற்று வெற்றிக்கு நேற்று முதல் செயல் வடிவம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 26
25 வருடங்களின் பின்னர் வடக்கு மாகாண மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழர் அரசு நேற்று வெள்ளிக்கிழமை கன்னி அமர்வுடன் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது.
வடக்கு மாகாணம் தனியாகப் பிரிக்கப்பட்ட பின்னர் பதவியேற்றுள்ள முதலாவது மாகாண சபை இதுவாகும்.
இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையில் வடக்கு -கிழக்கு இணைந்த மாகாண சபை 1988 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
அதன் பின்பு 25 வருடங்களின் பின்னர் வடக்கு மாகாண சபை தனியாகப் பிரிக்கப்பட்டு, அதற்குரிய தேர்தல் கடந்த மாதம் 21 ஆம் திகதி நடத்தப்பட்டது.
இந்தத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 30 ஆசனங்களைக் கைப்பற்றியதன் மூலமாக முதலாவது தமிழர் அரசை நிறுவியுள்ளது.
தமிழர் அரசின் கன்னி அமர்வு கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.
தமிழ் அரசின் பேரவைத் தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் சி.வீ.கே. சிவஞானம் ஏக மனதாகத் தெரிவுசெய்யப்பட் 21



### தமிழகத்தின் இளைஞர்களால் உத்வேகம்

யாழ்ப்பாணம், ஒக்.26
தமிழக இளைஞர் யுவதிகளின் உணர்ச்சி வேகம் எமக்குப் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளதென்று வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
அவர் தனது கன்னி உரையில் தென்னிந்திய தமிழர்களின் பங்கை நாங்கள் குறைத்து எடை போடவில்லை. எம்முடன் இணைந்து எம்மை வழி நடத்த அவர்களின் உதவி தேவை வ 21

## தமிழரின் அவலங்கள் போக்க மஹிந்த அரசுக்கு நேசக்கரம்

### கன்னி அமர்வில் வடக்கு முதல்வர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26
தமிழ் மக்களின் அவலங்களைப் போக்க, மத்திய அரசுக்கு ஒத்துழைப்புக் கரத்தை - நேசக்கரத்தை நீட்ட நாம் தயாராகவே இருக்கின்றோம்"
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்தார்.
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் தனது கன்னிப் பேச்சின்போதே அவர்



இந்த நேசக்கரத்தை நீட்டினார்.
தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசுக்கும் வடக்கு மாகாண சபைக்கும் இடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்த முடியுமானால் ஜனநாயகத்தை எமது வடக்கு மண்ணில் நிலைபெறச் செய்யலாம். மக்களின் அவலங் களைப் போக்க குழுமித்துச் செயலாற்றலாம். 21

## தலைவர் பிரபாகரனைப் பற்றி முதல்வர் நேற்றும் கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.26
தேர்தல் பிரசாரக் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பற்றி தான் கூறியதை நேற்றைய கன்னி அமர்விலும் நியாயப்படுத்தினார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.
இது குறித்து அங்கு அவர் தெரிவித்ததாவது:
பிரபாகரன் பற்றித் தேர்தல் காலத்தில் நான் கூறிய ஒரேயொரு வார்த்தை எவ்வாறு சில மக்க 21

## பஸ்ஸுடன் மோ.சைக்கிள் மோதியதில் இருவர் சாவு

யாழ்ப்பாணம், ஒக்.26
அதிகாலைவேளை மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் இருளில் வீதி ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸுடன் மோதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட வேளை இடைவெளியில் உயிரிழந்தனர்.
ஏ-9 வீதியில் முகமாலை பகுதியில் நேற்று அதிகாலை 4.20 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.
இந்த விபத்தில் வவுனியா மணிப் புரம் பகுதியைச் சேர்ந்தவர்க 21

## இராணுவம் வேண்டாம் வெளியேறட்டும் அவர்கள்

### வடக்கு முதல்வர் உறுதி படக் கூறினார்

யாழ்ப்பாணம், ஒக்.26
இராணுவத்தினர் வடக்கிலிருந்து வெளியேற்றப்படத் தான் வேண்டும் என்பதை கன்னியுரையில் வலியுறுத்திய முதலமைச்சர், எமது மக்கள் தேசிய பாதுகாப்புக்கு எந்த வேளையிலும் குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள் என்றும் உறுதியளித்தார்.
அத்துடன் இராணுவத் துணையுடன் வடக்கில் இடம்பெறும் அரச சார்புக் குடியேற்றத்தையும் அவர் கண்டித்தார்.
வட மாகாண சபையின் கன்னியமர்வில் தனது கன்னியுரையை நிகழ்த்திய விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:-
இராணுவமானது அதன் முகாம்களுக்குள் உடன் முடக்கப்பட வேண்டும்.
ஐவருக்கு ஒரு இரா 21

## மாற்ற வேண்டும் வடக்கு ஆளுநரை

யாழ்ப்பாணம், ஒக்.26
இராணுவ அதிகாரி ஒருவர் வடக்கு மாகாண ஆளுநராக இருக்கும் போது சிவில் நிர்வாகம் நடத்த முடியாது.
எனவே சிவில் நிர்வா கத்தை ஜனாதிபதி உண்மை யிலேயே விரும்பினால் எமது மக்களின் எதிர்பார்ப்புக்குப் பொருத்தமானவரை ஆளுநராக நியமிக்க வேண்டும் என்று முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையில் நேற்றைய தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
இராணுவத்திலிருந்து பிரிவுபடாத ஒருவர் ஆளுநராக இருக்கும் போது சிவில் நிர்வாகம் நடைபெறாது.
இன்றைய வடக்கு 21

## பொதுநலவாய மாநாட்டில் விக்கி பங்கேற்கக்கூடாது

யாழ்ப்பாணம், ஒக். 26
பொதுநலவாய மாநாட்டில் வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் கலந்துகொள்ளக் கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சித் தலைவர்களிடையேயான கலந்துரையாடல் யாழ்.நகரில் நேற்று வெள்ளிக்கிழமை மூன்று மணி நேரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது. இதன் போதே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. 21

# மும்மொழிக் கொள்கை வடக்கில் உள்ளதா?

யாழ்ப்பாணம், ஒக்.26
வடக்கு மாகாண சபையில் மும்மொழிக் கொள்கை திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலக்சுமி தெரிவித்துள்ள நிலையில், வடக்கு மாகாண சபையின் உத்தியோக பூர்வ வாகனங்களில் தனிச் சிங்களத்தில் பெயர்ப் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
யாழ். 'ரில்கோ' விடுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வுக்கு வந்த வடமாகாண சபையின் வாகனங்களில் கூட சிங்களத்தில் மட்டும் பெயர்ப் பலகை 21





# பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நேற்று நடந்தது வடக்கு மாகாண கன்னி அமர்வு

## வடக்கின் மத்திய அமைச்சர்கள் இருவரும் 'மிஸ்ஸிங்'

தொகுப்பு - தி.அமுதன்

யாழ்ப்பாணம், ஒக்.26

சர்வதேச ரீதியிலும், ஈழத் தமிழ் மக்களிடையேயும் பெரும் எதிர்பார்ப்பைத் தோற்றுவித்திருந்த வடக்கு மாகாண சபை அதன் கன்னியமர்வை நேற்று வெள்ளிக்கிழமை நடத்தியது.

சிறு சிறு சலசலப்புகளும், உட்கட்சிப் பூசல்களும் மாகாண சபை அரங்கிலே நேற்று அரங்கேறிய போதும் பெரும் சர்ச்சையைத் தோற்றுவிக்காது கூட்டம் நிறைவடைந்தது.



**திறப்பு விழா**

வடக்கு மாகாண சபையின் புதிய கட்டடத்துக்கான திறப்பு விழாவும் நேற்றுக் காலையே நடைபெற்றது. சுப நேரத்தில் எல்லாவற்றையும் நடத்திவிட வேண்டும் என்ற முதலமைச்சரின், வேண்டுகோளினால் சகல நிகழ்வுகளும் நேரம் பிந்தாமல் நடந்தேறின.

வழமையாக அரச கட்டடத்திறப்பு விழாக்கள் என்றாலே, வந்து நிற்கும் அமைச்சர்கள் நேற்றைய நிகழ்வில் 'மிஸ்ஸிங்'. இருப்பினும் தம்மையும் நேற்றைய நிகழ்வில் விருந்தினர்களாக வருவதற்கு அவர்களால் எடுக்கப்பட்ட முயற்சிகள் கைகூடவில்லை.

வடக்கு மாகாணத்தின் தனிக்காட்டு ராஜாவாக வலம் வந்து கொண்டிருந்த அளுநர் சந்திரசிறி, நேற்றைய நிகழ்வுக்கு வருகை தந்தபோது வடக்கு மாகாணப் பிரதம செயலாளரே அவரை வரவேற்றார். வழமையாக அவருக்குப் பின்னால் வரும் கூட்டத்தைக் காணவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேள தாளங்களுடன் வரவேற்கப்பட்டனர்.

இலங்கையின் தேசியக் கொடியை ஆளுநர் ஏற்றி வைக்க, முதலமைச்சர் மாகாணக் கொடியை ஏற்றினார். இதன் பின்னர் நினைவுக்கல் திரை நீக்கம் இடம்பெற்றது.

மாகாண சபை கட்டடத்துக்கான நாடா வெட்டுவதை ஒளிப்படம் எடுப்பதற்காக உள்ளூர் ஊடகவியலாளர்கள், தேசிய ஊடக நிறுவனங்களின் ஊடகவியலாளர்கள் எனப் பலர் குவிந்ததால் நெருக்கடி ஏற்பட்டது. இதில் கடமையிலிருந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்த பாரபட்சங்களைக் கையாண்டதால் சிறு சலசலப்பு ஏற்பட்டது.

நாடாவை முதலமைச்சரும், ஆளுநரும் இணைந்து வெட்டினர். அதன் பின்னர் சர்வமதத் தலைவர்களின் அனுட்டானம் இடம்பெற்றது.

**முதல் காரியம் நல்ல காரியம்**

கட்டத்தை திறந்து வைத்த முதல்வர் முதல் வேலையாக நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காசோலைகளை வழங்கினார்.

வடக்கு மாகாண சபையின் கட்டடத் திறப்பு விழா நிகழ்வுகள் முடிந்ததும், மாகாண சபை அமர்வைத் தொடக்கி வைக்காமலே வடக்கு மாகாண ஆளுநர் வெளியேறினார்.

மாகாண சபை அமர்வுகளுக்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் சபை அமர்வுக்குப் புதியவர்கள். பெரும்பாலும் சகல உறுப்பினர்களும் கலாசார உடையுடனேயே கூட்டத்துக்கு வருகை தந்தனர்.

முதல் மணி அடித்ததும் சபை அமர்வுகள் இடம்பெறும் இடத்துக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எல்லோரும் சென்றனர். வந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக சபை மண்டபத்தினுள்ளேயே விசேட இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு அவர்கள் படிக்கும் அழகைப் பார்க்கும் பெற்றோர் போல, மாகாண சபை உறுப்பினர்களை, சபை மண்டபத்துக்குள் அனுப்பிவிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தனர் அவர்களின் உறவுகள்.

மூன்றாவது மணி ஒலித்ததன் பின்னர் சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

**கன்னியமர்விலேயே இருவர் 'அவுட்'**

வடக்கு மாகாண சபையின் கன்னியமர்வில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இருவர் பங்கேற்கவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மன்னார் மாவட்ட உறுப்பினர் மொஹமட் ரபூஸ் ஆகிய இருவருமே அமர்வில் பங்கெடுக்கவில்லை. இது தொடர்பில் அவர்கள் சபைக்கு அறிவித்துள்ளனர்.

**வரிசையை குழப்பிய சிவாஜி**

ஆளுங்கட்சியில் 30 உறுப்பினர்கள் என்பதால், எதிர்ப்பக்கமும் அமர வேண்டிய நிலை ஏற்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு முன் வரிசை ஒதுக்கப்பட்டிருந்தது. அதிலே தான், மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம் அமர்ந்திருந்தார். ஒருவேளை கட்சி தாவிவிட்டாரோ என்ற சந்தேகம் எழுந்தாலும், அவரது உரை அதை மறுதலித்துவிட்டது.

சபையின் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, ஆளுநர் உரையை வாசித்தார். அதன் பின்னர் தவிசாளர் தேர்வுக்குக் கோரினார்.

**ஏகமனதாகத் தெரிவு**

தவிசாளராக மாகாண சபை உறுப்பினர் சி.வி.கே.சிவஞானத்தின் பெயரை அமைச்சர் த.குருகுலராஜா முன்மொழிய, அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வழிமொழிந்தார். மாற்றுப் பெயர்கள் எவையும் முன்வைக்கப்படாத நிலையில் சபை அவரை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

தொடர்ந்து சி.வி.கே.சிவஞானத்தை சபை ஊழியர்கள் வெளியில் அழைத்துச் சென்று, தவிசாளருக்குரிய உடையை அணிவித்து அழைத்து வந்தனர்.

**செங்கோல் இல்லை**

வடக்கு மாகாண சபை புதிய சபை என்பதால், சபைக்கு செங்கோல் இருக்கவில்லை. தவிசாளர் அழைத்து வரப்படும் பொழுது செங்கோல் எடுத்து வரப்படவும் இல்லை. சபைத் தவிசாளர் தனது ஆசனத்தில் அமைர்ந்ததும், சபையால் சுத்தியல் கொடுக்கப்பட்டது.

இதன் பின்னர் அவரை முன்மொழிந்த, வழிமொழிந்த அமைச்சர்கள் அழைத்துவந்து முதலமைச்சர் முன்பாகத் தவிசாளருக்குரிய சத்தியப் பிரமாணம் எடுக்கச் செய்தனர்.

தவிசாளர் தனக்குரிய ஆசனத்திலிருந்து அதன் பின்னர் சபையை வழிநடத்த தொடங்கினார்.

**பிரதித் தவிசாளர் தெரிவு**

அதன் பின்னர் பிரதித் தவிசாளருக்குரிய தேர்வு இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் அன்ரனி ஜெகநாதனின் பெயரை, அமைச்சர் ப.சத்தியலிங்கம் முன்மொழிய, அமைச்சர் பா.டெனீஸ்வரன் வழிமொழிந்தார். தொடர்ந்து அவருக்குரிய ஆசனத்தில் பிரதித் தவிசாளர் அமர்த்தப்பட்டார்.

**வரலாற்று உரை**

வடக்கு மாகாண சபை இதனைத் தொடர்ந்து முக்கியமான கட்டத்தினுள் நுழைந்தது.

வடக்கு மாகாண முதலமைச்சராகத் தேர்வு செய்யப்பட்ட க.வி.விக்னேஸ்வரன், மாகாண சபையின் கன்னி உரையினைத் தொடங்கி வைத்தார்.

தேர்தலின் போது தமிழ் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியமான வாக்குறுதிகளை தாம் மறந்து விடவில்லை என்பதை ஆழமான பேச்சினூடாக அவையோருக்கு நினைவூட்டினார்.

**போராளிகளை நினைவூட்டிய கமல்**

முதலமைச்சரின் உரையின் பின்னர் எதிர்க் கட்சித் தலைவர் கமலேந்திரன் உரையாற்றினார். இதன்போது தமிழர் விடுதலைக்காக உயிர் நீத்த போராளிகளையும் அவர் நினைவு கூர்ந்தார். இருந்தும் தனதுரையில் அவர் தான் சார்ந்த அரசியல் கட்சியின் சாயத்தைப் பூசத் தவறவில்லை.

**உறுப்பினர்களின் சம்பளத்துக்கு வேட்டு**

இதன் பின்னர் கட்சித் தலைவர்கள் என்ற அடிப்படையில் உரையாற்றிய மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தனது சம்பளத்தை வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப் போவதாகவும், ஏனைய உறுப்பினர்களும் அவ்வாறே வழங்க முன்வர வேண்டும் என்று கோரினார். ஏனைய உறுப்பினர்களின் முகத்தில் ஈயாடவில்லை.



**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகமாகியது**

இதன் பின்பு றொலோவின் மாகாண சபை உறுப்பினரும், அமைச்சருமான டெனீஸ்வரன் உரையாற்றினார்.

தொடர்ந்து அதே கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உரை நிகழ்த்தினார். தனதுரையில் எதிர்க்கட்சித் தலைவர் கமலுக்கு அவர் பதிலடி கொடுக்கும் வகையில் கருத்துத் தெரிவித்தார்.

இணக்க அரசியல் செய்பவர்களை மக்கள் நிராகரித்து விட்டனர் என்றும் இன்று மத்தியில் கூட்டாட்சியும் இல்லை 'மண்ணாங்கட்டி' ஆட்சியுமில்லை என்றும் சிவாஜிலிங்கம் சாடினார்.

தனதுரையில் இறுதியாக, தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம் என்று அவர் குறிப்பிட்டார்.

**புலிகள் இருக்கின்றனர்**

தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சர்வேஸ்வரனும், நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் சார்பில் அஸ்மின் அயுப்பும் உரை நிகழ்த்தினர். அதன் பின்னர் வவுனியா மாவட்ட சிங்கள உறுப்பினர் தர்மபாலா சிங்கள மொழியில் உரையாற்றினார்.

மொழி பரிமாற்ற வசதி இருந்தமையால் தமிழர் உறுப்பினர்களும் அவரின் உரையைக் கேட்டனர்.

தொடர்ந்து உரையாற்றிய திருமதி அனந்தி சசிகரன், கட்சிக்குள் கதைக்க வேண்டிய விடயங்களையும் சபையில் முன்வைத்தார். ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

எமது விடுதலைப் பேராட்டத்தின் அனைத்தையும் தீர்மானிக்கின்ற சக்தியாக தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்தனர் - இருக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**சலிப்படையவைத்த உரைகள்**

இதன் பின்னர் ஈ.பி.டி.யின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் தவநாதன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் ரவிகரன், யாழ்.மாவட்ட உறுப்பினர்களான பரஞ்சோதி ஆர்னல்ட் மற்றும் அமைச்சர்களான ஐங்கரநேசன் சத்தியலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

அரைத்த மாவை அரைப்பது போல எல்லோரும் மாகாண சபை என்ற விடயத்தையும், அதன் தோற்றத்தையும் திரும்பத் திரும்ப கூறினர்.

இறுதியில் உரை நிகழ்த்திய பிரதி தவிசாளர் அன்ரனி ஜெகநாதன், உட்கட்சிப் பூசல்களை சபையில் முன் வைத்தார், அறிக்கைகளில் இல்லாமல் நடைமுறையில் செயற்படுமாறு அவர் கோரியது யதார்த்தத்தை வெளிப்படுத்தி யிருந்தாலும் ஒரு சில உறுப்பினர்களை திட்டமிட்டுக் குற்றஞ்சாட்டுவது போல அமைந்தது.

**சிங்களக் குடியேற்றம்**

இனப்படுகொலைக்கு நீதியான விசாரணை, உள்ளக சுயநிர்ணயம், இராணுவத்தை வெளியேற்றல், ஆளுநரை மாற்றுதல் போன்ற தேர்தல் கால முழக்கங்கள் நேற்றைய கன்னி அமர்விலும் ஒலித்தன.

நன்றியுரையாற்றிய தவிசாளர் சி.வி.கே. சிவஞானம், இந்த மண்டபத்திலிருந்து சில நூறு மீற்றர் தூரத்திலுள்ள நாவற்குழியில் நடைபெறும் சிங்களக் குடியேற்றத்தை அரசு நிறுத்தி தனது நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டுமென்று கோரினார்.

கன்னியமர்வு மதியம் 12.05 மணியுடன் நிறைவுக்கு வந்தது.

**பூரணப்படுத்தப்படாத ஒழுங்கமைப்பு**

முதல் முதலாக நடைபெற்ற மாகாண சபை அமர்வில் ஊடகவியலாள்களுக்கு ஒழுங்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை இது நாள் வரை ஆளுநரினால் வட மாகாண சபை நிகழ்வுக்கு அனுமதிக்கப்பட்ட உள்ளூர் அரசு ஊடகத்தினருக்கு அளவுக்கு அதிகமான அனுமதியும், ஏனைய உள்ளூர் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பும் செய்தனர் வட மாகாண சபையின் பேரவைச் செயலகத்தினர்.

நிகழ்வை உரிய முறையில் ஒளிப்படம் எடுப்பதற்கும் உரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

எப்படிப்பட்ட குறை நிறைகள் இருப்பினும் மாகாண சபையின் கன்னியமர்வு இனிதே நடந்து முடிந்தது.

# வடக்கில் வரலாறு படைத்த தமிழர் அரசு



மேளதாளங்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் அழைத்து வரப்படுகின்றனர்.








படங்கள்: தர்சன்

ஆளுநர், முதலமைச்சர் இணைந்து சபையின் கட்டடத்தைத் திறந்து வைக்கின்றனர்



மாகாண சபைக் கட்டடத்துக்கான நினைவுக் கல்லை முதலமைச்சர் திரைநீக்கம் செய்து வைக்கின்றார்



சபை அமர்வைப் பார்வையிடும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரமுகர்கள்





நோயால் பாதிப்புற்றவர்களுக்கு காசோலை வழங்கல்



தவிசாளர் சி.வீ.கே.சிவஞானம் சபைக்கு அழைத்துவரப்பட்ட வேளையில்..

## சனசமூக நிலையத்தை அமைக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஒக்.26

கிளிநொச்சி- தருமபுரம் கிராமத்தில் சனசமூக நிலையம் ஒன்றை அமைத்துத் தருமாறு இந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தருமபுரம் கிராமத்தில் முதியோர்கள், மாண வர்கள் எனப் பல தரப்பினரும் தமது பொழுதைக் கழிப்பதற்கும், வாசிப்பை மேற்கொள்வதற்கும் ஏற்ற வகையில் ஒரு நூலகமோ அல்லது சனசமூக நிலை யமோ இல்லாதநிலை காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட முதியவர்களும் பல நூற்றுக்கணக்கான மாண வர்களும் பொது மக்களும் இருக்கின்றனர். எனவே இங்கு நூலகமொன்றை அமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளையால் விசேட சீட்டிழுப்பு

தென்மராட்சி, ஒக்.26

மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் "சிசு உதான" "இசுறு உதான" சேமிப்பு கணக்கினை ஆரம்பித்தவர்களுக்கான விசேட பரிசுதியச் சீட்டிழுப்பும் பரிசில்கள் வழங்கலும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் நா.நாகேஸ்வரன், தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா ஆகியோரும் கலந்து கொள்வர்.

"சிசு உதான" "இசுறு உதான" சிறுவர் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிக்க ஊக்குவிப்புகளை வழங்கிய தென்மராட்சி வலய பாடசாலைகளின் அதிபர்கள் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (வ-9)




சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் நோக்குடன் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தால் நேற்று யாழ்.நகரில் மத்திய பஸ் நிலையத்தில் வைத்து பொதுமக்களுக்கு

### வலி.தென்மேற்கு பிரதேச சபையில்

## மாதாந்தக் கூட்டங்கள் இனிமேல் மேல் மாடியில்

வலி.தென்மேற்கு, ஒக்.26

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நடைபெற்று வந்த இடம் உறுப்பினர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து மேல் மாடிக்கு மாற்றப்பட்டுள்ளது.

பல மில்லியன் ரூபா செலவில் மாடிக் கட்டடமாக அமைக்கப்பட்ட வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

கீழ்த்தளத்தில் காரியாலயத்தின் பல பிரிவுகள் இயங்கி வருவதுடன் உறுப்பினர்களின் மாதாந்தக் கூட்டமும் நடைபெற்று வருகிறது.


**உறுப்பினர்கள் தவிசாளர்களின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்தே மாதாந் தக் கூட்டம் நடைபெறும் இடம் மேல்மாடிக்கு மாற்றப்பட்டுள்ளது.**

தலைமைக் காரியாலயத்திலுள்ள சகல பிரிவுகளும் கண்ணாடியால் வடிவமைக்கப்பட்டுள்ளதால் மாதாந்தக் கூட்டங்கள் இடம்பெறும் போது அங்கு கடமையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் மட்டுமல்ல தாங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அங்கு வரும் பொது மக்களும் கூட்டங்களை அவதானிப்பதாலும் , பார்வையிடுவதாலும் உறுப் பினர்களின் செயற்பாடுகளுக்கு குந்தகம் ஏற்படுகின்றது.

இந்த நிலை குறித்து உறுப்பினர்கள் தவிசாளர்களின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்தே மாதாந்தக் கூட்டம் நடைபெறும் இடம் மேல்மாடிக்கு மாற்றப் பட்டுள்ளது. (வ-115)

## 18 பொதுக் கிணறுகள் இயற்றாலையில் துப்புரவு

### ஐ.நா. அபிவிருத்தி திட்டத்தின் மூலம்



யாழ்ப்பாணம், ஒக்.26

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தாவளை-இயற்றாலை கிராமத்திலுள்ள பொதுக் கிணறுகள் அந்தப் பகுதி மக்கள் கோடை காலத்தில் பயனடையக்கூடியவாறு துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் கோடை காலத்தில் கிணறுகள் தண்ணீர் இல்லாமல் வற்றிப் போவதால் அந்தப் பகுதி மக்கள் தண்ணீர்த் தேவைக்காக வேறு இடங்களுக்குச் சென்று பெற வேண்டிய நிலையில் இருந்தனர். இந்த நிலையில் மக்களது கோரிக்கைகளுக்கு அமைவாக குறித்த பிரதேசத்தில் 18 கிணறுகள் மக்கள் பாவனைக்கு ஏற்றதாக திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. (வ-14)

## வெள்ளத்தில் மூழ்கிய பாடசாலைகள் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பின

வடமராட்சி, ஒக்.26

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி இந்து ஆரம்பப் பாடசாலைகளில் அண்மையில் பெய்த மழையால் வெள்ளம் நிறைந்து புதன், வியாழன் ஆகிய இரு தினங்களும் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. தற்போது வெள்ளம் அப்புறப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பாடசாலைகள் மீண்டும் நேற்று வழமை போல இயங்கத் தொடங்கின

கடந்த புதன்கிழமை அதிகாலை 2 மணி தொடக்கம் 4.30 மணிவரை பெய்த கடும் மழையால் இரு பாடசாலைகளும் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன. பாடசாலைக்கு வந்த மாணவர்கள் வெள்ளத்தால் பாடசாலைக்குள் உட்புக முடியாத நிலையில் திரும்பிச் சென்றனர். ஆசிரியர்கள், அதிபர்கள் என்ன செய்வதெனத் தெரியாது திண்டாடிக் கொண்டிருந்தனர்.

இரு பாடசாலைகளுக்கும் இடையே செல்லும் பருத்தித்துறை, தம்பசிட்டி வீதியும், பாடசாலைகளுக்கு அருகாக வீதிக்கு குறுக்கே செல்லும் சிமெந்திலான வெள்ளவாய்க்காலும் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. நிர்மாணத்தின் போது வீதி உயர்த்தப்பட்டு 'காபெற்' வீதியாக மாற்றப்பட்டதுடன் வெள்ளவாய்க்கால் சுவர்களில் பாடசாலைகளிலிருந்து வெள்ளம் வடிந்தோடக்கூடியவாறு துவாரங்கள் இடப்படவில்லை. இதன் காரணமாகவே பாடசாலைகள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன.

பாடசாலைகள் வெள்ளத்தில் மூழ்கியதையடுத்து பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் நிலைமையைப் பார்வையிட்டு வெள்ளத்தை அப்புறப் படுத்த பருத்தித்துறை நகரசபையின் உத வியை நாடினர்.

அதேவேளை அங்கு வந்து சேர்ந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா.ரவீந்திரன், உப தலைவர் சி.பத்மநாதன், உறுப்பினர் தி.தீபானந்த் ஆகியோர் நேரடியாக வந்து பார்வையிட்டு பாடசாலை சுற்று மதில்களிலும் வெள்ளவாய்க்கால்களிலும் துவாரங்களை ஏற்படுத்தி வெள்ளம் வாய்க்காலுக்குள் பாய்ந்தோட நடவடிக்கை எடுத்தனர். இதனால் வெள்ளம் முற்றாக வெளியேற்றப்பட்டு, தற்போது மீளவும் குறித்த பாடசாலைகள் இயங்கத் தொடங்கி உள்ளன. (வ-8)

## தமிழக மீனவர்கள் இருவர் காயம் இலங்கை கடற்படை கைவரிசை

சென்னை, ஒக்.25

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தி அவர்களது மீன் வலைகளை சேதப்படுத்தினர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வேதாரண்யம் மாவட்டம், வானவன்மகாதேவி மீனவர் கிராமத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற சக்திகுமார், பாலமுருகன், உலகநாதன், சக்திவேல், காளியப்பன் உட்பட 8 மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அவர்கள் கடந்த 23 ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

கோடியக்கரைக்கு தென் கிழக்கே நேற்றுமுன்தினம் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் வேதாரண்யம் மீனவர்களை தாக்கிவிட்டு, படகில் இருந்த வலை, மீன், ஜீ.பி.எஸ் கருவி உள்ளிட்ட பொருள்களை கொள்ளையடித்து சென்றன என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவற்றின் மதிப்பு இந்திய ரூ.2 லட்சம் ஆகும். இலங்கை கடற் படையினர் தாக்கியதில் 2 மீனவர்கள் படுகாயம் அடைந்து வேதாரண்யம் அரசு மருத்து வமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)

## வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் நாடக விழா

வடமராட்சி, ஒக்.26

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் வழிகாட்டலில் பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை நடத்தும் நாடக விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய பர்வதவர்த்தனி மண்டபத்தில் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் துறை பேராசிரியர் நா.ஞானகுமாரனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி, யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் இயக்குநர் தே.தேவானந், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட சாலை அதிபர் திருமதி செ. சுந்தரேசன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

மாதனை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் குமரனை மணந்த குறமகள் என்னும் இசை நாடகமும், இன்பருட்டி கலைப் பறவைகள் மன்றத்தின் 'மாலைக்கு வாதாடிய மைந்தன்' என்னும் சிந்து நடைக்கூத்தும் , வடமராட்சி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் 'துயர் களைவோம்' என் னும் சிறுவர் நாடகமும், பருத்தித்துறை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 'தோற்றுப் போனோம்' ,வல்வெட் டித்துறை கலை, கலாசார இலக்கிய மன்றத்தின் 'இன்னும் என்ன சொல்ல' ஆகிய சமூக நாடகங்களும் மற்றும் மாதனை மாதர் கிராம அபிவிருத் திச் சங்கத்தின் சிந்து நடைக் கூ த்தும் நாடக விழாவில் இடம் பெறும்.

கலைஞர் கௌரவிப்புக்கான உரையை வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவரும், கலாசாரப் பேரவை உறுப்பினருமான ந.அனந்தராஜ் நிகழ்த்துவார். (வ-8)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா தம்பிராசா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா தம்பிராசா நேற்று (25/10/2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
ஞான வைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்

# ஊழியர் நியமனத்தின் போது யாழ்.பல்கலையில் முறைகேடு

## பொறுப்புக்கூற நிர்வாகம் தவறியுள்ளதாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்.26
யாழ். பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத் தப்பட்ட நேர்முகத்தேர்வுக்கு ஏற்கனவே பணிபுரியும் 17 பேரை அழைக்காது வெளியில் இருந்து புதியவர்களை அழைத்த முறைகேடான செயற்பாட்டுக்கு பல்கலைக் கழக பதிவாளர் பொறுப்புக் கூறத் தவறிவிட்டார்.

17 பேரும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாதது தொடர்பில் பல்கலைக்கழகப் பேரவைக்கு கடிதம் மூலமாக அறிவித்தும் பயன் கிடைக்கவில்லை என்று யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்கலைக்கழகத்தில் நிலவும் தொழிலாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, உயர் கல்வி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டவர்களுக்கு, சுயவிவர கோவையை தயாரிக்குமாறு வழங்கப்பட்ட பதிவாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய தாபனக்கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளரால் 08.07.2013 ஆம் திகதியிடப்பட்ட கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் தபால் மூலமாக அனுப்பப்பட்டுள்ளன. அந்தக் கடிதத்தில் 19.07. 2013 க்கு முன்னர் சுயவிவரக் கோவையைக் கையளிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

இதன்படி சுயவிவரத்தைக் கையளித்த 19 வரையான பணியாளர்கள் நேர்முகத் தேர்வுக்காகக் காத்திருந்தனர். ஆனால் உயர்கல்வி அமைச்சின் பெயர்ப்பட்டியலில் உள்ளவர்களில் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் தொலைபேசி மூல மாக அறிவிக்கப்பட்டு 10.07.2013 அன்று நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. நேர்முகத் தேர்வுக்கு பதிவாளர் வி.காண் டீபனே தலைமை தாங்கினார்.

ஜுலை 8 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரையான இரண்டு நாள்களுக்குள் சுயவிவரக் கோவையைக் கையளித்த பலர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படவில்லை. இந் நிலையில் ஜுலை10 ஆம் திகதி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட பெரும்பாலானோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு அவர்கள் கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்டோரே போராட்டத்தில் ஈடுபட்டனர். பெயர்ப்பட்டியலில் இடம் பெறாத சிலரும் இறுதி நேரத்தில் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுத்தெரிவு செய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல்கலைக் கழக பதிவாளர் வி.காண்டீபனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது பற்றி உயர்கல்வி அமைச்சர், துணைவேந்தர் உட்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளோம். தாபன விதிக் கோவையின்படி தகவல்களை தகுந்த அங்கீகாரம் இல்லாது ஏனையவர்களுக்குக் கூற முடியாது - என்றார். (ஐ-4)

# 1120 குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சு விநியோகம்

அச்சுவேலி, ஒக்.26
'திவிநெகும' வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள 1120 குடும்பங்களுக்கு நல்லின முட்டை இடும் பிறவுண் நிறக் கோழிக் குஞ்சுகள் வழங்கப்படவுள்ளன. குடும்பம் ஒன்றுக்கு தலா 10 வீதம் அவை வழங்கப்படவுள்ளன.

பண்ணைக் கோழிவளர்ப்புக்கு உரிய அடை கிடக்காமல் முட்டை ஈடும் பிறவுண் நிறக் கோழிக் குஞ்சுகள் அடுத்தமாதம் நடுப்பகுதியில் பயனாளிக் குடும்பங்களுக்கு பிரதேச செயலக ரீதியாக வழங்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட 1120 குடும்பங்களில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 137 குடும்பங்களுக்கும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 100 குடும்பங்களுக்கும் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 100 குடும்பங்களுக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 100 குடும்பங்களுக்கும் வேலணை பிரதேச செயலர் பிரிவில் 100 குடும்பங்களுக்கும் ஏனைய பிரதேச செயலர் பிரிவு ஒவ்வொன்றிலும் தலா 75 குடும்பங்களுக்கும் கோழிக் குஞ்சுகள் வழங்கப்படவுள்ளன.

கோழிக் குஞ்சுகள் வழங்குவதற்கான பயனாளிக் குடும்பங்களின் தெரிவு பிரதேச செயலக ரீதியாக மேற்கொள்ளப்பட்டு இறுதிப் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு வழங்குவதற்கான ஒருநாள் கோழிக் குஞ்சுகள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வளர்க்கப்பட்டு வருகின்றன. குஞ்சுகளை வளர்த்து பிரதேச செயலகங்கள் தோறும் விநியோகிப்பதற்கான ஒப்பந்த வேலையை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பொறுப்பேற்றுள்ளது.

கோழிக் குஞ்சுகள் ஒரு மாதத்துக்கு மேற்பட்ட வளர்ச்சியடைந்ததும் பயனாளிகளுக்கு வழங் குவதற்கான ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கோழிக் குஞ்சுகளின் தரம், வளர்ச்சி நிலை, நோய்த் தடை நிலை என்பன யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் உறுதி செய்யப்பட்டு பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. (வ-11)

# பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும்

வடமராட்சி, ஒக்.26
வாசிப்பு மாதத்தையொட்டி தும்பளை மேற்கு சனசமூக நிலையம் மாணவர்களிடையே நடத்திய போட்டிகளுக்கான பரிசளிப்பும், கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் இ.பாலேந்திரா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை வாசகரான செ.உமாபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

அதே நிலையத்தில் வாசிப்பு மாதத்தை ஒட்டிய புத்தகக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. (வ-8)

# கல்வியியல் கலைமுதுமாணிக்கு விண்ணப்பிக்கலாம்

அச்சுவேலி, ஒக்.26
ஆசிரியர் கல்வியியல் கலைமுதுமாணிப் பட்டப் படிப்புக்கு திறந்த பல்கலைக்கழகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் எதிர்வரும்9 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அந்தப் பகுதி பிராந்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் கல்வியியல் கலை முதுமாணிப் பட்டப்படிப்புக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் கல்விசார் உத்தியோகத்தராக அல்லது தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளராக அல்லது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராக அல்லது ஆசிரியர் மத்திய நிலையம், கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வி அமைச்சில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரியர் கல்வியுடன் சம்பந்தப்பட்ட அலுவலராகக் கடமை புரிபவர் அல்லது அரச பாடசாலை, அரசால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருப்பவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

கற்கைநெறி தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகள் மூலம் நடைபெறவுள்ளது. (வ-11)

## வாசிப்பு மாதத்தையொட்டி நடைபெற்ற நிகழ்வு



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை நுணாவில் பொது நூலக மண்டபத்தில் "நூலகங்களின் ஊடாக ஆற்றல்மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்" என்னும் கருத்தரங்கு இடம்பெற்றது. சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாஸன், பொது சுகாதார பரிசோதகர் பி.தளிர்ராஜ், நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை அதிபர் திருமதி த.ஜீவகுமார் குடும்ப நல சேவையாளர் திருமதி பீ. இராஜரட்ணம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (வ-9)

*வடக்கு கல்வித் திணைக்களத்தால்*

# தீ பாதுகாப்புத் தொடர்பாக ஆசிரியருக்கு செயலமர்வு




பருத்தித்துறை, ஒக்.26
வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் ஜீ.ஐ. இசற் / ஈ.எஸ்.சி செயற்றிட்டத்தின் கீழ் வடமாகாணத்திலுள்ள முன்னோடி பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான முதலுதவி மற்றும் தீப் பாதுகாப்பு செயலமர்வு கடந்த 21,22 மற்றும் 23 ஆம் திகதிகளில் கோப்பாய் சங்கமத்தில் இடம்பெற்றது.

இடர் பாதுகாப்பு கல்வி இணைப்பாளர் பா.லோகேஸ்வரன் தலைமையில் இச் செயலமர்வு நடைபெற்றது.

முதலுதவி தொடர்பாக சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட ஆணையாளர் எஸ். செல்வரஞ்சன், உதவி ஆணையாளர் எஸ். ஈழநேசன் ஆகியோரும் தீ பாதுகாப்பு தொடர்பில் யாழ். மாநகர சபையின் தீ பாது காப்பு உத்தியோகத்தர்களான டெஸ்மன், திருச்செல்வம் ஆகியோரும் விளக்கமளித் தனர். இதில் வடமாகாணத் தைச் சேர்ந்த 25 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (வ-422)

# வரணியில் திண்மக் கழிவுகள் அகற்றல்



தென்மராட்சி, ஒக்.26
சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தையொட்டி வரணிப் பிரதேசத்தில் திண்மக் கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய திண்மப் பொருள்களான கண்ணாடி, பிளாஸ்ரிக், பழைய இரும்பு, தகரங்கள் உள்ளிட்ட பொருள் களை உரப்பைகளில் இட்டு பருத்தித்துறை- கொடிகாமம் வீதியின் ஓரங்களில் வைக்கு மாறு அப்பகுதிப் பொதுமக்களுக்கு வரணி உப அலுவ லகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது (வ-9)

# வெள்ளக் காடாக மாறி நிற்கும் 750 இலக்க தனியார் பஸ் தரிப்பிடம்

யாழ்ப்பாணம், ஒக்.26
யாழ்.மத்திய தனியார் பஸ் தரிப்பிடத்தில் மின்சார நிலைய வீதிக்கு அண் மையில் 750 வழி பஸ் சேவைகள் தரிப்பிடப் பகுதி சேதடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் அவ்விடத்தில் நின்று பஸ்களில் ஏற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் அவ்விடத்தை புனரமைத்துத் தருமாறு வடமராட்சி தனியார் பஸ் சேவைச் சங்கம் யாழ். மாநகர சபைக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

மழை காலத்தில் குறிப்பிட்ட பகுதியில் அதிக மாக வெள்ளம் தேங்கி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் குறித்த தரிப்பிடத்தில் பஸ்களை சேவைக்கென நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பஸ்களில் ஏறும் பயணிகள் தரிப்பிடப் பகுதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் கால்தடுக்கி விழும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே பயணிகள் நலன் கருதி மழை காலத்துக்கு முன்னதாகத் தரிப்பிடப் பகுதியை சீரமைத்துத் தருமாறு குறித்த சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (வ-14)



*கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கான*

# ஆள் சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கு குறைந்தளவானோரே விண்ணப்பிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.26
கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் கோரப்பட்டுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களுக்கு மிகக் குறைந்தளவானோரே விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் , வட பகுதியில் நிலவும் ஆயிரத்து 200 வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இந்த மாதம் 4 ஆம் திகதி வர்த்தகமானி அறிவித்தலின் ஊடாகக் கோரப்பட்டது. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் தரம் III இற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கல்வித் தகைமையாக கணிதம் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருப்பதுடன் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு பாடத்திலாவது சித்தியடைந்திருக்க வேண்டும்.

எழுத்து மூல போட்டிப் பரீட்சையூடாகவே ஆள் சேர்ப்பு இடம்பெறவுள்ளது. எழுத்துப் பரீட்சைக்குரிய பாடப்பரப்புக்கள், பொது உளச்சார்பு மற்றும் விவசாயம் தொடர்பான பொதுவான விடயங்களை உள்ளடக்கியதாக அமையும். எதிர்வரும் 28 ஆம் திகதிக்குள் விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்க வேண்டும். இறுதித் தினத்தன்று விண்ணப்பதாரர்களின் வயது 18 இற்கு குறையாமலும் , 30 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## பணம் கொடுத்து காரியம் சாதித்ததா இராணுவம்?

### விளக்கமளிக்க வேண்டும் வி.கே.சிங்



ஸ்ரீநகர், ஒக்.26
ஜம்மு-காஷ்மீர் மாநில அமைச்சர்களுக்கு இந்திய இராணுவம் பணம் வழங்கியது என்று கருத்துத் தெரிவித்தமை தொடர்பாக விளக்கமளிக்குமாறு முன்னாள் இந்திய இராணுவத் தளபதி வி.கே.சிங்குக்கு ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு அழைப்பாணை அனுப்பியுள்ளது.
அந்தக் கருத்துத் தொடர்பாக எதிர்வரும் 20 நாள்களுக்குள் சட்ட சபையில் நேரில் முன்னிலையாகி வி.கே.சிங் விளக்கமளிக்க வேண்டும் என்று அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
"எனது பதவிக் காலத்தில் ஜம்மு காஷ்மீரில் இராணுவம் சில பணிகளை மேற்கொள்வதற்காக மாநில அமைச்சர்களுக்கு பணம் கொடுத்தது. 2010 ஆம் ஆண்டு மாநில அமைச்சர் குலாம் ஹசன் மிருக்கு மட்டும் ஒரு கோடியே 19 இலட்ச ரூபா வழங்கப்பட்டது" என்று வி.கே.சிங் கருத்துத் தெரிவித்திருந்தார்.
எனினும் வி.கே.சிங்கின் அந்தக் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்திருந்த குலாம் ஹசன் மிர், "உமர் அப்துல்லாவின் அரசை சீர்குலைக்கும் நோக்கத்துடன் வி.கே.சிங் ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றார்" என்று கூறியிருந்தார்.
இந்தநிலையிலேயே வி.கே. சிங் தெரிவித்திருந்த கருத்துகள் தொடர்பாக அவர் சட்டசபையில் முன்னிலையாகி விளக்கமளிக்க வேண்டும் என்று மாநில அரசால் கோரப்பட்டுள்ளார். (ற)

## எல்லையில் அத்துமீறல்



ஜம்முவில் அக்நூர் நிலை அருகே கனாசாக் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் துப்பாக்கி சூடு நடத்தியதில் பெண் ஒருவர் காயம் அடைந்தார். அவரை இந்திய இராணுவத்தினர் மருத்துவமனைக்கு தூக்கி செல்கின்றனர்.

ஜம்மு, ஒக்.26
இந்திய - பாகிஸ்தான் சர்வதேச எல்லையில் பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்று முன்தினம் அத்துமீறித் தாக்குதல் நடத்தினர் என்று இந்திய இராணுவம் கூறியுள்ளது.
ஜம்மு மாவட்டத்தின் நிக்கி தவி மற்றும் சம்பா மாவட்டத்தின் ராம்கர் பகுதிகளிலேயே ரொக்கெட் குண்டுகள் வீசியும், துப்பாக்கிச் சூடு நடத்தியும் பாகிஸ்தான் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி னார்கள் என்று இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
குறித்த தாக்குதலில் இந்தியத் தரப்பில் உயிரிழப்புகள் ஏற்படவில்லை. எனினும் குழந்தைகள் உட்பட 8 பொதுமக்கள் காயங்களுக்குள்ளாகியுள்ளனர் என்று அவர்கள் தெரிவித்தனர். பாகிஸ்தானின் தாக்குதலுக்கு இந்தியத் தரப்பில் தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ற)

## அமைச்சராக இல்லாதிருப்பது மகிழ்ச்சி

### சரத் பவார்



புதுடில்லி, ஒக்.26
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று ஏற்கனவே அறிவித்துள்ள மத்திய அமைச்சர் சரத்பவார் அடுத்து நாட்டை ஆளும் அரசில் அங்கம் வகிக்க போவதில்லை என தற்போது தெரிவித்துள்ளார்.
"அமைச்சராக இல்லாமல் இருப்பதே மகிழ்ச்சியானதாக இருக்கின்றது. அதே சமயம் தேசியவாத காங்கிரஸ் தொடர்ந்து காங்கிரசின் அங்கமாக இருக்கும். பிரதமர் மன்மோகன் சிங்கின் அரசில் பணியாற்றுவதற்கு மகிழ்ச்சியாக உள்ளேன்" என்றும் தெரிவித்துள்ளார் அவர்.
அதேவேளை, தேர்தலுக்கு பின்னர் ராகுல் பிரதமரானால் அவரது அரசில் பணியாற்ற விரும்பவில்லையா? என கேட்ட கேள்விக்கு, "தெரியவில்லை" என்று அவர் பதிலளித்தார். (ற)

## நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு:

# மறைப்பதற்கு எதுவுமில்லை

### விசாரணைக்குத் தயார் மன்மோகன் தெரிவிப்பு



புதுடில்லி, ஒக். 26
நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. அதுகுறித்த வழக்கை எதிர்கொள்ளத் தயார் என்று தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.
ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு மேற்கொண்டிருந்த பயணத்தை நிறைவு செய்து இந்தியா திரும்பும் சமயம் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது,
"நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டில் ஊழல் இடம்பெற்றது என்று கூறப்படுவது தொடர்பில் சி.பி.ஐ. விசாரணையை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கின்றேன். நான் சட்டத்துக்கு மேலானவன் அல்ல. அந்த விடயத்தில் நான் எதையும் மறைக்கவும் இல்லை. ஆனால் இந்த விடயம் தொடர்பாக நடத்தப்படும் அநாகரிக அரசியலுக்காக நான் வருத்தப்படுகின்றேன்" என்று தெரிவித்தார்.
நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டு வழக்கில், பிரபல தொழிலதிபர் பிர்லா குமார்மங்கலம் மற்றும் நிலக்கரித்துறை முன்னாள் செயலாளர் பரேக் ஆகியோர் மீது சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்துள்ள நிலையில், அந்த வழக்குத் தொடர்பாக பிரதமரும் விசாரிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரி வருகின்றன. (ற)

# தங்கத்தைத் தேடவில்லை ஆயுதமே தேடுகின்றோம்

### இந்திய கலாசாரத்துறை திடீர்க் குத்துக்கரணம்

பாட்னா, ஒக்.26
"உத்தரப் பிரதேசத்தில் உள்ள ராஜா ராவ் ராம் பக்ஷ் சிங் கோட்டைக்குள் நாங்கள் தங்கம் தேடித் தோண்டவில்லை. சுதந்திரப் போராட்டத்தின் போது பயன்படுத்தப்பட்ட பழைய கால ஆயுதங்களையே தேடுகின்றோம்" என்று திடீர்க் குத்துக்கரணம் அடித்துள்ளது இந்திய மத்திய கலாசாரத் துறை.
உத்தர பிரதேசத்தில் உள்ள ராஜா ராவ் ராம் பக்ஷ் சிங் கோட்டைக்குள் ஆயிரம் தொன் தங்கம் இருக்கின்றது என்று தனது 'ஞானத்தால்' கண்டுபிடித்துக் கூறியிருந்தார் ஷோபான் சர்க்கார் என்ற சாமியார். அதையடுத்து களத்தில் இறங்கியது இந்திய தொல்லியற்துறை.
மத்திய அரசின் இந்த நடவடிக்கை பல விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தன. பல்வேறு கட்சிகள் அதைக் கடுமையாகக் கண்டுபிடித்திருந்தன.
இந்தநிலையில் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சந்திரேஷ் குமாரி கடோச்,
"சாமியார் சொன்னதால் ராஜா ராவ்ராம் பக்ஷ் சிங் கோட்டைக்குள் தொல்லியற் துறையினர் அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருவதாக சிலர் குற்றஞ் சுமத்துகின்றனர். அதில் உண்மையில்லை. அந்த இடத்தில் இந்திய புவியியல் ஆராய்ச்சித் துறை ஆய்வு செய்து அளித்த அறிக்கையின் அடிப்படையில்தான் அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
அந்தப் பகுதியை ஆட்சி செய்த மன்னர் ராஜா ராவ் ராம் பக்ஷ் சிங் ஆங்கிலேயருக்கு எதிராக 1857ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இந்திய சுதந்திரப் போரின்போது அவர் பயன்படுத்திய ஆயுதங்களை தனது கோட்டைக்குள் புதைத்து வைத்திருந்திருக்கலாம் என நம்புகிறோம்.
அதனால்தான் அங்கு அகழ்வுப் பணியை முடுக்கி விட்டுள்ளோம். நாடு முழுவதும் 148 இடங்களில் அந்தப் பணி நடைபெறுகிறது. இதனால், உன்னாவ் மாவட்டத்தில் நடைபெறும் அகழ்வுப் பணி குறித்து யார் எவ்வாறு நினைத்துக் கொண்டாலும் அதுபற்றி எங்களுக்கு கவலை இல்லை" என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஆந்திராவில் கனமழை 10 பேர் சாவு

ஹைதராபாத், ஒக்.26
ஆந்திராவில் தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.
கடலோர ஆந்திரா மற்றும் ராயலசீமை பகுதிகளில் கடந்த 3 நாள்களாக கனமழை பெய்து வருகின்றது. அதன் காரணமாக 10 பேர் உயிரிழந்துள்ளதுடன் 300க்கும் அதிகமான வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன என்று கூறப்படுகின்றது.
வீடுகளை இழந்த சுமார் 6 ஆயிரம் பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.
கனமழை காரணமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. (ற)

## செயற்கைக் கோள்களால் கண்காணிக்கிறது சீனா

புதுடில்லி, ஒக்.26
நவீன செயற்கைக் கோள்களின் உதவியுடன் இந்தியக் கடல் எல்லைகளை சீனா கண்காணித்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சரின் செயலாளர் அவினாஷ் சந்தர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.
சீனாவின் இந்த நடவடிக்கை காரணமாக இந்தியா 80 முதல் 100 வரையான மிகவும் அதிநவீன செயற்கைகோள்களை உருவாக்கி கடல் எல்லையை கண்காணிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## டார்ஜிலிங்கை தனியாகப் பிரிக்க முடியாது

### மம்தா திட்டவட்டம்

புதுடில்லி, ஒக்.26
மேற்கு வங்க மாநிலத்தில் இருந்து டார்ஜிலிங்கைத் தனியாகப் பிரிக்க முடியாது என்று அந்த மாநில முதல்வர் மம்தா பானர்ஜி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.
ஆந்திர மாநிலத்தில் இருந்து தெலுங்கானா தனி மாநிலமாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்கு வங்க மாநிலத்தில் இருந்து டார்ஜிலிங் பகுதியை தனி மாநிலமாகப் பிரிக்கக் கோரி போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.
இந்தநிலையிலேயே டார்ஜிலிங்கை ஒருபோதும் தனியாகப் பிரிக்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் அந்த மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி.

# கட்சியை முன்னிலைப்படுத்தியே தேர்தலில் பரப்புரை

### தனிநபரை முன்னிலைப்படுத்தியல்ல என்கிறது காங்கிரஸ்

புதுடில்லி, ஒக்.26
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியை முன்னிலைப்படுத்தியே காங்கிரஸ் கட்சி பரப்புரைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துள்ளார் மத்திய ஊடக மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ்.
இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,
"பாரதிய ஜனதாக் கட்சியைப் போன்று நரேந்திர மோடி போன்ற தனிநபரை முன்னிறுத்தி நாடாளுமன்றத் தேர்தலை காங்கிரஸ் எதிர்கொள்ளாது. ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், கடந்த கால சாதனைகள், எதிர்காலத் திட்டங்கள் ஆகியவற்றை முன்வைத்து காங்கிரஸ் தேர்தலை எதிர்கொள்ளும். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கும், பாரதிய ஜனதா கட்சிக்கும் இடையே போட்டியில்லை. காங்கிரஸ் கட்சிக்கும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கும்தான் போட்டி. மதத்தின் அடிப்படையில் மக்களைப் பிளவுப்படுத்தி லாபம் பெற பாரதிய ஜனதா கட்சி



முயற்சி செய்கின்றது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# பிள்ளையைக் கிள்ளி விட்டு தொட்டிலை ஆட்டுகிறது பாக்.

## அந்த நாட்டின் ஒப்புதலோடே 'டிரோன்' தாக்குதல்கள் 'த வொஷிங்டன் போஸ்ட்' நாளிதழ் தகவல்

இஸ்லாமாபாத், ஒக்.26

பாகிஸ்தானில் நடைபெற்று வரும் ஆளில்லா (டிரோன்) விமானத் தாக்குதல்கள் குறித்து அமெரிக்கா மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், அந்தத் தாக்குதல்கள் பாகிஸ்தானின் ஒப்புதலோடே நடத்தப்படுகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'த வொஷிங்டன் போஸ்ட்' நாளிதழ் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

அந்தப் பத்திரிகை வெளியிட்டுள்ள தகவல் குறிப்பில், "பாகிஸ்தான் அரசைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகளுக்கு தாக்குதல் நடைபெறும் இடங்கள் மற்றும் உயிரிழப்புகள் குறித்த தகவல்கள் அமெரிக்காவால் உடனுக்குடன் அனுப்பப்பட்டுள்ளன. 2007ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை பாகிஸ்தானில் நிகழ்த்தப்பட்ட ஆளில்லா விமான தாக்குதல் குறித்த வரைபடங்கள் மற்றும் புகைப்படங்கள் பாகிஸ்தானுக்கு அனுப்பட்ட ஆவணங்களில் உள்ளன. அந்த ஆவணங்கள் பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு வழங்குவதற்காக என்றே அமெரிக்க உளவுப் பிரிவால் தயாரிக்கப்பட்டவை. சுமார் 65 ஆளில்லா விமானத் தாக்குதல் சம்பவங்கள் குறித்த ஆவணங்கள் அதில் இடம் பெற்'றுள்ளன. இந்த நிலையில் அமெரிக்கத் தாக்குதல்கள் தொடர்பில் தமக்கு எதுவும் தொடர்பும் இல்லாதது போன்று கருத்துத் தெரிவித்து வருகின்றது பாகிஸ்தான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் குறித்த ஆவணங்கள் தொடர்பாக பாகிஸ்தான் அதிகாரிகளும், அமெரிக்க உளவுப் பிரிவினரும் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

அதே வேளை, அமெரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் செரீப், "ஆளில்லா விமானத் தாக்குதல்களை நிறுத்த வேண்டும்" என்று அமெரிக்க ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார். (ற)

## உள்நாட்டுப் போரில் சிரிய அரசு ஆதிக்கம்



டமாஸ்கஸ், ஒக்.26

கிளர்ச்சியாளர்கள் வசமிருந்த சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ்ஸின் புறநகர் பகுதியைத் தாம் கைப்பற்றியுள்ளதாக சிரிய இராணுவம் அறிவித்துள்ளது.

சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத்தால் வழிநடத்தப்படும் அரச படையினர் லெபனான், ஈராக் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஷைட்டி போராளிகளின் உதவியுடன் அண்மைக் காலமாக உள்நாட்டுப் போரில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

தற்போது டமாஸ்கஸ்ஸின் கிழக்கேயும் தெற்கேயும் ஆதிக்கம் செலுத்தி வரும் கிளர்ச்சிப் படையினருக்கான ஆயுதங்கள் மற்றும் உணவு ஆகியவற்றையும் தடை செய்துள்ளனர்.

இந்தநிலையில் டமஸ்கஸ்ஸுக்குத் தென் கிழக்கே விமான நிலையத்துக்குச் செல்லும் பிரதான சாலை சிரிய இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்று சிரிய அரச தொலைக் காட்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டரை வருடங்களாக நடைபெற்று வரும் சிரிய உள்நாட்டுப் போரில் தலைநகர் டமாஸ்கஸில் எந்த ஒரு பிரிவுமே முழுமையாக ஆதிக்கம் செலுத்த இயலாத சூழ்நிலையே இருந்து வருகின்றது. (ற)


## வருங்கால கணவனுடன் தொலைபேசி சிறுமி எரித்து கொலை

ஷாபாப், ஒக்.26

நிச்சயிக்கப்பட்ட மணமகனுடன் தொலைபேசியில் உரையாடியமைக்காக 15 வயதுச் சிறுமி அவரது தந்தையால் எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் ஏமனில் நடந்துள்ளது.

ஏமனிலுள்ள ஒரு சமூகத்தினர் ஒரு வித்தியாசமான தொரு நடைமுறையைப் பின்பற்றி வருகிறார்கள். திருமணம் ஆகாத ஆணும், பெண்ணும் ஒரு போதும் இரகசியமாக பேசவோ, பழகவோ கூடாது என்பது அந்த நடைமுறை.

இந்நிலையில் அங்குள்ள ஷாபாப் கிராமத்தில் 15 வயது சிறுமியொருத்திக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. ஆனால் திருமணம் நடக்கும் முன்பே அவள் தனது வருங்கால கணவருடன் தொலைபேசியில் உரையாடுவதை தந்தை பார்த்து விட்டார். அதனால் மகள் என்று கூட பார்க்காமல் அவளை எரித்துக்கொன்று விட்டார். தற்போது தந்தையைக் கைது செய்துள்ள பொலிஸார் அவர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர். (ற)



வடக்கு மெக்ஸிகோவில் 'சொக்லெட்' தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 40க்கும் அதிகமானவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். தொழிற்சாலையில் இருந்த கொதிகலன் ஒன்று அதிக அழுத்ததால் வெடித்ததை அடுத்தே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்களில் 11 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ற)

## இறந்த பின்னரும் கூட சம்பாதிக்கும் ஜாக்சன்

நியூயோர்க், ஒக்.26

இறந்த பின்னரும் அதிகம் சம்பாதிக்கும் புகழ்பெற்ற நட்சத்திரங்கள் பட்டியலில் மைக்கல் ஜாக்சன் முதலிடம் பிடித்துள்ளார்.



ஜாக்சனின் பாடல் தொகுப்புகள், பதிப்புரிமைகள் உள்ளிட்டவை மூலம் கடந்தாண்டு மட்டும் ஆயிரம் கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

உலகப் புகழ்பெற்ற பொப் பாடகரும், ஜாக்சனின் மாமனாருமான எல்விஸ் ப்ரெஸ்லி 2ஆவது இடத்தில் உள்ளார். பிரபல நடிகைகளான எலிசபெத் டெய்லர் 4ஆவது இடத்திலும், மர்லின் மன்றோ 6ஆவது இடத்திலும் உள்ளனர். விஞ்ஞானி ஐன்ஸ்டீன் 8ஆவது இடத்தில் உள்ளார். போர்ப்ஸ் பத்திரிகை இப்பட்டியலை தயாரித்துள்ளது. (ற)

## பொம்மைத் துப்பாக்கியால் உயிரிழந்தான் சிறுவன்

### அமெரிக்காவில் பரிதாபம்

நியூயோர்க், ஒக்.26

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் பொம்மைத் துப்பாக்கியொன்றை வைத்து விளையாடிக் கொண்டிருந்த 13 வயதுச் சிறுவன் பொலிஸாரால் தவறுதலாகச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான். இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சிறுவன் வைத்திருந்தது உண்மையான துப்பாக்கி என்று கருதியே பொலிஸார் சிறுவன் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். அண்மைக் காலமாக அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் துப்பாக்கிச் சூட்டை நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர் பணியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளனர். (ற)

## ஜனநாயக மாற்றம் மியான்மரில் தேவை

### ஆங் சான் சூகி

லண்டன், ஒக்.26

மியான்மரின் அரசமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று அந்நாட்டின் ஜனநாயகப் போராளியான ஆங் சான் சூகி வலியுறுத்தியுள்ளார்.

பிரிட்டன் சென்றுள்ள சூகி அங்கு பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அந்தச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

"தற்போது உள்ள அரசியல் சாசனம் நீடித்த ஜனநாயகத்துக்கு வழி வகுக்கவில்லை. மியான்மரின் ஜனாதிபதித் தேர்தலுக்குத் என்னால் போட்டியிட முடியாத நிலை காணப்படுகின்றது. அந்த அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும்." என்று தெரிவித்துள்ளார். (ற)

## தங்கத்தில் வருகின்றது கழிவறைக் காகிதம்!

மெல்போர்ன், ஒக்.26

22 கரட் தங்கத்தால் ஆன விலை உயர்ந்த கழிவறைக்காகிதத்தைத் தயாரித்து பிரமிக்க வைத்துள்ளது ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்று.



'ரொய்லெட் பேப்பர் மேன்' என்ற அந்த நிறுவனம் அந்தக் கழிவறைக் காகிதத்தைத் தயாரித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அந்த நிறுவனம், "இது 100 சதவீதம் பயன்படுத்தக்கூடியது" என்று தெரிவித்துள்ளது.

டுபாயில் உள்ள நிறுவனம் கழிவறை இருக்கையை தங்கத்தினால் தயாரித்திருப்பதைப் பார்த்தே தமக்கு, தங்கக் கழிவறைக் காகிதத்தைத் தயாரிக்கும் எண்ணம் உருவானது என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (ற)

## இரசாயன ஆயுத தயாரிப்பில் கில்லாடிகளாம் தலிபான்கள்

இஸ்லாமாபாத், ஒக்.26

பாகிஸ்தானில் உள்ள தலிபான் அமைப்பினர் இரசாயன ஆயுதங்களைத் தயாரிப்பதிலும், அவற்றைப் பயன்படுத்துவதிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

**சாதாரண உரங்களின் கலவையைக் கொண்டு இரசாயன ஆயுதங்கள் தயாரித்திருப்பது இந்தத் துறையில் அவர்களின் தேர்ச்சியைக் காட்டுகின்றது**

அண்மையில் தலிபான்கள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் படுகாயம் அடைந்தவர்களின் காயங்கள் குணமாகவில்லை. அவர்கள் எந்த மருந்தை உட்கொண்டும் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. அதையடுத்து மருத்துவர்கள் அதுகுறித்து ஆய்வுகளை மேற்கொண்டனர்.

அந்த ஆய்வுகளின் முடிவிலேயே தலிபான்களின் இரசாயன ஆயுத தேர்ச்சி குறித்துக் கண்டுபிடிக்கப்பட்டது.

"காயங்கள் குணமாகாததுக்கு இரசாயனங்களே காரணம். தலிபான்கள் சாதாரண உரங்களைக் கொண்டு இரசாயன ஆயுதங்களைத் தயாரித்துள்ளனர். சாதாரண உரங்களின் கலவையைக் கொண்டு இரசாயன ஆயுதங்கள் தயாரித்திருப்பது இந்தத்துறையில் அவர்களின் தேர்ச்சியைக் காட்டுகின்றது" என்று மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ற)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

டாஸ் கண்ட் (Dash Hund)
நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 991 6396 (33299) (6.49)

**காணி விற்பனைக்கு**

ஐந்து சந்தி, யாழ்ப்பாணத்தில் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 918 2920 (33256) (7.6.3)

**மணமக்கள் தேவை**

★ 1983இல் பிறந்த 4இல் சூரியனும், செவ்வாயும் 15¼பாவம் உடைய அமெரிக்கா பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை.
★ 1988இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 15 பாவம் உடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு கனடாவில் அல்லது உள்நாட்டில் பட்டதாரி மணமகன் தேவை.
★ 1989இல் பிறந்த 8இல் செவ்வாய் 53 பாவம் உடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு உள்நாட்டிலோ, கனடா விலோ பட்டதாரி மணமகன் தேவை.
★ 1987இல் பிறந்த 8இல் செவ்வாய் 26¼ பாவம் உடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகளுக்கு எக்கவுண்டன், இஞ்சினியர் தேவை.
★ 1980இல் பிறந்த 2இல் செவ்வாய், 28½பாவம் உடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு படித்த அழகான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.
★ 1980இல் பிறந்த 4இல் செவ்வாய் 27½ பாவம் உடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகன் வந்துள்ளார். படித்த அழகான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.
★ 1978இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 30½ பாவம் உடைய Ph.D விரிவுரையாளருக்கு டாக்டர், எஞ்சினியர், Bsc மணமகள் தேவை.

தொடர்பு : பாலகண்ணன் திருமண சேவை
இல. 435/3, கோயில் வீதி, நல்லூர்.
T.P : 077 607 0862
(33302) (7.6.3)

**மணமகள் தேவை**

23 வயதுடைய தற்காலிகமாக லண்டனில் படித்துக் கொண்டிருக்கும் மணமகனுக்கு உள்ளூரில் தகுந்த மணமகளை தேடுகின்றோம்.
தொடர்பு: 077 863 1841 (33287) (7.6.3)

**விற்பனைக்கு**

அம்மி, ஆட்டுக்கல், கல்லுரல், அம்மி தனிக் குழவியும் விற்கப்படும்.
(ஏற்றுக்கூலி இலவசம்)
தொடர்பு: 077 693 4120 (29679) (7.6.3)

**விற்பனைக்கு**

DIMO TATA, ACE BATTA FULL BODY, TRUCK விற்பனைக்குண்டு
தொடர்பு:071 444 3925
021 222 7389

**வீடு வாடகைக்கு**

பலாலி வீதி, கந்தர்மடம் சந்திக்கும், இலுப்பையடிச் சந்திக்கும் இடையில் 136ஆம் இலக்கத்தில் ஐந்து பரப்புக் காணியில் அமைந்த 7 அறைகள், 2 சிறிய விறாந்தைகள், சமையலறை, வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (33281) (7.6.3)
தொடர்பு: 071 847 5531, 077 706 9696

**வீடு வாடகைக்கு**

ஆனந்தன் வடலி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வசதியான வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 957 7154

**வீடு வாடகைக்கு**

A9 வீதி, சாவகச்சேரியில் ஆயுள்வேத வைத்திய சாலை அருகில் 5 அறைகள், 3 ஹோல்கள், சமையலறை, மலசலகூடம், நல்ல தண்ணீர் வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: மா.செல்வரத்தினம் "அன்னை இல்லம்"
[illegible], கோண்டாவில் வடக்கு. (31849) (7.6.3)
T.P : 021 490 6364


# உலகில் பாடசாலை செல்லாத 770 இலட்சம் சிறுவர்கள்

கொழும்பு, ஒக்.26
உலகம் முழுவதிலும் சுமார் 77 மில்லியன் சிறுவர்கள் பாடசாலை செல்வதில்லை. மேலும் 66 மில்லியன் சிறுவர்கள் பசியுடனேயே பாடசாலை செல்கின்றனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

நேபாள நாட்டின் தலைநகரான காட்மண்டுவில் இடம்பெற்ற கழிவுகளை அகற்றுவது தொடர்பான ஐந்தாவது தெற்காசிய நாடுகளின் மாநாடொன்றின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் அங்கு தெரிவித்ததாவது:-
பாதுகாப்பு மற்றும் தனியான கழிப்பிட வசதிகள் இல்லாததால் பெருமளவு சிறுமிகள் பாடசாலை செல்லாத நிலையும் காணப்படுகின்றது.

இதேவேளை ஒரு மில்லியன் சிறுவர்கள் உட்பட 2.5 மில்லியன் மக்கள் அடிப்படைக் கழிப்பறை வசதிகள் இல்லாத நிலையில் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் இதன் காரணமாக உலகில் ஒவ்வொரு விநாடிக்கும் குழந்தையொன்று இறந்து போகும் அவலமும் காணப்படுகின்றது.

இந்தநிலையில் இலங்கை முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் கழிப்பிட வசதி மற்றும் குடிதண்ணீர் வசதிகளை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டுதலின் பிரகாரம் தொடர்புடைய அமைச்சுக்கள் இதற்கான நிதிப் பங்களிப்பை வழங்கவுள்ளன- என்றார். (க)

> ஒரு மில்லியன் சிறுவர்கள் உட்பட 2.5 மில்லியன் மக்கள் அடிப்படைக் கழிப்பறை வசதிகள் இல்லாத நிலையில் பெரும் இடர்களை எதிர்கொண்டு வரு கின்றனர்.

## ஹலால் எதிர்ப்பால் ஏற்றுமதியில் சரிவு

கொழும்பு. ஒக்.26
இன ஒற்றுமைக்கு எதிரான சில இயக்கங்களின் ஹலால் எதிர்ப்புத் திட்டங்கள் காரணமாக மேற்குலக, மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஏற்றுமதிகள் சரிந்துவிட்டன என்று சர்வமத ஒற்றுமை அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் வியாழக்கிழமை நடைபெற்ற அமைப்பின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைப்பின் தலைவர் களகம தம்மரன்ஷி தேரரே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சில அமைப்புக்களின் ஹலால் எதிர்ப்புத் திட்டங்களால் மேற்குலக மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் இலங்கையின் பௌத்த பிக்குமாருக்கு விசா பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. மற்ற மதங்களை குறை கூறும் இவ்வாறான இயக்கங்கள் மூலம் வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் பாதிக்கப்படுவதோடு எமது நாட்டுக்கு வெளிநாட்டு அந்நியச் செலாவணி கூட கிடைக்காமல் போக வாய்ப்புண்டு"- என்றார் தேரர். (ஓ-10)


**காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு**

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குழி விஸ்தீரணம் கொண்ட 5 அறைகள் உள்ள வீட் டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 711 1400 (33288) (7.6.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/சென் ஜோன்ஸ் கல்லூரியில்
2013-தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
165 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து
பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை
தேடித் தந்த மகேந்திரராஜா பாமினி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
யதுமிலன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு
பல்கலையும் கற்று பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.
மேலும் இப்புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள
உறுதுணையாக இருந்த அதிபர், உபஅதிபர்,
தலைமை ஆசிரியர், வகுப்பாசிரியர், ஆசிரியர்களையும்
மற்றும் பாடசாலை சமூகத்தையும் மனதார
பாராட்டி வாழ்த்துகின்றோம்.



Best Wishes!
இருபாலை கிழக்கு, கோப்பாய்.
அப்பா, அம்மா, தங்கை, தம்பி.
(33280) (7.6.3)

**சேவை நயப்பு**

ஆசிரியர் சேவையில்: 03.01.1990
கடமையில் ஓய்வு : 26.10.2013
திருமதி
**சுந்தரவல்லி ஆனந்தராஜா**
(பயிற்றப்பட்ட சங்கீத ஆசிரியை)



Congratulations

**சேவை விவரம்**
முதல் நியமனம் யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்
03.01.1990 - 13.04.1992
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
14.04.1992 - 31.12.1993
யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்
01.01.1994 - 31.01.1994
யா/ மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம்
01.02.1994 - 26.10.2013

இன்னிசைக் குயிலாய் தினம் இசை பரப்பி
பண்ணிசைப் பயிர் வளர பயிற்றுவித்த நங்கையே!
ஈர்பத்து ஆண்டுகள் இசை மழை பொழிந்து
இன்பத்தேன் பாய்ந்தோட வைத்த உமக்கு
இனிய அகவை அறுபதாம் இன்று
இந் நன்னாளில் சீரொடு சிறப்புப்பெற்று
பாரெங்கும் உம் பண்ணிசை பரவ
பன்றித்தலைச்சியாள் பாதம் பணிந்து
வாழ்த்துகின்றோம் வாழிய பல்லாண்டு வாழிய...!

பாடசாலைச் சமூகம்
யா/மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம்
(29677)(45.6)

**பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் (வ-து)**
**கேள்வி கோரல்**

சங்கத்திலுள்ள தைபடல் இயந்திரங்களின் விற்பனைக்கான கேள்வி கோரப்படுகின்றது. கொள்ளவனவு செய்ய விரும்புவோர் சங்க தலைமை அலுவலகத்தில் விவரங்களை பார்வையிட்டு உரிய படிவத்தை ரூபா 15/= செலுத்தி பெற்று பூர்த்தி செய்து பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் என்ற முகவரியில் 07.11.2013 ஆம் திகதிக்கு இடையில் ஒப்படைக்கவும்.

பொதுமுகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
பண்டத்தரிப்பு.
(சி/13198)(6.45)



# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts upto **08.11.2013.**

**FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE**
**DISTANCE LEARNING UNIT-BBM ONLINE EXTERNAL DEGREE PROGRAMME**

**Tutor-Mentor (on contract)**

**Qualifications:**
(i) A degree from a recognized University in Management Studies or Commerce.
(ii) Should have good command in English and Tamil
(iii) Should have computer application skills in MS Office, Learning Management System, Internet & e-mail and typing skill in English and Tamil.

**Age** : Below 30 years
Selection by **Interview**

**FACULTY OF MEDICINE**
**UNIT OF ALLIED HEALTH SCIENCES**

1. **Visiting Lecturer** in **Chemistry** to conduct lectures in Pharmaceutical Chemistry
2. **Visiting Demonstrator** in **Chemistry** to conduct practical classes in Pharmaceutical Chemistry

**Qualifications:**

(i) **Visiting Lecturer**:
a) A special degree in Chemistry and a Postgraduate degree (M.Phil/Ph.D) in Chemistry **OR**
b) First or second class special degree in chemistry with at least five years teaching experience

(ii) **Visiting Demonstrator**:
a) A Special degree in Chemistry with experience in Laboratory demonstration **OR**
b) B.Sc degree with chemistry as a subject and experience in Laboratory demonstration

| POST | SALARY |
|---|---|
| Tutor-Mentor (on contract) | Rs.30,000/- (fixed) p.m. |
| Visiting Lecturer | Rs.1,500/- per hour |
| Visiting Demonstrator | Rs.600/- per hour |

Application for the above posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka. Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at the Shroff's counter of the University of Jaffna or at People's Bank, University Branch.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order for Rs.100/- drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
(சி/13190)

## மரங்களை வெட்டியோருக்கு பிணை அனுமதி

மன்னார், ஒக்.26
சட்டவிரோதமாக மரங்களை வெட்டிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்ட 5 பேரையும் மன்னார் நீதிவான் பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்.

மேற்படி 5 பேரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்னம் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது இந்தப் பிணை வழங்கப்பட்டது.

மடு உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சின்னப்பண்டிவிரிச்சான் பகுதியில் சட்டவிரோதமாக மரங்களை வெட்டிய குற்றச்சாட்டின் பேரில் இந்த 5 பேரையும் கடந்த சனிக்கிழமை அந்தப் பகுதியில் உள்ள விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்து மடு பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

மடு பொலிஸார் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிவான் முன்னிலையில் அவர்களை முற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## மன்னார் தாக்குதல் சம்பவம் சந்தேகநபருக்கு பிணை அனுமதி

மன்னார், ஒக்.26
மன்னார் பள்ளிமுனை ஆலய நிர்வாக சபையின் செயலாளரான லக்ஸ்மன் பிகிராடோ தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மன்னார் நகர சபையின் அரச தரப்பு உறுப்பினரை மன்னார் நீதவான் பிணையில் செல்ல அனுமதித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் பள்ளிமுனை பிரதான வீதியில் வைத்து பள்ளிமுனை ஆலய நிர்வாக சபையின் செயலாளரான லக்ஸ்மன் பிகிராடோ (வயது-29) மன்னார் நகர சபையின் அரச தரப்பு உறுப்பினரினால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

கடும் தாக்குதல்களுக்கு உள்ளான லக்ஸ்மன் பிகிராடோ மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவர் மீதான தாக்குதல் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் வழ்க்கு பதிவு செய்து சந்தேக நபரைத் தேடி வந்தனர்.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை மதியம் குறித்த அரச தரப்பு நகர சபை உறுப்பினர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

மன்னார் பொலிஸார் அவரை நேற்று முன்தினம் மதியம் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இதன் போது நகர சபை உறுப்பினர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகளின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மன்னார் நீதிவான் குறித்த நபரை 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 15 ஆயிரம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையிலும் செல்ல அனுமதித்தார். (க-12)

## தருமபுரம் தபாலகத்துக்கு நிரந்தரமாக கட்டடம் அமைக்குமாறு கோரிக்கை



*1958 ஆம் ஆண்டு தருமபுரம் கிராமம் உருவாக்கப்பட்டுள்ள போதிலும் அங்கு தபாலகத்துக்கென நிரந்தர கட்டம் அமைக்கப்படவில்லை. அன்று தொடக்கம் இன்று வரை தனியார் வீடுகளிலேயே மாறி மாறி இயங்கி வருகின்றது.*

கிளிநொச்சி- தருமபுரம் பகுதியில் நிரந்தரமாக தபாலகக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி- கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தருமபுரம் கிராமத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்த நிலையில் தருமபுரம் பகுதியில் இயங்கிவரும் உப தபாலகம் கடந்த பல ஆண்டுகளாகத் தனியார் வீடுகளிலேயே இயங்கி வருகின்றது.

1958 ஆம் ஆண்டு தருமபுரம் கிராமம் உருவாக்கப்பட்டுள்ள போதிலும் அங்கு தபாலகத்துக்கென நிரந்தரக் கட்டம் அமைக்கப்படவில்லை. அன்று தொடக்கம் இன்று வரை தனியார் வீடுகளிலேயே மாறி மாறி இயங்கி வருகின்றது.

பரந்தன் பிரதான தபாலகத்தின் கீழ் உள்ள மேற்படி தபாலகத்தை தினமும் நூற்றுக் கணக்கான பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த உப தபாலகம் தனியார் வீட்டில் தொடர்ந்தும் இயங்கி வருவதால் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே இந்தத் தபாலகத்துக்கென இனியாவது ஒரு நிரந்தரக் கட்டடத்தினை அமைத்து வழங்குமாறு இங்குள்ள பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# புலமைப் பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி தேசியச் சாதனை!

### பெருமிதம் கொள்கிறார் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர்



தரம் 5 புலமைப் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டம் தேசிய ரீதியில் சிறந்த பெறுபேற்று வீதத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளமை எம் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும். இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தில் கடந்த 22 ஆம் திகதி மு.ப. 11 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் பாடசாலை அதிபர் இ.பாலேந்திரா தலைமையில் இடம்பெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது-

தேசிய ரீதியில் கிளிநொச்சி மாவட்டம் சிறந்த பெறுபேற்று வீதத்தைப் பெற்றுள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் 150 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். இதில் 130 மாணவர்கள் உதவிப் பணத்தைப் பெறும் தகுதியையும் கொண்டுள்ளனர். இது வலய மட்டத்தில் 81 வீதமாகும்.

கடந்த காலங்களை விடத் தற்போது மாணவர்களின் அடைவு மட்டம் உயர்ந்து காணப்படுகின்றது. இந்த ஆண்டு வெட்டுப் புள்ளி உயர்வடைந்துள்ள போதிலும் சித்தி வீதம் அதிகரித் துள்ளது என்றார்.

தொடர்ந்து வெற்றியீட்டிய மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றன. (க-6)

## வெள்ளப் பாதிப்புக்கு நட்ட ஈட்டுக் கொடுப்பனவு

துணுக்காய், ஒக்.26
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் கடந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 164 குடும்பங்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டின் இறுதியில் பெரு மழையினால் ஏற்பட்ட இடரினால் இங்குள்ள குடும்பங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. இதில் வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்த 136 குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதமும், வீடுகள் முற்றாகச் சேதமடைந்த 28 குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா வீதமும் உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் தெரிவித்தார். (க-415)

## மன்னாரில் சிக்கியது கேரள கஞ்சா

தலைமன்னார் பகுதியில் கேரளாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே சுமார் ஒரு கிலோ 250 கிராம் நிறையுடைய கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பேசாலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகவும் தெரிய வருகின்றது. (க-12)

### புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கான

## அலுவலக கட்டடப் பணிகள் 19 மில்லியன் ரூபா செலவில்

முல்லைத்தீவு. ஒக்.26
முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கான புதிய அலுவலகக் கட்டுமானப் பணிகள் சுமார் 19 மில்லியன் ரூபா செலவில் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போரின்போது சேதமடைந்த புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அலுவலகக் கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானங்கள் கடந்த 2011ஆம் ஆண்டு இடம்பெற்ற மீள்குடியமர்வையடுத்து துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

*புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அலுவலகக் கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானங்கள் கடந்த 2011ஆம் ஆண்டு இடம்பெற்ற மீள் குடியமர்வையடுத்து துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.*

பிரதான அலுவலகக் கட்டடம் என்றிப்த் திட்டத்தின் கீழ் சுமார் 19 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 2011ஆம் ஆண்டு குறித்த கட்டுமானப் பணிகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஒப்பந்தகாரர் உரிய காலத்தில் வேலைகளைப் பூர்த்தி செய்யாது இழுத்தடித்து வந்த நிலையில் தற்போது வேறொரு ஒப்பந்தகாரர் மூலமாக குறித்த கட்டுமானப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து அங்கு அலுவலகம் இயங்கத் தொடங்கியதும் அடிப்படை வசதிகள் ஓரளவு பூர்த்தியாகி விடுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-6)

## வவுனியாவில் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் 29 இல்

நெளுக்குளம், ஒக்.26
வவுனியா தெற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம் தலைமையில் வவுனியா முத்தையா கலாசார மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண சபை உறுப்பினர்கள், வவுனியா உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், வவுனியா பிரதேச செயலர், வவுனியா மாவட்ட திணைக்களங் களைச் சேர்ந்தவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொள்வரென எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினர் உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடத்திய வாசிப்பு வாரப் போட்டிகள், கலாசாரப் போட்டிகள் ஆகியவற்றில் வெற்றியீட்டிய மாணவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படுவதுடன், முதியோர்களும் கௌரவிக்கப்படவுள்ளரெனப் பிரதேச சபையினர் தெரிவித்தனர். (க-402)

## பால்நிலை சமத்துவம்; மன்னாரில் செயலமர்வு

மன்னாரில் பால்நிலை சமத்துவம் தொடர்பான விழிப்பூட்டும் செயலமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மன்னாரில் இயங்கிவரும் மாற்றாற்றல் உள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஓர் அலகான பெண்கள் வள நிலையம் இதனை நடத்தியது.

கிராம மற்றும் நகரப் புறங்களில் இடம்பெறும் பெண்களுக்கெதிரான வன்முறைகள், கொடுமைகள் மற்றும் பால் சமத்துவம் தொடர்பாக இங்கு அதிக கவனம் செலுத்தப்பட்டது.

கண்டி பெண்கள் அபிவிருத்தி ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் பெண்கள் வள நிலையம் இதனை ஒழுங்கு செய்தது.

காலை தொடக்கம் மாலை வரையில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் மாவட்டத்தின் பல கிராமிய அமைப்புக்களினதும் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெண்கள் வள நிலையத்தின் உளவள ஆற்றுப்படுத்துனர் திருமதி ஜெசி அரியரட்ணம் தலைமையில் இடம்பெற்ற பால் பால்நிலை சமத்துவம் தொடர்பான இந்த விழிப்பூட்டும் செயலமர்வில் உளவள உதவியாளர் திருமதி சந்திரிக்கா மற்றும் பொது மக்கள் சேவை லங்கா அமைப் பின் இணைப்பாளர் றஸாக் ஆகியோர் வளவாளர்களாகச் செயற்பட்டனர். (க-ரி)

## மன்னாரில் அமைக்கப்படவுள்ளது புதிய தொழில்நுட்பக் கல்லூரி

மன்னாரில் அடுத்த ஆண்டு தொழில்நுட்பக் கல்லூரியொன்று அமைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் வரிசையில் மன்னாரிலும் அடுத்த ஜனவரி மாதம் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று புதிதாக அமைக்கப்படவுள்ளதாக வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் வி.சத்தியநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

இதில் பயிற்சி நெறிகளைத் தொடர விரும்பும் மாணவர்களிடமிருந்து முழுநேர, பகுதிநேரக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதேவேளை வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் முழுநேர, பகுதிநேரக் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்களும் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். மன்னார் தொழில்நுட்பக் கல்லூரியில் கற்க விரும்புபவர்கள் மன்னார் தொழில்நுட்பக் கல்லூரியில் பயில்வதற்கான விருப்பத்தைத் தெரிவித்து அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, நெளுக்குளம், வவுனியா எனும் முகவரிக்குத் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் எனத் தெரிவித்தார். (க-402)

# வாழ்வின் எழுச்சித் திட்டத்தை எதிர்க்கவில்லை மு.காங்கிரஸ்

## கூறுகிறார் ஹசன் அலி



அம்பாறை, ஒக்.26

ஏழை மக்களின் வறுமையைப் போக்கக் கூடிய வாழ்வின் எழுச்சித் திட்டத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் எதிர்க்கவில்லை என்று அந்தக் கட்சியின் செயலர் எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

நிந்தவூர் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் ஏற்பாட்டில் சமுர்த்தி அதிகாரிகள் கௌரவிப்பு விழா புதன்கிழமை நிந்தவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாழ்வின் எழுச்சித் திட்டம் ஏழை மக்களின் வறுமையை ஒழிக்கக் கூடிய திட்டமாகும். ஆனால் இதனை செயற்படுத் துகின்ற அதிகாரத்தை மாகாண சபைகளுக்குக் கொடுக்க வேண் டும் என்றே நாம் கூறி வந் தோம். இந்தத் திட்டத்தில் 14 விடயங்களைத் திருத்தவேண்டும் என்று நாம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸிலிடம் கூறியிருந்தோம். அதனை அவரும் ஏற்றுக் கொண்டார்.

ஏழை மக்களுக்கு உதவக் கூடிய இந்தத் திட்டத்தை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த்ததாக குற்றம் சுமத்துவதில் எவ்வித உண்மையும் இல்லை.-என்றார். (ச)

**ஏழை மக்களுக்கு உதவக் கூடிய இந்தத் திட்டத்தை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த் ததாக குற்றம் சுமத்துவதில் எவ்வித உண்மையும் இல்லை.**



திருகோணமலை, உட்துறைமுகவீதி கடற்கரைப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை அதிகளவு மீன்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளன. (ச-40)

விசேட தேவையுடைய பாடசாலைகளில்

# கற்பிக்கும் ஆசிரியருக்கு 10 வீத சம்பளம் உயர்வு



மட்டக்களப்பு, ஒக்.26

விசேட தேவையுடைய பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பத்து வீத சம்பள உயர்வை வழங்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இந்தத் தகவலை மட்டக்களப்பு, மாவட்ட அரச அதிபர் பி.எஸ். எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

காத்தான்குடி ஷாஹிறா விசேட பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன் வெளிப்பாட்டு கண்காட்சி வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தக் கண்காட்சி மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் பாடசாலை மாண வர்களினால் தயாரிக்கப்பட்ட கைப்பணிப் பொருள்கள் அதிகளவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியை அதிகளவு பாடசாலை மாணவர்கள் பார்வையிட்டு வருகின்றனர். (ச)

# இந்திய வியாபாரிகள் கிழக்கில் படையெடுப்பு

## உள்ளூர் வர்த்தகர்கள் பாதிப்பு



மட்டக்களப்பு, ஒக்.26

தீபாவளிப் பண்டிகைக் காலம் நெருங்கும் வேளையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் புடைவை வியாபாரத்தில் ஈடுபடும் இந்திய வியாபாரிகளால் எமது வியாபாரம் பாதிக்கப்படுகிறது என்று அந்தப் பகுதி வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் வியாபாரிகள் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள கிராமங்களில் வீடு வீடாகச் சென்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களில் பலர் சுற்றுலா விசாவில் வந்து கிழக்கில் தங்கியிருந்தே சட்டவிரோதமாக வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு சட்டவிரோத வியாபாரத்தில் ஈடுபட்ட பலர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

பண்டிகைக் காலங்களில் கிழக்கு மாகாணத்துக்கு வந்து வீடு வீடாகச் சென்று தவணை முறையிலும், கடன் அடிப்படையிலும் வியாபார நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். மக்களும் இந்திய வியாபாரிகளிடம் பொருள்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். அதனால் உள்ளூர் வர்த்தகர்கள் பெரிதும் பாதிப்ப டைந்துள்ளனர்.

எனவே சட்டவிரோதமாக வியாபாரங்களில் ஈடுபடும் இந்திய வியாபாரிகளைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## வின்சன்ற் தேசிய பாடசாலைக்கு கிடைத்தது விருது

ஏறாவூர், ஒக்.26

2012 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாத வேலைத் திட்டத்தில் மட்டக்களப்பு வின்சன்ற் உயர்தர மகளிர் தேசியப் பாடசாலைக்கு தேசிய விருது கிடைத்துள்ளது.

இந்த விருது வழங்கும் விழா கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திஸா நாயக்கா தலைமையில் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொழும்பில் இடம் பெறவுள்ளது.

தேசிய வாசிப்பு மாதமாக ஒக்ரோபர் மாதம் அனுஷ்டிக்க உள்ள நிலையில், அந்த மாதம் தேசியப் பாடசாலைகளினால் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் அடங்கிய அறிக்கையை மாத முடிவில் கல்விச் சேவைகள் அமைச்சுக்கு அனுப்பி வைக்க வேண் டும்.

இந்த அறிக்கையைக் கொண்டு கல்விச் சேவைகள் அமைச்சால் தேசிய விருதுக்கான தேர்வு இடம்பெறும்.

அதன் அடிப்படையில் 2012 தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு வின்சன்ற் தேசிய பாடசாலையால் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டத்துக்காக, 2013 ஆம் ஆண்டு நடைபெறும் வாசிப்பு மாத விருது வழங்கும் நிகழ்வில் தேசிய விருதுக்கு வின்சன்ற் மகளிர் உயர்தரப் பாடசாலை தெரிவாகியுள்ளது என்று கல்விச் சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது. (ச-157)

# அரசியற் தலையீடுகள் கல்வியில் வேண்டாம்

## அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

அம்பாறை, ஒக்.26

பாடசாலை நிர்வாகம் மற்றும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது. அதிபருக்கு ஒத்துழைக்காமல் கல்வி நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்க ஆசிரியர்கள் முனைந்தால், அப்போது அரசியல் தலையீடு பாடசாலைகளில் இடம்பெறுவதைத் தவிர்க்க முடியாது.

இவ்வாறு அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.றாஸிக் தெரிவித்தார்.

பள்ளிக்குடியிருப்பு பாயிஸா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகள் பாடசாலையின் பௌதீக வளப்பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்வதிலும், சிறந்த அதிபர், ஆசிரியர்களைக் கொண்டு வருவதிலும் கவனம் செலுத்த வேண்டுமே தவிர, ஏனைய விடயங்களில் தலையிடக் கூடாது. என்னைப் பொறுத்த வரை எந்த வொரு நிகழ்வுக்கும் பாடசாலைகளுக்கு அழைக்கப்பட்டால் நான் ஒரு அரசியல்வாதியாக கால் பதிக்காமல் சாதாரண நபர் என்ற எண்ணத்துடனேயே கலந்து கொள்கின்றேன்.

மாணவர்கள் சுய லாபங்களுக்குத் துணைபோகாமல் சிறந்த பண்பாடுடைய மாணவர்களாக மிளிர வேண்டும்.-என்றார். (ச)

# அரசியல்வாதிகள் இலக்கிய ஈடுபாட்டில் பின்னடைவு

## அடிக்கடி தேர்தல் நடப்பதே காரணம் என்கிறார் ஹக்கீம்

அம்பாறை, ஒக்.26

இலங்கையில் அடிக்கடி தேர்தல் நடப்பதால் அரசியல்வாதிகளின் இலக்கிய ஈடுபாட்டில் பின்னடைவு ஏற்படுகிறது. இவ்வாறு நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள தமிழ் நாடு, இராமநாதபுரத்தை சேர்ந்த இலக்கியவாதியான ஹாஜா முகைதீன் ஆலிம் புதன்கிழமை நீதியமைச்சில் ஹக்கீமைச் சந்தித்து அவர் கலந்துரை யாடிய போதே இவ்வாறு கூறினார்.

இதன்போது அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:-



இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் படைப்புகள் வெளிவராமல் இல்லை. ஆனால் இப்பொழுது அச்சு, இலத்திரனியல் ஊடகங்களுக்கு மேலதிகமாக, இணையத் தளங்கள் மூலமாக இவ்வாறான இலக்கியப் பணிகள் அதிகமாக முன்னெடுக்கப்படுகின்றன. படைப்பிலக்கியங்கள் இணையங்களின் ஊடாக வெளியிடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது ஆரோக்கியமானது.

இஸ்லாமிய தமிழ் இலக்கியம் இன்றும் உயிரோட்டம் உள்ளதாக வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஊக்கம் கொடுக்கும் பணியை நாங்கள் மேற்கொள்ளலாம்.

அதன் அடிப்படையில், இஸ்லாமிய, தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடு இலங்கையில் நடைபெறவேண்டும் என்பதில் நாங்கள் ஆர்வமாக இருக்கிறோம். அதற்கான ஒரு குழுவை அமைத்து ஏற்பாடுகளை முன் னெடுத்தோம். எனினும் தேர்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் அரசியல்வாதிகளாகிய எங்களால் அதில் உரிய ஈடுபாட்டை காட்ட முடியவில்லை.

அரசியலில் ஈடுபடும் நாங்கள் அவ்வப்பொழுது நடைபெறும் தேர்தல்களினால் ஆட்டிப்படைக்கப்படுகிறோம். தேர்தல்கள் நடைபெறுவது ஜனநாயகத்துக்கு நல்லதுதான். ஆனால் அடிக்கடி தேர்தல் நடைபெறுவது இலக்கியம் போன்ற துறைகளில் நாங்கள் கொண்டிருக்கும் சிரத்தைக்கு இடையூறாக அமைகிறது. அதனால் சில பின்னடைவுகள் ஏற்பட்டு விடுகின்றன.-என்றார். (ச-104)

# மாநாட்டின் முதலீடுகளால் நாட்டுக்கே பெரும் நன்மை!

## ஜனாதிபதி மஹிந்த கூறுகின்றார்



பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டின் பொருட்டு மேற்கொள்ளும் முதலீடுகளால் இறுதியில் நாட்டிற்கே நன்மைகள் கிட்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் திறப்புவிழா வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் சுமார் இரண்டு பில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டில் சிறிமாவோ பண்டாரநாயக்கவினால் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 1973 ஆம் ஆண்டில் சீனக் குடியரசினால் இந்த மாநாட்டு மண்டபம் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டு இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டது.

1976 ஆம் ஆண்டில் அணிசேரா தலைவர்கள் மாநாடு, சார்க் மாநாடு உட்பட முக்கிய பல மாநாடுகள் இந்த மண்டபத்தில் நடைபெற்றுள்ளதாகவும் ஜனாதிபதி மஹிந்த இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1976 ஆம் ஆண்டில் அணிசேரா தலைவர்கள் மாநாடு இந்த மண்டபத்திலே நடைபெற்ற சந்தர்ப்பத்தில், அப்போதைய அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு பொருந்தக்கூடிய வசதிகள் எம்மிடம் இருக்கவில்லை. போக்குவரத்து வசதிகள் கூட போதுமான அளவிற்குஎம்மிடம் இருக்கவில்லை. ஆயினும் அதனை நடத்தியிருந்தோம்.

எனினும், பொதுநல வாய நாடாளுமன்ற மாநாட்டை அத்தகைய நாடொன்றில் நாம் நடத்தவில்லை. தங்குமிட வசதிகள், போக்குவரத்து வசதிகள் உட்பட அனைத்து வசதிகளும் தற்போது காணப்படுகின்றன - என்று தெரிவித்தார்.

## புதையல் தேடிய 19 பேர்மாட்டினர்

நாட்டின் இருவேறு பகுதிகளில் புதையல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 19 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுங்கேணி - மாரஇழுப்பவாய் வனப்பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட ஐவர் நேற்றுமுன்தினம் நெடுங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து மோட்டார் சைக்கிள், சைக்கிள், மண்வெட்டி, அலவாங்கு, உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மஹஓயா - நுவரகலதென்ன வனத்தில் புதையல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 14 சந்தேகநபர்கள் மஹஓயா பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வசமிருந்து பூஜை பொருள்கள் மற்றும் உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.



வெள்ள இடரிலிருந்து எவ்வாறு பாதுகாப்பாக வெளியேற வேண்டும் என்ற ஒத்திகை நிகழ்வு மட்டக்களப்பு, போரதீவுப்பற்று.வேத்துச்சேனைக் கிராமத்தில் இடம்பெற்றது. இதன்போது மக்களுக்கு இடர் முகாமைத்துவப் பிரிவால் விடுக்கப்பட்ட ஆபத்து எச்சரிக்கைக்கு அமைய மக்கள் பாதுகாப்பாக வெளியேறுகின்றனர்.

## ஆயுள்வேத மத்திய நிலையத்தில் விபசாரம்

### மூவர் வசமாக மாட்டினார்

மிரிஹான - தலபத்பிட்டிய வீதி உடகமுல்ல பகுதியில் ஆயுள்வேத மத்திய நிலையம் என, விபசார நடவடிக்கையில் ஈடுபட்டமை தொடர்பில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் குறித்த இடத்திற்கு ஆயுள்வேத வைத்தியர் போன்று வந்திருந்த ஒருவரும், விபசார நடவடிக்கைகளுக்காகவந்திருந்தஇருபெண்களுமே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

மரிஹான பொலிஸார் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## போலந்துப் பிரஜை விமான நிலையத்தில் கைது

சவூதி ரியால்களை வைத்திருந்ததாகக் கூறப்படும் போலந்துப் பிரஜை ஒருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் நேற்று வெள்ளிக்கிழமை காலை கைதுசெய்துள்ளனர்.

மேற்படி போலாந்துப் பிரஜை 7 மில்லியன் ரூபா பெறுமதியான 2 இலட்சம் சவூதி ரியால்களை வைத்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சந்தேக நபர் சிங்கப்பூருக்குச் செல்லும் விமானத்திற்காக காத்திருந்தபோது அவரைக் கைதுசெய்துள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

## ஆபாச இறுவெட்டுக்களுடன் இருவர் வசமாக சிக்கினர்

ஆபாச காட்சிகள் அடங்கிய 605 இறுவெட்டுக்கள் மற்றும் கைத்துப்பாக்கி என்பவற்றுடன் கொட்டாவையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய அதுருகிரிய பொலிஸார் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

கடையொன்றில் திருடியமைக்காகவே முதலில் இந்த நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைடுத்து சந்தேகநபரின் வீட்டை சோதனைக்குட் படுத்தியபோது, அங்கிருந்து ஆபாச இறுவெட்டுக்களை கைப்பற்றியதாக பொலிஸார் மேலும் கூறினர்.

## உறவு முறைமையின் அடிப்படையில் தேசிய ரகர் அணியின் தலைமைப் பதவி

### ஜே.வி.பி. பகிரங்கக் குற்றச்சாட்டு

தேசிய 'ரகர்' அணியின் தலைமைப் பதவி உறவு முறைமையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய அணியொன்றின் தலைமைப் பதவி திறமையின் அடிப்படையிலேயே வழங்கப்பட வேண்டும்.

கார்ல்டன் 'ரக்பி' போட்டிகள் காலி சர்வதேச கிரிக்கட் மைதானத்தில் நடத்தப்பட்டுள்ளது. இதனால் மைதானம் நாசமாகியுள்ளது.

தேசிய கிரிக்கட் மைதானமொன்றில் ரகர் போட்டிகள் நடைபெற்றதாக நான் இது வரையில் வேறு எங்கும் கேள்விப்பட்டதில்லை.

இலங்கைதேசியரக்பி அணியின் தலைமைப் பதவியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன்களான யோசித ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் வகித்துள்ளனர்.



அண்மையில் நடைபெற்ற சர்வதேச ரக்பி போட்டித் தொடர் ஒன்றிற்கான இலங்கை அணியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாலியல் இலஞ்சம் கோரிய அதிகாரிக்குப் பிணை

காட்டை அழித்தவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு அவரின் மனைவியிடமிருந்து பாலியல் இலஞ்சம் கோரினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பிபிலை வனப்பிரிவைச் சேர்ந்த உத்தியோகஸ்த்தர் நேற்றுமுன்தினம் கொழும்பு நீதவானினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இவர் மீதான விசாரணை முடிந்துவிட்டதாக வழக்குத் தொடுநர் அறிவித்ததைத் தொடர்ந்து நீதிவான் இந்த வன வள அதிகாரியை 15 ஆயிரம் ரூபா பணம் மற்றும் தலா 5 இலட் சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளிலும் விடுவித்தார்.

பிபிலை, பிம்கொட எனுமிடத்தில் கமம் செய்வதற்காக காட்டை அழித்த குடும்பஸ்தர் ஒருவரைக் கைது செய்யாமல் இருக்கவும், அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்கவும் சந்தேக நபரான வன வள அதிகாரி ஜனக தென்னக்கோன், காடழித்தவரின் மனைவியிடமிருந்து பாலியல் இலஞ்சம் கோரினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்நிலையில், முறைப்பாட்டாளர் இலஞ்ச ஆணைக்குழுவிடம் முறையிட்டதைத் தொடர்ந்து இலஞ்ச ஆணைக்குழு சந்தேக நபரைக் கைது செய்தது. இவர் முறைப்பாட்டாளரின் வீட்டில் அவருடன் பாலுறவு கொள்ள தயாரானபோதே இவரை இலஞ்ச ஆணைக்குழுவினர் கைது செய்தனர் எனக் கூறப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையை ஜனவரி 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்க நீதவான் உத்தர விட்டார்.

## 5 மணி நேர நீர்வெட்டு

(பேருவளை நிருபர்)

பாணந்துறை - மொறட்டுவை தெற்குப் பகுதிக்கு நீர் பகிர்ந்தளிக்கப்படும் பிரதான நீர்க்குழாயில் மேற்கொள்ளப்படவுள்ள அத்தியாவசிய விஸ்தரிப்புப் பணிகளை முன்னிட்டு எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 10.00மணி முதல் 30ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 3.00 மணி வரையிலான 5 மணி நேர நீர்வெட்டு மொறட்டுவை மாநகர சபைப் பகுதியில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

## ஹெய்ட்டியில் பெண் மீது வண்புணர்வு: இலங்கை சிப்பாய் மீது விசாரணை ஆரம்பம்

ஹெய்டியில் பெண் ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் அமைதிப்படையைச் சேர்ந்த இலங்கையின் படை சிப்பாய் மீது விசாரணைகள் ஆரம்பமாகவுள்ளன.

இது தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள 5 பேரைக் கொண்ட இலங்கையின் இரா ணுவ அதிகாரிகள் குழு ஹெய்ட்டியின் அதிகாரிகளுடன் ஒத்துழைப்புடன் செயற்படவுள்ளதாக இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

இந்த 5 பேரும் ஹெய்ட்டியில் குறித்த இலங்கை சிப்பாயின் வாக்குமூலத்தை பதிவு செய்யவுள்ளது.

இதனையடுத்து நாடு திரும்பியதும் குறித்த குழு இராணுவ தளபதியிடம் தமது அறிக்கையை கையளிக்கவுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கை சிப்பாய், கடந்த செப்ரெம்பர் 14 ஆம் திகதியன்று ஹெய்ட்டியைச் சேர்ந்த பெண்ணை வன்புணர்வு செய்தார் என்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது

## நவீன வசதிகளுடன் தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை ஆரம்பிக்க நடவடிக்கை

சகல விதமான நவீன வசதிகளுடன் தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த பயிற்சிக் கல்லூரியில் மாணவர்களை பின்னர் பாடசாலைகளில் ஆசிரியர்களாக உள்வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சின் உயரதி காரி ஒருவர் தெரிவித்தார்.

கொரியா அரசால் இந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இணைத்துக் கொள்ளப்படும் ஆசிரியர்கள், பாடசாலைகளில் நவீன தொழில்நுட்ப பாடத்தை கற்பிப்பதற்காக ஈடுபடுத்தப்படுவார்கள் என கல்வி அமைச்சின் உயரதிகாரி தெரிவித்தார்.

ஆசிரிய தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கு மூன்று வருட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## பாடசாலை மீது தாக்குதல்: நால்வருக்கு விளக்கமறியல்

கொட்டாவ தர்மபால வித்தியாலயத்திற்குள் அத்துமீறிப் புகுந்து வித்தியாலய அதிபர், உப அதிபர் உட்பட ஐவரைத் தாக்கிய சம்பவத்தில் கைது செய்யப்பட்டு ஹோமாகம நீதிமன்றத்தில் முன்னிலையாக்கப்பட்ட நால்வரையும் நவம்பர் மாதம் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹோமாகம நீதிவான் வை.ஆர்.டீ. நெலுந்தெனிய உத்தரவிட்டுள்ளார். பாடசாலைக்குள் அத்துமீறிநுழைந்தமை, பணிகளுக்கு இடையூறு விளைவித்தமை, அரச சேவையாளர்களைத் தாக்கியமை என்ற மூன்று குற்றச்சாட்டுகள் சந்தேகநபர்களின் மீது சுமத் தப்பட்டுள்ளன.

இந்திரஜித் பெரேரா, அருண இந்திரஜித் மீப்பாகல, பிரியந்த குமார, சஜித் தனுஷ்க பெரேரா எனும் நால்வருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

ஹோமாகம தெற்குக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் டீ.எஸ்.சேனாபதியின் பணிப்புரையின் கீழ் கொட்டாவ தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜீ.டபிள்யூ. திலகசிரியின் தலைமையில் விசேட பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உயர்ச்சிக்குக் கைகொடுத்தவர்கள் உயர்ந்து நிற்க உழையுங்கள்....

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் சட்ட ரீதியாக வழங்கப்பட்டுள்ளன. அவற்றை வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்த முடிவு செய்துள்ளேன்-

வடக்கில் இன்று காணிகள் சூறையாடப்படும் நிலையில், மாகாண சபைக்கு அந்த அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்க வேண்டிய அத்தியாவசிய தேவையை மத்திய அரசு உணர்ந்து செயற்படும் என்று நம்புகின்றேன்.-

இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு நடத்தப்பட்ட கருத்தரங்கில் உரை நிகழ்த்துகையிலேயே . முதலமைச்சர் மிகப் பவ்வியமாக அரசின் காதுகளில் மேற்கண்ட கருத்துக்களைப் போட்டுள்ளார்.

முதலமைச்சர் பின்வரும் கருத்துக்களையும், நிலைப்பாடுகளையும் நியாயங்களையும் ஊன்றித் தொட்டுக் காட்டி இருப்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை ஆகும்.

★ தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே, இலங்கை- இந்திய (ஜே.ஆர்-ராஜீவ்) ஒப்பந்தத்தின் மூலம் மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

-தமிழ் பேசும் மக்களுக்குச் சாதகமாக எதனையும் தாம் வழங்கவில்லை என்று சிங்கள மக்களுக்குக் காட்டுவதற்காகவே, மாகாண சபைகளை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சகல மாகாணங்களுக்கும் அறிமுகம் செய்தார்!

★ ஆனால் எங்கள் சிறிய நாட்டில், சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக வாழும் இடங்களில் அதிகாரங்களைப் பகிரவேண்டிய தேவை மிகக் குறைவாகவே இருக்கக் காணலாம்.

ஏனெனில், மத்திய அரசில் அதிக எண்ணிக்கையில் அங்கம் வகிப்போர் நாட்டின் பெரும்பான்மை இனத்தவரே. அவர்கள் ஒரே மொழி பேசுபவர்கள்; ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் பிரச்சினைகள் அநேகமாகக் கிட்டத்தட்ட ஒரே விதமானவை.

★ வடக்கு, கிழக்கு மாகாணங்கள் வேறுபட்டவை என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

★ வடமாகாணம் ஏனைய ஏழு மாகாணங்களையும் விட, வேறுபட்டது. எங்கள் மொழி வேறு; எமது மதங்கள் வெவ்வேறு; எமது நிலங்கள் வெவ்வேறானவை-

★ எமது கலாசாரம் வேறுபட்டது; எமது வாழ்க்கை முறை வேறுபட்டது.

அவற்றைவிடவும் அண்மைக் காலங்களில் ஏனைய மாகாணங்களைவிட மிக முக்கியமான வேறுபாடுகளை வடக்கு மாகாணம் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்-

நாங்கள் போரின்போது அடிபட்டு, இடிபட்டு, அல்லலுற்று வெளிச்சத்துக்கு வந்திருக்கும் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.-

எம்மை மற்றைய மாகாணங்களுடன் சரிசமமாக வாழ வைப்பதானால், எமது மாகாணத்துக்கு ஒதுக்கப்படும் நிதி ஏனையவற்றுக்கு ஒதுக்கப்படுவதைவிட, பன்மடங்காக உயர வேண்டும்; உயர்த்தப்பட வேண்டும்.

முதலமைச்சரின் பின்வரும் கருத்துக்களும் கொழும்பு அரசினால் மிகக் கூர்மையுடன் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. அவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்; தட்டிக் கழித்துவிடக் கூடாது.

•• வடமாகாணத்தில் இன்று காணிகள் (பெருமளவில்) சூறையாடப்படுகின்றன.

•• மக்களின் பாதுகாப்பு கேள்விக்கு இடமாக்கப்பட்டுள்ளது.

•• இத்தகைய நிலைகளைப் போக்குவதற்கு அவற்றை நாம் சட்டப்படி நடைமுறைப்படுத்த உள்ளோம். அவற்றை வழங்குவதற்கு மத்திய அரசு தயக்கம் காட்டக்கூடாது.

•• மத்திய அரசு தயக்கம் காட்டும் பட்சத்தில், அது அனைத்துலகத்துக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டுவிடும்.

வடக்கில் வாழும் மக்களின் எழுச்சியின் ஓர் அலகாக வடக்கு மாகாண சபை புதிதாக தோற்றம் கண்டுள்ளது. அதன் ஆட்சி அதிகாரங்கள் கொழும்பு அரசுகளால் கட்டுப்படுத்தி, மட்டுப்படுத்தப்பட்டு இருப்பினும், அதன் வசம் உள்ள அதிகாரங்களை உச்சப் பயன்பாட்டுக்கு உள்ளாக்குவது, சபையின் முழுப் பொறுப்புமாகும்.

அதனை உணர்ந்து மாகாணசபையும், அதன் கீழ் இயங்கும் அமைச்சுகள், அவற்றின் அலகுகள் என்பனவும் வீரியத்துடன் உழைக்க வேண்டும். அதனூடாகவே மக்களின்-வாக்காளர் பெருமக்களின்-அபிலாசைகளை, வாழ்வியல் உயர்ச்சிகளை, பிரதேச அபிவிருத்திகளை அடையலாம், எய்தலாம்.

அச்சொட்டாக கடந்துபோன மூன்று தசாப்தங்களாக வடக்கை வளர்க்கவோ, மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவோ இயலாத இருள் சூழ்ந்த நிலையே மண்டிக்கிடக்கிறது. அதனை நீக்கி ஒளி பாய்ச்சும் முதன்னிலைப் பணிகள் வீச்சுடனும் வீரியத்துடனும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அந்தப் பணிகளுக்குத் தடையாக உள்ள கொழும்பின் பாரபட்சமும், பாகுபாடும், ஜனநாயக உரிமை மீறல்களும், வாய்ப்பந்தல் மூலமான ஏய்க்காட்டுதல்களும் உடைத்தெறியப்பட வேண்டும். அத்தோடு நிற்காது வடக்கு மக்களின் நில, நீர் (கடல்) வளங்களை அழிக்கும் அக்கிரமங்களை இனங்கண்டு, வெளிப்படுத்திப் புதிய பாதையில் காலடி எடுத்து வைக்க வேண்டும். அதற்கான முழு ஆதரவையும் மக்கள் தந்திருக்கிறார்கள். குடுமிச் சண்டை போட்டு அவற்றை வீணடித்து விடாதீர்கள் வடக்கு மாகாண சபையினரே!


மக்கள், உங்களின் "உயர்ச்சி"க்குக் கை கொடுத்தவர்கள் என்பதனையும், எவ்வேளையும் அவர்கள் உங்களைக் கூர்ந்து அவதானிக்கிறார்கள் என்பதனையும் மனதில் ஆழப் பதித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் மக்களுக்காக, உங்கள் மண்ணுக்காக, நிலத்துக்காக, அவர்களின் ஜனநாயக உரிமைகளுக்காக உழைப்பதற்கு ஒருசேர மனம் கொள்ளுங்கள். அவையே மக்களுக்கு உண்டாகக் கூடிய தோல்விகளையும், இயலாமைகளையும் துவம்சம் செய்யும்.

# கைகளுக்கு எட்டுமா பொலிஸ் அதிகாரம்?

ராஜராஜன்

**வடமாகாணத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட் டும் பொறுப்பு முதலமைச்சரின் வசமே உள்ளதாக இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கூறியுள் ளமை பலரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளது.**



வடமாகாணத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு மாகாண முதலமைச் சருக்கே உள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் கூறியுள்ளார்.

இதனை பொலிஸ் அதிகாரம் மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள் ளதாகச் சிலர் அர்த்தமும் கற்பித்துக் கொண்டனர். மகிழ்ச்சியும் அடைந்தனர். ஆனால் இவற்றுக்கெல்லாம் பாதுகாப்புச் செயலர் ஒரேயடியாக பலமான ஆப்பு ஒன்றை இறுக்கி யுள்ளார். 'பொலிஸாருக்கு' உத்தரவிடும் அதிகாரம் எதுவும் முதலமைச்சருக்குக் கிடையாது. அவர் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மட்டுமே, சட்டம் ஒழுங்கைப் பேணிக்கொள்ள முடியும் என அவர் கூறியுள்ளமை 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற வரிகளை நினைவுபடுத்துகிறது. பொலிஸாருக்கு உத்தரவு இடாமல் எவ்வாறு சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்த முடியும் என்பது புரியாத புதிராகவே உள்ளது. ஏனென்றால் பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பாக இங்குள்ள மக்கள் மிக நன்றாகவே அறிந்து வைத்துள்ளனர்.

### பொலிஸ் அதிகாரம் முதலமைச்சருக்கே

ஒரு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் அதனை நிர்வகிக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு உண்டு. பொலிஸாரைக் கொண்டே சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை அவர் பேண முடியும். இதற்கு பொலிஸாருக்கு ஆணையிடும் அதிகாரம் அவருக்கு வழங்கப்பட வேண்டும். ஏனைய நாடுகளில் இந்த நடைமுறைதான் பின்பற்றப்படுகின்றது. ஆனால் எமது நாடு இதற்கு விதிவிலக்காகக் காணப்படுகின்றது. பொலிஸாரின் தன்னிச்சையான செயல்களை ஒரு மாகாண முதலமைச்சரால் கட்டுப்படுத்த முடியாத நிலையில் வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்க வேண்டி நேருமானால் அவர் முதலமைச்சருக்கான பதவிக் கதிரையில் அமர்ந்திருப்பதில் எந்தவித அர்த்தமும் கிடையாது. எமது நாட்டிலுள்ள ஏனைய 8 மாகாண சபைகளும், மத்தியில் ஆட்சியில் அமர்ந்துள்ள கட்சியினால் நிர்வகிக்கப்படுவதால், மத்திய அரசின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரமே செயற்பட்டு வருகின்றன. மத்தியில் உள்ளவர்கள் சொல்வதே அவர்களுக்கு வேதவாக்காகவும் அமைந்துள்ளது. அதனால் தமக்குள்ள அதிகாரங்கள் தொடர்பாக இந்த மாகாண சபைகள் அலட்டிக் கொள்வதில்லை.

### அச்சமில்லாத வாழ்க்கையை எதிர்பார்க்கும் மக்கள்

ஆனால் வடமாகாண சபை வித்தியாசமானதொரு சூழ்நிலையில் இயங்க நேர்ந்துள்ளது. சுமார் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தச் சபை மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மக்கள் பலதரப்பட்ட இடர்களுக்கு, சவால்களுக்கு முகம் கொடுத்த போதிலும் தமது வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அளித்து உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளனர். அதனால் எதிர்பார்ப்புக்களும் அவர்களிடையே நிறையவே காணப்படுகின்றன. இதனை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு முதலமைச்சரின் தலையைப் பாரமாக அழுத்தி வருகின்றது. மக்கள் அச்சமற்றதொரு இயல்பு வாழ்க்கைக்காகவே ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். கடந்த 30 ஆண்டுகளாகத் தாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் வேதனைகளுக்கு ஒரு முடிவு வேண்டுமென்பதே இங்குள்ள மக்களின் முக்கிய எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

### இந்தியாவில் நிலைமை வேறு

இதேவேளை, இந்திய மாநில அரசுகளை நாம் எடுத்துக் கொண்டால், அவை ஓரளவு சுயாட்சியுடன் செயற்படுவதைக் காண முடிகின்றது. பொலிஸ், காணி அதிகாரங்கள், வெளிநாடுகளின் முதலீடுகளை ஊக்குவித்தல் ஆகிய முக்கிய அதிகாரங்களை இவை கொண்டுள்ளன. இதனால் அந்த மாநில அரசுகளால் பொலிஸாரைக் கட்டுப்படுத்துவதுடன், சட்டம் ஒழுங்கை முழுமையாக நிலை நிறுத்தவும் முடியும். ஆனால் இங்கு ஒரு முதலமைச்சரால் பொலிஸாருக்கு உத்தரவிட முடியாத நிலையில் எவ்வாறு அவரால் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த முடியுமென்பது கேள்விக்குரியதொன்றாக ஆகியுள்ளது.

### போரின் பின்னர் மோசமாகிவரும் நிலைமை

போரின் பின்னரான காலப் பகுதியில் வடபகுதியின் நிலைமைகள் மிகவும் மோசமாகவே மாறியுள்ளன. கொலைகள் சர்வசாதாரணமாக இடம்பெற்று வருகின்றன. திருட்டு, கொள்ளை என்பன இடம் பெறாத நாள் இல்லையெனக் கூறுமளவுக்கு அவை மலிந்து போயுள்ளன. சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் மீதான வன்முறைகள், காடையர்களின் அட்டகாசம், குழுக்களுக்கிடையில் மோதல்கள் என்பனவும் கட்டுக் கடங்காத நிலையை எட்டியுள்ளன. இளைஞர்களின் போதைப் பொருள் மற்றும் மது பாவனை என்பன கவலையளிக்கும் வகையில் பெருகியுள்ளன. இதனால் இவர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக மாறும் வாய்ப்புக்கள் உச்ச நிலையிலுள்ளன. புனிதமான ஆலயங்களைக்கூட விட்டு வைக்காத கொடியவர்கள் சாதாரண மக்களை எவ்வாறு நோக்குவார்கள் என்பதைச் சொல்லவே தேவையில்லை. வெளியில் செல்லும் பெண்கள் பத்திரமாக வீடுவந்து சேரும் வரை வீட்டில் உள்ளவர்கள் நெருப்பை மடியில் கட்டி வைத்திருக்க வேண்டிய நிலைதான் இங்குள்ளது. ஏனென்றால் அவர்களைக் குறிவைத்துக் காத்திருக்கும் வல்லூறுகளால் அவர்களுக்கு எந்த வேளையிலும் ஆபத்து நேர்ந்துவிடலா மென்ற பரவலான அச்ச உணர்வு இங்கு நிலவி வருகின்றது.

### விடுதலைப் புலிகள் காலத்தில் நிலைமை வேறு

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வடபகுதி இருந்தபோது, என்னதான் கஷ்டங்கள் இருந்திருந்தாலும் மக்கள் போர் அச்சத்தைத் தவிர வேறு எதற்கும் அஞ்சியதில்லை. எல்லாமே ஒழுங்காக நடந்தன. அப்போது இயங்கி வந்த காவல்துறை சிறப்பாகச் செயற்பட்டது. குற்றம் புரிந்தவர்களுக்கு தாமதமின்றி உரிய தண்டனைகள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவாகவே நீதி வழங்கப்பட்டது. லஞ்சம், ஊழல் என்ற பேச்சுக்கு அங்கு இடம் இருக்கவில்லை.

### முதலமைச்சருக்கு அதிகாரம் அவசியம்

ஆனால் இன்று வடமாகாணம் என்ன நிலையில் உள்ளது என்பது அனைவருக்கும் தெரியும். இதனைச் சீர் செய்ய வேண்டுமென்றால் கடுமையானதும், காத்திரமானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இதனை நிறைவேற்றி வைப்பவருக்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டாலே இது சாத்தியமாகும். இந்த நிலையில் பொலிஸாரை வழிநடத்தும் அதிகாரம் எதுவுமற்ற முதலமைச்சர் ஒருவரால் சட்டம் ஒழுங்கை முறைப்படி நிலைநிறுத்த எந்த அளவுக்கு இயலும் என்பது கேள்விக்கு உரியதொன்றே. இதனால் தான் வடமாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வேண்டுமென்ற கோரிக்கை வலுவாக மேலெழுந்து வருகிறது. முதலமைச்சரின் கட்டளைகளைப் பொலிஸார் ஏற்க மறுத்துவிட்டால் பொலிஸாரின் செயற்பாடுகளை அவதானித்துக் கொண்டிருப்பதைத் தவிர முதலமைச்சரால் எதுவுமே செய்ய முடியாமல் போய் விடக்கூடும்.


மேலும் உரிய அதிகாரங்களை வெள்ளித் தட்டில் வைத்து தென்னிலங்கை அரசியல்வாதிகள் வழங்குவார்களென நாம் ஒருபோதுமே எதிர்பார்க்க முடியாது. ஜனநாயக ரீதியில் தேர்தல் மூலம் வடமாகாண சபை அமைவதற்கே 25 வருடங்கள் எடுத்ததென்றால் அதற்குரிய அதிகாரங்களைப் பெறுவதற்கு ஒரு யுகம் கடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. மாகாணசபை முறைமையை இங்கு உருவாக்கிய முதுகெலும்பு இல்லாத இந்திய அரசு, அதிகாரங்களைப் பெற்றுத் தருமென நாம் ஒருபோதுமே எதிர்பார்த்துக் காத்திருக்க முடியாது. ஏனென்றால் இந்தியாவிடமிருந்து நிறையவே கசப்பான பாடங்களை நாம் கற்றுள்ளோம். எனவே ஏதோவொரு வகையில் ஜனநாயக ரீதியில் போராட வேண்டிய நிலைக்கு நாம் தற்போது தள்ளப்பட்டுள்ளோம். ஆனால் இது எவ்வாறு அமைய வேண்டுமென்பதை எமது தலைவர்கள் தான் தீர்க்கமாகச் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும் தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் மக்களின் வெறுப்பு அதிகரிக்கவே வழி செய்யும்.

எனவே எமது தலைவர்கள் பொறுத்திருப்பார்களா அல்லது வெகுண்டெழுவார்களா என்பதைக் காலம்தான் தீர்மானிக்க முடியும்.

# ஆரோக்கியத்தின் மருந்து பாதுகாப்பான உணவே

ஆ.ஜென்சன் றொனால்ட்
பொது சுகாதார பரிசோதகர்

**உணவே மருந்து என்று எமது முன்னோர்கள் வாழ்ந்த காலம் மலையேறி மருந்தே உணவாகி உணவெது மருந்தெதுவெனத் தெரியாது தவிக்கும் காலமிது.**



சரியான உணவும் உடல் உழைப்பும் சேர்ந்து ஆரோக்கியமான வாழ்வைத் தந்தது. ஆனால் உணவு என்பது பசிக்கும் சுவைக்கும் மட்டுமாகி உடல் உழைப்பென்பது அருகி வருவதனால் நாமும் பல நோய்களுக்கு ஆளாகின்றோம்.

### உணவுப் பாதுகாப்பு என்றால் என்ன?

உணவின் மூலம் பரப்பப்படும் நோய்கள் மக்களுக்கேற்படுவதைத் தடுக்க உணவினைக் கையாளுதல், தயாரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்துதலை விஞ்ஞான ரீதியாக மேற்கொண்டு உணவை பாதுகாப்பானதாக போசணை மிக்க தாக உள்ளெடுக்க வழி வகுப்பதே உணவுப் பாதுகாப்பாகும்.

உணவுப் பாதுகாப்பானது உணவுப் பொருளின் உற்பத்தியிலிருந்து ஆரம்பித்து உணவு சுட்டுத் துண்டிடல் (Labeling), உணவு சுகாதாரம் (Hygiene), உணவுடன் சேர்க்கும் சேர்மானங்கள் (Additives) மற்றும் பாதுகாப்பு பொருள்கள் வரை கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

உணவு ஒரு நபரிலிருந்து நோயை இன்னொருவருக்கு கடத்தக்கூடியனவையாக அமைந்து விடுகின்றன. ஏனெனில் இவை நோயாக்கும் பக்றீரியாக்கள் சிறப்பாக வளரக்கூடிய ஊடகமாக அமைகின்றன.

### உணவு நஞ்சாதல்

உணவுப் பாதுகாப்பு சரியாக பேணப்படாத பட்சத்தில் உணவு நஞ்சாதல் (Food Poisoning) ஏற்பட்டு நோய் நிலைமைகளும் இறப்பும் கூட ஏற்படுகின்றன.

உணவுநஞ்சாதல் நூறுவீதம் (100%) தடுக்கக்கூடியதாகும். உணவிலே பெருகும் நோயாக்கும் கிருமி களின் செறிவினாலும், அவை சுரக் கும் இரசாயனங்களாலும், உண வில் ஏற்படுத்தும் மாற்றங்களாலும் உணவு நஞ்சாதல் ஏற்படுகின்றது.

உணவு நஞ்சாதல் பெரும்பாலும் குறிப்பிட்ட உணவை உண்ட (நஞ்சாகிய உணவை) பலருக்கு ஏறத்தாழ ஒரே காலத்தில் ஏற்படுகின்றது. இது (Out breake of food poisoning) என அழைக்கப்படும்.

இந்தப் பாதிப்பில் பெரும்பாலும் வாந்தி, குமட்டல், வயிற்றுவலி, வயிற்றோட்டம், மயக்கம் எனும் அறிகுறிகள் ஏற்படுகின்றன. தீவிர நிலையில் நரம்புத் தொகுதியில் பாதிப்பு ஏற்படுவதால் இறப்புக் கூட நேரிடுகிறது. உணவு நஞ்சாதலை பல நுண்ணங்கிகள் ஏற்படுத்துகின்றன. இவற்றில் பக்றீரியா, வைரசுகள் அடங்குகின்றன.

### உணவுச் சுகாதாரம் பேணல்

உலக சுகாதார நிறுவனமானது உணவுச் சுகாதாரம் பேணும் நுட்பங்களை ஐந்து விடயங்களாக குறிப்பிடுகின்றது.

1. உணவுத் தொற்று ஏற்படுவதிலிருந்து பாதுகாத்தல்

மனிதர்கள், விலங்குகள், சுற்றாடல் மூலம் நோயாக்கும் நுண்ணங்கிகள் உணவுடன் தொடர்பை ஏற் படுத்துவதைத் தடுத்தல். இதற்காக உணவு கையாளுமுன் கை கழுவுதல், உணவுப் பொருள்களை நன்கு கழுவிச் சுத்தமாக்குதல் என்பன கைக் கொள்ளப்படுகின்றன. இங்கு கழுவுவதற்காக பயன்படுத்தும் நீர் பாதுகாப்பானதாக அமைய வேண்டும். குளோரீனேற்றப்பட்ட நீரை கழுவுவதற்காக பயன்படுத்துதல் மிகவும் சாதகமானதொன்றாகும். இதன் மூலம் நோயாக்கும் நுண்ணங்கிகள் அழிக்கப்படுவதோடு உணவு பழுதடையும் தன்மையிலிருந்தும் பாதுகாப்பு கிடைக்கிறது.

2. சமைக்காத மற்றும் சமைத்த உணவுகளை தனித்தனியாக வேறுபடுத்தல்.

உண்பதற்கு தயார் செய்திருக்கும் உணவுகளையும், சமைக்காத உணவுகளையும் ஒன்றுடன் ஒன்று தொடுகையுறாத வண்ணம் வெவ்வேறு பாத்திரங்களில் இட்டு மூடி வைத்தல். குறிப்பாக விலங்குணவுகளை இறைச்சி வகை, கடலுணவு வகை, பால் பொருள்கள் போன்றன சமைத்த உணவிலிருந்து வேறாகப் பேணப்பட வேண்டும். அத்துடன் உணவுகளை வெட்டப் பயன்படுத்தும் கத்திகள், வெட்டுப் பலகைகள் சமைத்த உணவுகளுக்கு தனியாகவும் பேணப்பட வேண்டும். விசேடமாக விலங்குணவுகள் போசணைப் பெறுமானம் கூடுதலாகக் காணப்படுவதால் இலகுவில் பழுதடையும் சாத்தியம் காணப்படுகின்றது.

3. சரியான முறையில் சமைத்தல்

உணவுப் பொருள்களை சமைக்கும் போது அவற்றின் தன்மைக்கேற்ப முழுமையாக ச் சமைக்க வேண்டும். இதற்காக பொருத்தமான நேரம் வரை, பொருத்தமான வெப்பநிலையில் பேணிச் சமைக்க வேண்டும்.

குறிப்பாக இறைச்சி வகைகளை சமைக்கும் போது இருபது நிமிடத்துக்கு மேல் 165 F வரை சூடாக்க வேண்டும். அதாவது உணவின் உட்பகுதி வேகும் வரை சமைக்க வேண்டும். குளிரூட்டியில் பேணப்பட்ட உணவாயின் அவை அறை வெப்பநிலை வரை வெளியில் பேணப்பட்டு அதன் பின்னரே சமைக்க வேண்டும். அவ்வாறன்றேல் உட்பகுதியில் சரியான வெப்பம் கிடைக் காது போக அங்கு நோய்க்கிருமிகள் பெருக வாய்ப்பாகின்றது.

4. பொருத்தமான வெப்பநிலையில் பேணுதல்

நுண்ணங்கிகள் பெருகக்கூடிய ஆபத்தான வெப்பநிலை வீச்சு (Danger Zone) 40 f-140 f வரையாகும். இந்த வெப்பநிலை வீச்சுக்கு கீழாக அல்லது மேலாக உணவுப் பொருள்களைப் பேணுவதன் மூலம், நோயாக்கும் நுண்ணங்கிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யலாம்.

சமைத்ததும் விரைவாக பொருத்தமான வெப்பநிலையில் உணவுப் பொருள்களை பேணுவதன் மூலம் பக்றீரியாக்களின் வளர்ச்சியைக் குறைத்து உணவு நஞ்சாதலைத் தடுக்க முடியும். சமைத்த உணவுகளை 1-2 மணித்தியாலங்களுக்குள் உரிய வெப்பநிலையில் பேணுதல் சிறந்தது.

குளிரூட்டிகளைப் பொறுத்தளவில் 40 f க்கு கீழாக அவற்றின் வெப்பநிலை எப்போதும் பேணப்பட வேண்டும். உறைய வைக்கும் பகுதி (Freezer area) அல்லது அதற்கு கீழாக பேணப்பட வேண்டும்.

5. பாதுகாப்பான நீரையும் சுத்தமாக்கிய உபகரணங்களையும் பயன்படுத்தல்.

உணவை கழுவுவதிலிருந்து சமைப்பது, பரிமாறுவது வரை பாதுகாப்பான நீரையே பயன்படுத்த வேண்டும். பாதுகாப்பான நீர் என்பது கொதித்து ஆறிய அல்லது குளோரீனேற்றிய அல்லது கிருமிகளின்றி வடிகட்டிய நீராகும். இதனையே பாத்திரங்கள் கழுவவும் பயன்படுத்த வேண்டும்.

### சந்தையில் பாதுகாப்பான உணவுகளை தெரிவு செய்வது எப்படி?

பொதி செய்யப்பட்ட உணவுகளில் சுட்டுத்துண்டு இடப்பட்டிருக்கும். இதில் ISO, SLS எனும் தரச்சான்றி தழ் குறியீடுகள் காணப்படலாம். எனவே ஒப்பீட்டு ரீதியில் இந்தச் சான் றிதழ் குறியீடு உள்ள பொருள்களை வாங்குவது நல்லது. சுட்டித்துண்டில் (Lable) குறிப்பிட்ட பொருள் பயன்படுத்தக்கூடிய காலத்தைக் குறிக்கும். காலாவதி திகதி காணப்படும். அவற்றை மிகக் கவனமாகப் பார்த்துக் கொள்வனவு செய்தல் வேண்டும்.

பொதி உடைந்து அல்லது கிழிந்தோ அல்லது உருவ அமைப்பில் மாறியிருந்தால் அதனைக் கொள்வனவு செய்து உண்பதை தவிர்த்தல் வேண்டும்.

குறிப்பாக தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பால் மற்றும் உணவுப் பொருள்களை வாங்கும்போது காலாவதித் திகதியை மட்டுமன்றி அவற்றின் வடிவம்- அதாவது கொள்கலன் வீங்கி அல்லது நெளிந்து இருந்தால் அவை உணவு நஞ்சாதலை ஏற்படுத்தக் கூடியவை எனும் அறிவுடன் அதனைத் தவிர்த்தல் சிறந்தது.

### கடலுணவுகள்

குறிப்பாகச் சந்தையில் கடலுணவுகளைக் கொள்வனவு செய்கையில் அவற்றின் பாதுகாப்புத் தன்மையை இலகுவாக உறுதிசெய்து கொள்ளலாம். மீன்களில் பூக்கள் கறுத்து, கண்கள் மங்கி, உடல் தசை நசியக் கூடிய நிலையில் காணப் படுமாயின் அவற்றைத் தவிர்த்தல் சிறந்தது. குளிரூட்டிய கடலுணவுகள் பழுத டைந்தவை எனும் அபிப்பிராயம் எம் மத்தியில் உண்டு. உண்மையில் அது தவறானது. கடலுணவை நீண்ட தூரத்துக்குக் கொண்டு செல்ல அல்லது அதிகமாக கிடப்பில் சேமித்து வைக்க விரைவாக குளிரூட்டுதல் சிறந்ததே. ஆனால் குளிரூட்டிய கடலுணவை அந்த நிலை மாறும்படி அதாவது குளிரற்ற நிலையில் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் வைத்து பின் மீண்டும் குளிரூட்டுதல் ஆபத்தை ஏற்படுத்தும். எனவே அவ்வாறு செய்வதை தவிர்த்தல் நன்று.

இன்னுமொரு தப்பான அபிப்பிராயம் எம் மத்தியில் உண்டு. அதாவது பழுதடைந்த மீன்கள் கருவாடாக்க உகந்தவை என்பதே. இதுவும் தவறுதான். நல்ல நிலையிலுள்ள மீன்களையே கருவாடாக்க வேண்டும். அத்துடன் கருவாடு காயப்போடும் இடம் சுத்தமானதாகவும், நிலத்திலுள்ள நுண்ணங்கிகளால் பாதிப்புக்குள்ளாமகாமல் சற்று உயரமான இடத்திலும் வைத்து முழுமையாக சூரிய வெப்பத்தால் உலர்த்துதல் வேண்டும்.

மீன்/ கடலுணவு விற்பனை செய்வோர் நிலமட்டத்திலிருந்து உயரமான மேடையில் மீனை வைத்திருப்பதும் அதனை கழுவி வைப்பதும் பழுதடைதலைக் குறைக்கும் உபாயங்களாகும்.

### பழ வகைகள்/ மரக்கறிகள்

சந்தையில் கிடைக்கும் பழ வகைகள் பாதுகாப்பானதா என்கின்ற கேள்வி எம்முன் எழுகின்றது. இது விடயம் சம்பந்தமாகவும் நாம் விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

வர்த்தக நோக்கோடு பழங்களைப் பழுக்க வைக்க ஓமோன்களை முற்றிய/ முற்றாத காய்கள் மீது விசிறுகின்றோம். இது ஆபத்தானது. தடை செய்யப்பட வேண்டியது.

அனுமதிக்கப்பட்ட எதிலீன் அடங்கிய ஓமோன்களை அவற்றை ஆவியாகச் செய்து பெட்டியினுள் பழங்களை இட்டு மூடிப் பழுக்கச் செய்வதே உகந்த முறையாகும்.

மரக்கறிகளைப் பொறுத்த வரை பயிர்ச் செய்கையில் பலவிதமான மருந்துப் பாவனையுடனேயே சந்தையில் கிடைக்கிறது. இதிலும் மரக்கறிகள் மீது நேரடியாக இரசாயனம் விசிறப்பட்டு பதினான்கு நாள்களின் பின்பு அறுவடை செய்து சந்தைப் படுத்துவதே பாதுகாப்பானது.

எனவே பழங்களையும் மரக்கறிகளையும் நன்கு கழுவியபின் உண்பதோ சமைப்பதோ நன்று. இதைவிடச் சிறப்பானது நாம் வீட்டுத் தோட்டம் செய்தலும், இயற்கை முறையில் பீடைகளைக் கட்டுப்படுத்தி அதனூடாகக் கிடைக்கும் பழங்கள், மரக்கறிகளைப் பாவிப்பதுமேயாகும்.

நாளுக்குநாள் தொற்றா நோய்கள் அதிகரித்து வருவதற்குக் குறிப்பாக புற்று நோய்க்கு இரசாயனம் விசிறப்பட்ட உணவுகளும் முக்கிய காரணிகளாக அமைகின்றன.

### இறைச்சி வகையை கையாளுதல்

மாடு, ஆடு, கோழி போன்ற இறைச்சி வகைகளை அவை இறைச்சியாக் கப்படும் இடம் மிகுந்த சுத்தமானதாகப் பேணப்பட வேண்டும்.

அவற்றின் மலத்தாலோ அல்லது மண்ணினாலோ மாசு ஏற்படா வண்ணம் பாதுகாப்பான ஓர் இடத்தில் அவை இறைச்சியாக்கப்படுவதும், கழிவுகள் நிலத்தின் கீழாக பாதுகாப்பாக அகற்றப்படுவதையும் உறுதி செய்தல் வேண்டும். இந்த இடங்கள் சுகாதார தொழில்நுட்ப அறிவுசார் மிருக வைத்தியர்கள் அல்லது பொது சுகாதார பரிசோதகர்களின் கண் காணிப்புக்கு உட்படுதல் சிறந்தது.

உணவு கையாளும் நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருப்பதும் அவர்கள் உணவு உற்பத்தி செய்யும் இடங்களைத் தொற்று ஏற்படாத வகையில் பேணுதலும் முக்கியமானதாகும்.

அத்துடன் அச்சிடப்பட்ட தாள்களில் உணவுப் பொருள்கள் நேரடியாகப் படும்படி பொதி செய்வதைத் தவிர்ப்பதும் கேட்கப்படும் உணவுகளை மட்டும் உணவு இடுக்கிகளைப் பயன்படுத்திப் பரிமாறுவதும், நிறுவனத்தின் திரவ, திண்மக் கழிவுகளை ஈ உட்புகாத வகையில் அகற்றுவதும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தும்.

### பொது வசதிகளை பாதுகாப்பானதாக்குதல்

குறிப்பாக நகர்ப்புறங்கள், பஸ் தரிப்பு நிலையங்களையொட்டி பொது மல கூடங்கள், நீர் வசதி என்பன மக்கள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும். இவை முறையாகப் பராமரிக்கப்படாவிடின் உணவுப் பாதுகாப்பைப் பெரிதும் பாதிப்புற வைக்கும். மல கூடங்கள் வெடிப்புடனும், மலக் கழிவுகள் வெளியேறியும் காணப்படுமானால் இலையான்களில் உணவுப் பொருள்கள் இலகுவில் மலமாசுக்குட்படுத்தப்படும். அத்துடன் வழங்கப்படும் குடிதண்ணீர் குளோரீனேற்றப்படாது வழங் கப்படுமாயின் அதுவும் உணவுத் தயாரிப்பின்போதும், கையாளுதலின் போதும் மாசுபட வைத்து உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும்.

### ஈ கட்டுப்பாடு

உணவுப் பாதுகாப்பை கேள்விக் குறியாக்குவதில் ஈ யின் பங்கு மிக முக்கியமானது. எனவே உணவு உற்பத்தி நிலையங்கள் முக்கியமாக ஈயினைக் கட்டுப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். கழிவு நீரானது நிலத்தின் கீழான தொட்டி அல்லது ஊறு குழியினுள் அகற்றப்படுவதும், சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள் ஈ புகாதபடி மூடிய குப்பைக் கூடைகளினுள் சேகரித்து பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதும் முக்கியமானதாகும். எனவே உணவுப் பாதுகாப்பு என்பது எமது வாழ்வில் மிகவும் முக்கியமான தென் பதால் நாம் அனைவரும் விழிப் புடனும் பொறுப்புணர்வுடனும் செயற் பட வேண்டும்.





## புதுக்குடியிருப்பு வர்த்தகர் சங்கத்துக்கு தெரிவாகினர் புதிய நிர்வாகிகள்

புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த 22 ஆம் திகதி மாலை 4 மணியளவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் குறித்த நிர்வாகத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

இதன் தலைவராக மீண்டும் கி.துரைரட்ணமும், செயலாளராக க.தவரட்ணமும், பொருளாளராக அனிதனும் ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

போருக்குப் பின்னர் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம் புனரமைக்கப்பட்டு வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமை தொடர்பாகத் தாம் மகிழ்ச்சியடைவதாக வர்த்தக சங்கத் தலைவர் கி.துரைரட்ணம் தெரிவித்தார்.

இதேவேளை-புதுக்குடியிருப்பு பொதுச் சந்தைக்கு ஒரு நிரந்தரக் கட்டடம் அமைக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்தி வடமாகாண சபை உறுப்பினரான வீ.கனகசுந்தரசுவாமியின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளதாக வர்த்தகர் சங்கத்தின் செயலாளர் க.தவரட்ணம் தெரிவித்தார். (க)

## கஸினோ பிரச்சினையை திசைதிருப்ப ஹலால் எதிர்ப்பைக் கிளப்பி விட்டது அரசு

### சாடுகிறது ஐ.தே.க.

கொழும்பு,ஒக்.26

அரசு, கஸினோ பிரச்சினையிலிருந்து நாட்டு மக்களை முற்றாக திசைத்திருப்பவே, பொதுபல சேனா அமைப்பைக் கொண்டு ஹலால் பிரச்சினையை மீண்டும் தூண்டிவிட்டுள்ளது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மேல்மாகாண சபை உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் குற்றம் சாட்டியுள்ளார்.

அரசின் தேவைக்காகவே பொது பல சேனா அமைப்பு நாட்டில் செயற்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது கஸினோ பிரச்சினை தலைத்தூக்கியுள்ளது. இந்தப் பொது பல சேனா அமைப்பினர் அமைதியாக இருக்கும் ஹலால் சர்ச்சையை மீண்டும் தூண்டி விட்டு போராட்டங்களை நடத்துகின்றனர்.

அரசினால் அமைக்கப்படவுள்ள கஸினோ சூதாட்ட நிலையம் குறித்து மக்கள் அனைவரும் ஒன்றுகூடி எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள். இதனால், மக்களை எப்படியாவது இதிலிருந்து திசைத் திருப்பிவிட வேண்டும் என்ற நோக்குடனேயே அரசு பொது பலசேனா அமைப்பைத் தூண்டி விட்டுள்ளது. இது நாட்டின் அமைதியைச் சீர்குலைக்கும் செயலாகும்.

அரசிலுள்ளவர்களே கஸினோவை எதிர்க்கும் போது அரசினால் ஒன்றும் செய்து கொள்ளமுடியாத ஒரு சூழ்நிலை காணப்படுகிறது. இதற்காக கஸினோ பிரச்சினைக்குப் பதிலாக ஹலாலை எதிர்த்து மக்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்த அரசு தீர் மானித்தே இந்த அமைப்பைத் தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கிறது. அரசின் கட்டளைக்கமையவே இந்த அமைப்பும் செயற்படுகிறது. இதை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதுமட்டுமன்றி, தற்போது நாட்டிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் அரசைப்பற்றியும் பொது பல சேனா அமைப் பினரைப் பற்றியும் நன்கு உணர்ந்திருக்கக்கூடும். இதனால், நாம் இந்தப் பிரச்சினை தொடர்பாக மக்களுக்கு உணர்த்த வேண்டிய தேவையில்லை.- என்றார்.

## நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் கஸினோ வர்த்தமானி நீக்கம்

கொழும்பு,ஒக் 26

கஸினோ சூதாட்ட வசதிகளுடன் கூடிய இரண்டு ஆடம்பர ஹோட்டல்களை நிர்மாணிக்க அனுமதி வழங்கும் இரண்டு வர்த்தமானி அறிவித்தல்கள் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கப்படும் என அமைச்சரும் சபை முதல்வருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

புதன்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பில் இன்றும் நேற்றும் விவாதம் நடைபெறவிருந்தது.

எனினும் அவை குறித்த விவாதம் இடம்பெறாது எனவும் அதற்குப் பதிலாக வேறு இரண்டு சட்டவரைவுகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

**இந்த இரண்டு வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பில் நேற்றும் இன்றும் விவாதம் நடைபெறவிருந்தது.**

விளையாட்டுகளில் கலந்து கொள்ளும் வீரர்கள் ஊக்க மருந்து பயன்படுத்தத் தடைவிதிக்கும் சட்டவரைவு மற்றும் பௌத்த விகாரைகள் ஆலயங்கள் திருத்தச் சட்டவரைவு ஆகியவை இவ்விரு தினங்களில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நாடாளுமன்றத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (கு)

## வவுனியா கூமாங்குளத்தில் சர்வதேச முதியோர் தினவிழா

வவுனியா, ஒக்.26

வவுனியா கூமாங்குளம் முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச முதியோர் தினவிழா இடம்பெற்றது.

இந்த விழா கடந்த 22 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் கூமாங்குளம் முதியோர் சங்கத் தலைவர் பிலிப் வரப்பிரசாதம் தலைமையில் ஆரம்பமாகியது. இதில் முதன்மை விருந்தினராக வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரவும், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.கிஷோர், முன்னாள் நகரபிதா எஸ்.ஐ.நாதன், நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமரக்கோன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



இதன்போது முதியோர் சங்கத் தலைவர் பிலிப் வரப்பிரகாசம், இளைஞர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான சுப்பையா சுதர்சன், விளையாட்டில் தேசிய மட்டத்தில் சாதனைபுரிந்த குமார் நவநீதன், கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலய அதிபர் தர்மலிங்கம் தர்மகடாட்சம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலய மாணவர்களான ஈஸ்வரன் ஜதுர்சன், ஜெயகுலேந்திரன் வினோஜன் ஆகியோருக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (க-435)

## இன்றைய நாள்

தருவது வித்தியா

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அரசால் ஆதாயம் உண்டு. எங்கு சென்றாலும் நல்ல வரவேற்புக் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**இடபம்:** காணாமல்போன முக்கிய ஆவணம் கிடைக்கும். பிற்போடப்பட்ட வியங்கள் உடனே முடியும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மிதுனம்:** ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளைப் பார்க்க வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒருபதற்றம் இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**கடகம்** :தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உறவினர்களுடன் மனத்தாங்கல் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரியால் பிரச்சினைகள் வரக்கூடும்.

**சிங்கம்:** சாணக்கியத்தனமாகப் பேசிச் சாதிப்பீர்கள். நம்பிக்கைக்குரியவர்களுடன் ஆலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**கன்னி:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பழைய உறவினர், நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். முயற்சியால் முன்னேறுவீர்கள்.

நாளை

ஐப்பசி-10 ஞாயிற்றுக்கிழமை 27.10.2013
திதி: அட்டமி பி.ப.04.52 வரை
நட்சத்திரம்: பூசம் மாலை.06.30 வரை
சுபநேரம்: 09.03 - 10.33 வரை
இராகுகாலம்: 04.33 - 06.03 வரை

**துலாம்:** நீண்டநாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**விருச்சிகம்:** உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**தனுசு:** புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மகரம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கும்பம்:** ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதிய நட்பு மலரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலியவந்து உதவுவார்கள். .

**மீனம்:** தடைகளைக் கண்டு தளரமாட்டீர்கள். வியாபாரத்தில் அதிரடிச் சலுகைகள் மூலம் இலாபமடைவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிடைக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | | | | | 2 | 8 | 9 |
| | | 4 | | | 1 | | 3 | 6 |
| | | | 3 | | | | 5 | 1 |
| | | 2 | | 7 | | 1 | | 5 |
| | | | 1 | | 5 | | | |
| 1 | | 6 | | 4 | | 8 | | |
| 6 | 2 | | | | 4 | | | |
| 7 | 1 | | 6 | | | 5 | | |
| 9 | 4 | 5 | | | | | 2 | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 8 | 4 | 5 | 9 | 2 | 6 | 7 |
| 9 | 2 | 7 | 1 | 6 | 3 | 4 | 8 | 5 |
| 5 | 4 | 6 | 7 | 2 | 8 | 9 | 1 | 3 |
| 7 | 8 | 5 | 2 | 3 | 1 | 6 | 4 | 9 |
| 1 | 6 | 4 | 5 | 9 | 7 | 8 | 3 | 2 |
| 2 | 9 | 3 | 6 | 8 | 4 | 5 | 7 | 1 |
| 4 | 5 | 1 | 9 | 7 | 6 | 3 | 2 | 8 |
| 6 | 3 | 9 | 8 | 1 | 2 | 7 | 5 | 4 |
| 8 | 7 | 2 | 3 | 4 | 5 | 1 | 9 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்கலை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## கதைநேரப் போட்டி

தென்மராட்சி, ஒக்.26
வரணி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளாக சிறார்களுக்கான கதை நேரமும், படக்காட்சியும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறுமென நூலகர் பொ.இரவீந்திரன் தெரிவித்தார். (ந-9)

## பொதுக் கூட்டம்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்க மாதாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந)

## இரத யாத்திரை விழா

ஸ்ரீ ஜெகந்நாதரின் இரத யாத்திரை விழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.
ஸ்ரீ ஜெகந்நாதர், ஸ்ரீ பலராமர், ஸ்ரீசுபத்திரா, சகிதம் வண்ணை ஸ்ரீ வேங்கடேஷ்வரப் பெருமாள் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி நாவலர் வீதி, மணிக்கூட்டு வீதி, ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ்.வீதி, ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதி, நல்லூர்பருத்தித் துறை வீதி ஊடாக கோயில் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தை சென்றடையும்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (ந)

## கலைவிழா

அபிராமி பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் கலை விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.
பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் எ.பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான கேசவன் சஜந்தன் கலந்து கொள்வார். (ந)

## தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம்,ஒக்.26
கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் குட்டிச்சுட்டி முன்பள்ளியின் தமிழ்த் தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பிரதான மண்டபத்தில் தலைவர் ம.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இராமகிருஷ்ண மகா வித்தியாலய ஓய்வு பெற்ற ஆசிரியர் கந்தையா முருகதாசனும் சிறப்பு விருந்தினராக விவசாய ஆராய்ச்சி உதவியாளர் ப.பாலகிருஷ்ணன், உத்தரவு பெற்ற நில அளவையாளர் அ.அருள்நேசன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஒ-23)

## இன்றும் நாளையும் மின்தடை

யாழ்ப்பாணம், ஒக்.26
சுன்னாகம் புதிய மின் நிலையத்தின் மின்பரிமாற்றல் வலையமைப்பில் இணைப்புகளை சீர்செய்வதற்காகவும், புதிய இணைப்புகளை மின்வழங்கல் கட்டமைப்புடன் இணைக்கும் வேலைகளுக்காகவும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கந்தரோடை, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், கட்டுடை ஒரு பகுதி, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, மாவிட்டபுரம், அளவெட்டி, பன் னாலை, வித்தகபுரம், நகுலேஸ்வரம், கீரி மலை, கொல்லங்கலட்டி, சுன்னாகம், மருதனார் மடம் ஒரு பகுதி, உடுவில் ஒரு பகுதி, இணுவில், கோண்டாவில், உரும்பிராய், பலாலி வீதி, கொக்குவில், ஆடியபாதம் வீதி, நாச்சிமார்கோயிலடி, பூநாறிமரத்தடி, கோம்பையன்மணல் பிரதேசம், உரும் பிராய், மருத்துவபீடப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை சுன்னாகம், மருதனார்மடம், உடுவில் ஒரு பகுதி, இணுவில், கோண்டாவில், உரும்பிராய், பலாலிவீதி, மருத்துவபீடப் பிரதேசம், கொக்குவில், ஆடியபாதம் வீதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஒறேற்றர் சுப்பிரமணியம் அரங்கில் நடைபெறும்.
கல்லூரி அதிபர் இ.ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவர் க.சிவகுமார், சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி யின் யாழ். மாவட்ட சிரேஷ்ட முகாமையாளர் தி.குமாரும் கலந்து கொள்வர்.
நிறுவுநர் நினைவுப் பேருரையை மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.விக்னேஸ்வரனும் ஆசியுரையை மருதடிப் பிள்ளையார் ஆலயக் குருக்கள் பிரம்மஸ்ரீ பி.ஜெயக்குமாரக்குருக்களும் நிகழ்த்தவுள்ளனர். திருமதி ஜெயபவானி சிவகுமார் பரிசில்களை வழங்கி மதிப்பளிப்பார். நிகழ்வில் நன்றியுரையை பிரதிஅதிபர் திருமதி சா.நாகராஜா வழங்குவார். (ந)

## 'துடிப்பு' குறும்பட வெளியீடு

'துடிப்பு' குறும்பட வெளியீட்டு விழா கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் இ.இராசசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி கலந்து கொள்வார். (ந)

## வெள்ளி விழாவும் மலர் வெளியீடும்

காரைநகர், ஒக்.26
காரைநகர் சிவகௌரி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளி விழாவும் மலர் வெளியீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பெரியமணல் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சிவகௌரி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சு. விசுவலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன், சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி, யாழ்.மாவட்ட சிக்கன கடன் கூ.சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.
வெள்ளிவிழா மலரின் மதிப்பீட்டுரையினை ஓய்வு நிலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்செ.கனகசபாபதி நிகழ்த்தி நூலை வெளியிட்டு வைக்க காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் சிவா.தி. மகேசன் பெற்றுக் கொள்வார். நிகழ்வில் கலை நிகழ்வுகளும் நடைபெறும். (ந-250)

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 07.01.1932
இறப்பு 26.10.1999
அமரர் சுவாமிநாதர் சிறிபாஸ்கரன்
அன்னாரின் அஞ்சலி நிகழ்வு இன்று (26.10.2013) சனிக்கிழமை சிறிபாஸ்கரன் ஞாபகார்த்த மண்டபத்தில் (R.D.S மண்டபம்) பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.
பாலாம்பிகை சிறிபாஸ்கரன்
(மனைவி)
(33272) (45.6)

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி புஸ்பராணி ஸ்ரீதரன்
மண்ணில் 15.08.1960
விண்ணில் 05.11.2012
எங்கள் அன்பு அன்னையின் உறவைப் பிரிந்து ஓராண்டு கழிந்தாலும் – பாசத்தின் நிறைகுடமாய் பரிவுடன் எம்மை வளர்த்து ஆளாக்கிய உங்கள் நினைவுகளோடு என்றும் நாம் இருப்போம்.
உங்கள் ஆத்மா இறைவனடி சேர பிரார்த்திக்கிறோம்
சிவநகர், உருத்திரபுரம், பருத்திக் கலட்டி, சுன்னாகம்.
என்றும் உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி பராசக்தி கனகரட்னம்
தோற்றம் 11.01.1932
மறைவு 26.09.2013
நாள்கள் 31 ஆனாலும் அணையாத தீபமாய் என்றும் எம் நினைவில் குடிகொண்டிருப்பீர்கள் உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.
அன்னாரது இறுதிக்கிரியைகளில் பங்கெடுத்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
கொழும்பு. பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி சதாசிவம்



தட்டாதெரு, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி அன்னலட்சுமி சதாசிவம் நேற்று (25.10.2013) வெள்ளிக்கிழமை அதிகாலை இறைபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும், துரைராசா, சுசீலாதேவி, தர்மராசா, ஜெயதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுசீலாதேவி, சிவயோகநாதன், சொர்ணமலர், கிருஷ்ணசாமி ஆகியோரின் அன்பு மாமியும் மாலினி, ஸ்ரீசங்கர், துஷ்யந்தி, சுதர்சினி, குணசீலன், நிரோஜன், சிந்துஜா, டேனுகா, லோஜனா, சதீஸ் ஆகியோரின் அன்புப் பாட்டியும், ஹம்சவேணி, தரண்ஜன், சுஜானி, டன்சிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.10.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
தகவல்:ச.துரைராசா [தேங்காய் துரை] [மகன்]
தட்டாதெரு, சங்கத்தானை, சாவகச்சேரி. (C/2769)(7,6,3)


## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 15.03.1936
உதிர்வு 30.09.2013
அமரர் கதிர்காமு சுப்பிரமணியம்

கடந்த 30.09.2013 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்ப தீபம் கதிர்காமு சுப்பிரமணியத்தின் அமரத்துவம் செவியுற்று இறுதிச் சடங்கில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், புதுக்குடியிருப்பு, கரவெட்டி போன்ற இடங்களிலிருந்து வந்து கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கலந்து கொண்டநாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள்,உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும், அரச ஊழியர்கள்,வாடி வீட்டு ஊழியர்கள் இரங்கலுரை நிகழ்த்திய அன்பர்கள், பெரியோர்கள் மற்றும் தோணிக்கல் ஐயா மரண உதவி சங்கத்தினருக்கும்,சகல கிரியைகளையும் நடத்தி வைத்த அந்தணப் பெரியோர்கள், கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு வெளியிட்டோர், உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு,
அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 28.10.2013 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண நிகழ்வுகள் 30.10.2013 புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*
மா. கதிர்காமராஜா (புஸ்வாடி வீடு)
இல.296, முதலாம் ஒழுங்கை,
சிவன்கோயிலடி, தோணிக்கல்,வவுனியா.
குடும்பத்தினர்.
(29824) (3.5.6)

# மரண அறிவித்தல்கள்




## சுப்பிரமணியம் தியாகராஜா

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், சின்னாலடி, காரை நகரை வசிப்படமாகவும், தற்போது இல. 52A, வஜிர வீதி, கொழும்பு 05ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கம்பஹா பிரபல வர்த்தகர் **சுப்பிரமணியம் தியாகராஜா** 23.10.2013 (புதன் கிழமை) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற வர்த்தகர் சுப்பிரமணியம் மற்றும் செல்லாச்சிப்பிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற மாணிக்கம் அவர்களின் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு மற்றும் வள்ளியம்மை தம்பதியினரின் மருமகனும். **காலஞ்சென்ற மகேஸ்வரன் (முன்னாள் இந்து கலாசார அமைச்சர்)** மற்றும் பரமேஸ்வரன், விக்கினேஸ்வரன், ஞானேஸ்வரன், துவாரகேஸ்வரன் திருமகள் ஆகியோரின் தந்தையாரும், விஜயகலா, சுதர்சினி, ஜெயசங்கரி, நிறைமதி, சிவமலர், சுரேந்திரன் ஆகியோரின் மாமனாரும். பவதாரணி, பிரணவன், பவித்திரா, நிலுக்ஷன், நீபன், நிதுரன், கோகுலன், நேத்திரா, அனோஜன், அஸ்வின், அரவின், சஜீவன், சரன், சேயோன், சயன், சகி ஆகியோரின் பேரனாரும் சிவசோதி, பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், சரஸ்வதி, செல்லம்மா, மீனாட்சிப்பிள்ளை, சின்னாச்சிப்பிள்ளை, இராசநாயகம், மாரிமுத்து, சுப்பிரமணியம் மற்றும் யோகம்மா பரமேஸ்வரி அம்பலவாணர் பூரணம் மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் மற்றும் தாட்சாயினி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், கணபதிப்பிள்ளை குமாரசுவாமி, வைத்திலிங்கம், பரமசிவம் மற்றும் ஏனாதிநாதன் ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக **52A, வஜிரா வீதி, கொழும்பு 05 இலுள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் 27.10.2013 (ஞாயிற்றுக் கிழமை) காலை 7.00 மணிக்கு இல்லத்தில் ஆரம்பமாகி தகனக்கிரியைகள் காலை 9.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் இடம்பெறும்.** இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**- தகவல் : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**தொ.பே. இல.: 0777 306473 (பரமேஸ்வரன்), 0777 306304 (சுரேந்திரன்), 0777 674119 (துவாரகேஸ்வரன்), 077 2514988 (ஞானேஸ்வரன்), 075 8054599 (விக்கினேஸ்வரன்)**

## சுப்பிரமணியம் கைலாயபிள்ளை

*(முன்னாள் வர்த்தகர்)*



வேலணை வடக்கு சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும், சரவணை கிழக்கு பள்ளம் புலத்தை வசிப்பிடமாகவும், லண்டன் Eastham ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கைலாயபிள்ளை 18.10.2013 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா-சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பூங்காவனம் அவர்களின் அன்புக் கணவரும், திருநீலகண்டன் (உரிமையாளர்- Lakshmis Jewellers, London), பவானந்தன் (உரிமையாளர் - Thurrok Mini Market-Grays - UK), கலா (UK), தயா (UK), வசந்தி (UK), பத்மநாதன் (U.Tc Aero Space System - UK), ஜெகநாதன் (சுவிஸ்), சிவநாதன் (Earith Post Office – UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுமதி (UK), செந்தி (UK), அருளாளர் அமுதன் (UK), பாலகுமார் (UK), சிவானந்தன் (UK), சித்திராதேவி (UK, ஆசிரியை மேற்கு லண்டன் தமிழ் பாடசாலை), சிவநேசமலர் (சுவிஸ்), சிவலோஜினி (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வர்களான முத்துலிங்கம், கனகம்மா மற்றும் இராசையா (கனடா), சிவராசா(கனடா) ஆகியோ ரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் சீவரட்ணம் (UK), ரேவதி (கனடா), புவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான தங்கம்மா, விசாலாட்சி மற்றும் தியாகராஜா (UK), அன்னம்மா(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் Newham Town Hall, Barking Road, Eastham, London இல் நடைபெற்று பிற்பகல் 12.30 மணியளவில் City of London Crematorium, Alders Brook Road, Manor Parkஇற்கு தகனத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| மனைவி | (பிரித்தானியா - தொலைபேசி - + 442085525747) |
| திருநீலகண்டன் | (மகன் - பிரித்தானியா - தொலைபேசி - + 447949775800) |
| பவானந்தன் | (மகன் - பிரித்தானியா - தொலைபேசி - + 441375463458) |
| கலா அமுதன் | (மகள் - பிரித்தானியா - தொலைபேசி - + 447849317400) |
| ஜெகநாதன் | (மகன் - சுவிஸ் - தொலைபேசி - + 41319111389) |

(சி/13327) (7.6.3)

## நூல் வெளியீடு

உள வள ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் எழுதிய 'மாணவர் ஆரோக்கிய மேம்பாடு' நூல் வெளியீடு இணுவில் அறிவாலயத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அறிவாலயத் தலைவர் லயன் அ.குகதாசன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக கலாநிதி ஆறு.திருமுருகன், திரு. திருமதி சிவஞான சம்பந்தப்பிள்ளை ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா, சட்டத்தரணி சோ.தேவராசா, இணுவில் இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளை, இணுவில் மத்திய கல்லூரி அதிபர் நா.சிவனேசன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ந)

## முதியோர் தினவிழா

வவுனியா, ஒக்.26
வவுனியா பிரதேச செயலக மட்ட முதியோர் தின விழா வவுனியா பூவசரங்குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
பிரதேச செயலர் க.உதயராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திரவும் கௌரவ விருந்தினரான வவுனியா பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம் உட்பட பலரு கலந்து கொள்வர்.
இந்த நிகழ்வில் முதியோர், சிறுவர்களின் கலை நிகழ்வுகள், பரிசளிப்பு, முதியோர் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற வுள்ளன.

◆◆◆

யாழ்ப்பாணம், ஒக்.26
வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக சர்வதேச முதியோர் தினவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.
பிரதேச செயலர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெறும் விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட உதவிச் செயலாளர் சா.சுதர்சன், யாழ்.மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ஆ.ஞானவேல், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், யாழ்.பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலரும், சமூக சேவைகள் அமைச்சின் சிபிஆர் செயற்றிட்ட மாவட்ட இணைப்பாளருமான வ.சுரேஸ்குமார், ஏஞ்சல் சர்வதேச பாடசாலைப் பணிப்பாளர் போதகர் சாம் ராஜசூரியர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு.விமலன் ஆகியோரும் கலந்து கொள்வர்.
அன்றைய தினம் காலை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும். (ந-9-8-100)

## தரம்-6 க்கு மாணவர்களை இணைத்தல்

தென்மராட்சி, ஒக்.26
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் தரம் 6 வகுப்புகளுக்கு மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் கல்லூரி அதிபரினால் கோரப்பட்டுள்ளன.
தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் வகுப்புகள் நடத்தப்படவுள்ள தால் விண்ணப்பங்களை நவம் பர் முதலாம் திகதிக்கு முன்னர் கல்லூரி அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கு மாறு அதிபர் த.அம்பலவாணர் அறிவித்துள்ளார்.
இதேவேளை-ஆங்கில மொழி மூலம் கற்க விரும்பும் மாணவர்களுக்கு ஆங்கில மொழி விருத்திக்கான மூன்று மாதக் கற்கைநெறி நவம்பர் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். (ந-9)

## வருங்கால வரலாற்றை எழுதும் சிற்பிகள் நீங்கள் தான்

யாழ்ப்பாணம், ஒக்.26
கல்வியை முழுமையாகப் பெற இளமைப் பருவமே சாலச் சிறந்தது. வாழ்வில் வசந்தம் வீசி பொறுப்புக்கள் மறைந்து பூரிக்கும் இளமையை நொடிப் பொழுதும் வீணாக்காதே. பெற்ற தாயை நீ நேசித்தால்-பிறந்த பொன் நாட்டை பூசித்தால் இந்த திருநாட்டில் பிறந்த பயனை நழுவவிடமாட்டாய்.
இவ்வாறு ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு தெரிவித்தார்.
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா வில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்தப் பாடசாலையை நிறுவிய உயர்திரு. பரராசசிங் கம் முதலியார் செகராஜசிங் கம் என்ற சான்றோனை நினைக்கும் மகத்தான இந் நாளில் என்னருமைச் சிறார்களே, மாணவர்களே நீங்கள் தான் இந்த நாட்டின் நரம்புகள், ஈட்டி முனைகள், பாடசாலை நாற்புற மதிலுக்குள்ளே சரித் திர ஏடுகளை புரட்டும் நீங்கள் தான் இந்த நாட்டின் வருங் கால வரலாற்றை எழுதப் போகிறீர்கள் என்பதை மனதில் கொள்ளுங்கள்.
சிந்தனைச் சிற்பிகளும் சீர் திருத்த வாதிகளும் விஞ்ஞான அரசியல் மேதாவிகளும் அன்னை திரேசாவும், செல்வி தங்கம்மா அப்பாக் குட்டியும், பேரறிஞர் அண்ணாவும் டாக்டர் அப்துல் கலாமும் இடி இடித்துப் பெய்த மழையோடு வானத்திலிருந்து வந்தவர்களல்ல.
கே.பி.சுந்தராம்பாளின் வரலாற்றை படியுங்கள். அறிஞர் அப்துல் கலாம் எப்படி வாழ்ந்தார். பின் எப்படி உயர்ந்தார், அவற்றைப் படியுங்கள்.
வீடு தோறும் ஓர் அறையில் கிடக்கின்ற முட்டாள் பெட்டிகளில் காண்பிக்கப்படும் நல்லவற்றை பாராது, குடிவெறி, கொலை, கொள்ளை, பலாத்காரம் ஆகியவற்றை இந்தச் சிறுபாலகர்கள் பார்த்து விட்டு இப்பஞ்சமா பாதகங்களை செய்கின்றனர். போதாக்குறைக்கு தங்கைக்கு ஒன்று, தம்பிக்கு ஒன்று, தாய்க்கு வேறு, தந்தைக்கு வேறு என்று கைத்தொலைபேசிகள் ஓயாது ஒலிக்கின்றன.
இவற்றில் பார்க்கக் கூடாத படங்களை போட்டு பள்ளி மாணவர்கள் பரிமாறுகின்றனர். ஆசிரியர் தண்டித்தால் ஆசிரியரை கோட்டில் ஏற்றும் காலமே இன்று நடைபெறுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-50)

## கலைவிழாவும் பரிசளிப்பும்

காரைநகர், ஒக்.26
காரைநகர் கிழவன்காடு கலா மன்றம் நடத்தும் கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற உள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினர்க ளாக யாழ். பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி சரஸ்வதி சிவலிங்க ராஜா ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகரப் பிரதேச செய லர் எஸ். தயானந்தா, காரைநகர் பிர தேச செயலர் திருமதி தேவந்தினி பாபு ஆகி யோரும், கௌரவ விருந்தினர்களாக யாழ். பல் கலைக்கழக மருத்து வபீட சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். கண்ணதாசன், விக்ரோறியா கல்லூரி ஆசிரியை ஸ்ரீதேவி கண்ணதாசன், கலா மன்ற கௌரவ உறுப்பினர் சிவஞானம் உமா தேவி தம்பதியினர் ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளனர்.
கலாமன்றத் தலைவர் ந.சோதி நாதன் தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில் கலாமன்ற மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (ந-250)

## திருமூல நாயனார் குருபூசை

இந்து சமய கலாசார அலுவல் கள் திணைக்களம் நடத்தும் திருமூல நாயனார் குருபூசை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் மணி மண்டபத்தில் இந்து கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுதர்சன் தர்ப்பணா தலைமையில் நடை பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தின ராக இந்து கலாசார அலு வல்கள் திணைக்களத்தின் அறநெறிப் பாடசாலைகளின் உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரனும் சிறப்பு விருந்தினராக இந்து கலாசார அலுவல்கள் திணைக் கள உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கமும் சொற்பொழி வாளர்களாக சைவப் புலவர் கந்த சத்தியதாசன், சைவப் புலவர் நித்திய தசிதரன், இந்து தர்ம ஆசிரியர் த.மனோஜ் குமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (ந-86)


SINGER Plus
மெகா சேல் !
தீபாவளியை முன்னிட்டு சிங்கர் பிளஸ் நிறுவனத்தின் மாபெரும் மலிவு விற்பனை
சகல வீட்டுப் பாவனைப் பொருட்களுக்கும் 60% வரை விசேட விலைக்கழிவுகள்
இடம்: SINGER Plus காட்சி அறை
இல,1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (சிறிநதியா கட்டடம்)
காலம்: 25.10.2013 தொடக்கம் 10.11.2013 வரை
காலை: 9.00 மணி - மாலை 7.30 மணி
விநியோகம் இலவசம்
தொ.பே: 021 222 5408
கையிருப்பு உள்ள வரை மட்டும்

யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
தரம் 6 அனுமதி - 2014
தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தமிழ்மொழி மூலமும், ஆங்கில மொழி மூலமும் பயில விரும்பும் மாணவர்கள் தங்களது விண்ணப்பங்களை 10.11.2013இற்கு முன் எமக்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.
அதிபர்
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
(C/13404)(7.6)

VACANCY
யாழ் மாநகரில் அமைந்துள்ள பிரபல Tilko Jaffna City Hotel இற்கு அனுபவம் வாய்ந்த Store keeper தேவை.
குறிப்பிட்ட துறையில் 5 வருடத்திற்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.
- IT அறிவு கொண்டிருத்தல்.
- வயதெல்லை 35 - 45
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
கீழ்வரும் e-mail ID இற்கு உங்கள்சுயவிவரக் கோவையை உடனடியாக அனுப்பிவையுங்கள்.
gm@cityhoteljaffna.com
தொடர்புகளுக்கு அழையுங்கள்:
077 769 6553
No. 70/6, K.K.S. Road, Jaffna.
(சி/33303)(7.6.3)

விற்பனைக்கு
இரண்டு (2) PHOTOSTAT MACHINE விற்பனைக்குண்டு
C. MAHESAN
384, Navalar Rd,
லிங்கம் பேக்கரி முன்பாக
கைலாசபிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(33306)(10,14)

விற்பனைக்கு
ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான பெண், ஆண் பொமேரியன் குட்டிகளும், வான் கோழி, மணிதாரா, வண்டம், வெள்ளடியன் குஞ்சுகளும், ஒரு வயது நிரம்பிய பசுக்கன்றும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: லி.மயூரன்
ஆயக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
பூதராயர் கோயிலடி, டயலொக் ரவர் அருகில்.
(33308)(10,14)

கம்பியூட்டர் மற்றும் கணித வகுப்புக்கள்
சிறுவர்களுக்கான கம்பியூட்டர் பயிற்சி, ஆரம்ப நிலையினருக்கான கம்பியூட்டர் பயிற்சி, ICT, GIT for O/L & A/L, Internet & Email மற்றும் கணித வகுப்புக்கள் Grade 6 to O/L & A/L நடைபெறுகின்றன.
(சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன)
சிமியோன் ரெக்னோ பார்க், இல.4, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். 077 4309 139
(33307)(10,14)

வீடு வாடகைக்குத் தேவை
திருநெல்வேலி, நல்லூர், கந்தர்மடம் அண்டிய பகுதியில் சிறிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 261 9409
(33294)(7.6)

காணி விற்பனைக்கு
தென்மராட்சிப் பகுதி எழுதுமட்டுவாழ் கோவிற்பற்று மிருசுவில் இறை செம்பாடு காணி நிலப்பரப்பு 20 விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 460 5329
(33293)(7.6)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு
திதி: 26.10.2013
குழந்தையாய் மண்ணில்
12 . 05 . 1933
தெய்வமாய் விண்ணில்
06 . 11 . 2012
ஓராண்டு கடந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் நீங்காமல் நிலைத்துள்ளன தெய்வமாய்
நின்று எம்மை வழிநடத்திய எமது குடும்பத் தலைவியே!
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்
உங்கள் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
(30782)(6.3.45)


வெல்லுக மகாஜன மாதா
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
"நவ மகாஜன சிற்பி"
அமரர் தெ.து.ஜயரத்தினம் அதிபர்
அவர்களின்
நினைவு தினம்
29.10.2013
இடம் : பாவலர் துரையப்பாபிள்ளை கேட்போர்கூடம்
காலம் : 29.10.2013 (செவ்வாய்க்கிழமை)
நேரம் : மதியம் 12.05
- நிகழ்ச்சி நிரல் -
ஒளி தீபம் ஏற்றுதல்
- தலைமையுரை -
கு.வேல்சிவானந்தன் அதிபர்
- நினைவுப் பேருரை -
பேராசிரியர் மா. சின்னத்தம்பி
கல்வியியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்
தெ.து.ஜயரத்தினம் அவர்களின் காணொளி காட்சிப்படுத்தல்
- நன்றியுரை -
ந. துளசிதாசன்
செயலாளர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கல்லூரிச் சமூகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
(C/13403)(10.6)

# மரண அறிவித்தல்

## விஸ்வப் பிரம்மஸ்ரீ

# வடிவேலு சண்முகலிங்கம் ஆச்சாரியார்

**(முன்னாள் தொழிற்சங்க காரியதரிசி, சுன்னாகம் ஒட்டுப் பலகைக் கூட்டுத்தாபனம், முன்னாள் உறுப்பினர் நல்லூர் கிராம சபை)**



யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட **வடிவேலு சண்முகலிங்கம்** 23-10-2013 புதன்கிழமை தனது **87 ஆவது வயதில் இறைபதம் அடைந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு-இரத்தினம் தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-கனகம்மா தம்பதியரின் மருமகனும், **காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும்,** காலஞ்சென்ற வைகுந்தவாசன் மற்றும் இராஜபவானி (இலங்கை), மனோகரவாசன் (ஜேர்மனி), பத்மாவதி (இலங்கை), நிர்மலா (ஜேர்மனி), திரிபுரவாசன் (பிரான்ஸ்), தில்லைவாசன் (இத்தாலி), சக்திவேல் (ஜேர்மனி), சண்முகதாஸ் (பிரான்ஸ்), ஞானவேல் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

காலஞ்சென்றவர்களான இராசம்மா, மயில்வாகனம், சொர்ணம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்றவர்களான இராசையா, இரத்தினம் மற்றும் ம.திரவியம், காலஞ்சென்றவர்களான தி.இரத்தினேஸ்வரி, க.குலமணி மற்றும் ப.இராஜேஸ்வரி (கிளி), சி.முருகமூர்த்தி, சி.மயில்வாகனம், நா.மனோரஞ்சிதம், க.தையல்நாயகி (பவளம்), க.அன்னபூரணம் ஆகியோரின் மைத்துனரும்,

மாணிக்கவாசகர் (இலங்கை), சீதா(ஜேர்மனி), சத்தியபாலன் (இலங்கை வங்கி- கொழும்பு), கலாரஞ்சன் (ஜேர்மனி), குணா (பிரான்ஸ்), கிருத்திகா (இத்தாலி), கார்த்திகா (ஜேர்மனி), பாமினி (பிரான்ஸ்), பிருந்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும்,

சிவாராஜ் (பிரான்ஸ்), நிருபராஜ் (பிரான்ஸ்), வித்தியா (இலங்கை), இளங்கோவன் (இலங்கை), நந்தகோபன் (இலங்கை), சங்கீதன் (இலங்கை), பிரசன்னா(ஜேர்மனி), தர்சிகா (ஜேர்மனி), துவாரகா (ஜேர்மனி), அருள்பிரகாஷ் (பிரான்ஸ்), மிதிலாஜினி (பிரான்ஸ்), கோபிநாத்(பிரான்ஸ்), மதனராஜ் (இலங்கை), யசோதரா (இலங்கை), டினோஜன் (ஜேர்மனி), கௌசிகா (ஜேர்மனி), கம்சிகா (ஜேர்மனி), டிலக்சன் (ஜேர்மனி), கஜலக்சன் (ஜேர்மனி), ஜெதுசா (பிரான்ஸ்), திவாகர் (பிரான்ஸ்), திருசா (பிரான்ஸ்), கபிசா (பிரான்ஸ்), வாசிகா (இத்தாலி), கீர்த்திசன்(இத்தாலி), திவ்யன் (ஜேர்மனி), கிருஸ்திகா (ஜேர்மனி), நந்திபா (பிரான்ஸ்), வைகுந்தவாசன் (பிரான்ஸ்), வைஷ்ணவி (பிரான்ஸ்), யசிபன் (பிரான்ஸ்), அபினாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும்,

**ஆருசனின் (பிரான்ஸ்) அன்புப் பூட்டனும் ஆவார்.**

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27-10-2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| இராஜபவானி (மகள்) | - இலங்கை | தொ.பே: | +94217917412 |
| பத்மாவதி (மகள்) | - இலங்கை | செல்லிடப்பேசி: | +94783298260 |
| மனோகரவாசன் (மகன்) | - ஜேர்மனி | தொலைபேசி: | +4921028760937 |
| திரிபுரவாசன் (மகன்) | - பிரான்ஸ் | செல்லிடப்பேசி: | +33667753257 |
| நிர்மலா (மகள்) | - ஜேர்மனி | தொலைபேசி: | +4924215516897 |
| தில்லைவாசன் (மகன்) | - இத்தாலி | தொலைபேசி: | +393201187389 |
| சக்திவேல் (மகன்) | - ஜேர்மனி | தொலைபேசி: | +4915773446186 |
| சண்முகதாஸ் (மகன்) | - பிரான்ஸ் | செல்லிடப்பேசி: | +33621867329 |
| ஞானவேல் (மகன்) | - ஜேர்மனி | தொலைபேசி: | +4917632801723 |

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

காளிகோயிலடி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

(33286)
(10,8)

## மழலைகள் பொன் மாலைப் பொழுது நாளை

யாழ்ப்பாணம், ஒக். 26
திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகம் நடத்தும் 'மழலைகளின் பொன் மாலைப் பொழுது' நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும்.
முன்பள்ளியின் பணிப்பாளர் திருமதி கர்ணி தனபாலன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் இளைப்பாறிய பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (வ-17)

# கைதடி முதியோர் இல்லத்தில் பணிபுரிவோருக்கு பயிற்சிகள்



குருநகர், ஒக்.26
கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடமை யாற்றும் சகல தரத்திலுமுள்ள அரச சேவையாளருக்கும் 'வினைத்திறன் மிக்க முதியோர் பராமரிப்பும் அவர்களுக்கான வசதிமிகு வாழ் வனுபவத்தை வழங்குதலும்' எனும் தலைப்பில் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டுள்ளன.
இந்த வகுப்புகள் கடந்த 20 ஆம் திகதி தொடக் கம் 22 ஆம் திகதி வரை கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடத்தப்பட்டன. வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தப் பயிற்சி நெறியின் வகுப்புக்களை வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவ னத்தின் ஆலோசகர் சி.கோணேஸ்வரன் நடத்தினார்.
பயிற்சி வகுப்புக்களில் முதியோர் பராமரிப்பு கடமைகளுக்கான உற்பத்தித்திறன் குறிப்புக்கள், உற்பத்தித்திறனை அதிகரிக்கும் வழி முறை, நாளாந்த வாழ்வின் மேம்பாட்டுக்கு ஜப்பானிய 5 எஸ் கோட்பாடு, முதியோர் இல்லங்களில் 5 எஸ் நடைமுறையை செயற்படுத் துதல் தொடர்பான குறிப்புக்கள், தரச்சுற்று ஆகிய விடயங்களில் பயிற்சிகள் வழங் கப்பட்டுள்ளதாக கைதடி அரச முதியோர் இல்லப் பணியாளர்கள் தெரிவித்தனர். (வ-51)

# போதிய பஸ்கள் கிடைத்தால் சீரான சேவையை நடத்தலாம்

### கூறுகிறார் கிளிநொச்சி டிப்போ முகாமையாளர்

கிளிநொச்சி, ஒக்.26
போதிய பஸ்கள் கிடைக்குமாயின் மக்களுக்கு திருப்திகரமாக சீரான பஸ் சேவையை வழங்க முடியும்- இவ்வாறு தெரிவித்தார் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி டிப்போ முகாமையாளர் சிவபாதசுந்தரம் ஜீவானந்தம்.
கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்கள் தமக்குரிய போக்குவரத்து வசதிகள் சீராக இல்லாததால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி டிப்போ முகாமையாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;
"போரின் போது அழிவடைந்த கிளிநொச்சி டிப்போ தற்போது மீள இயங்க ஆரம்பித்துள்ளது. ஆனால் போதிய சேவைகளை மக்களுக்கு வழங்க முடியாத நிலையே காணப்படுகின்றது.
கிளிநொச்சி டிப்போவுக்கு 29 பஸ்கள் தேவையாக உள்ளன. ஆனால் தற்போது 15 பஸ்களே உள்ளன. இதில் ஐந்து பஸ்கள் மட்டுமே புதியவை ஏனையவை புனரமைக்கப்பட்டு பயன்படுத்தப் படுகின்றன.
மேலதிகமாக பஸ்கள் கிடைக்குமானால் போது பொதுமக்களு க்குத் திருப்திகரமான சேவைகளைத் எம்மால் வழங்கமுடியும் - என்றார். (க-6)



## கைதடி இலங்கையர் மாளிகையில் கருங்குளவிக் கூடு



தென்மராட்சி, ஒக்.26
கைதடி இலங்கையர் மாளிகையில் பெரிய கருங்குளவிக் கூடுகள் உள்ளதால் அயலில் உள்ள மக்கள் அச்சத்துடன் வாழும் நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
கைதடிப் பகுதியில் நீண்ட கால வரலாற்றைக் கொண்ட இந்த மாளிகை கடந்த வருடம் வேறொருவரினால் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது.
இந்த மாளிகைக்கு அருகில் வசிப்பவர்கள் கருங்குள விகளால் தினமும் ஆபத்தை எதிர் நோக்குவதாக முறைப்பாடு தெரிவித்துள்ளனர். (வ-9)

# மாணவருக்கான உணவில் குறைபாடுகள்; சீர்செய்வது பாடசாலைகளின் பொறுப்பே

### நடவடிக்கை எடுக்க நேரிடும் என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஒக்.26
மாணவருக்கான உணவு வழங்கலில் உள்ள குறைபாடுகளைச் சீர் செய்ய வேண்டியது பாடசாலைகளின் பொறுப்பு என்று யாழ். மாவட்ட அரச அதிபர் அருமைநாயகம் தெரிவித்தார்.
உலக உணவுத் திட்ட மீளாய்வுக் கூட்டம் யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு மாணவர்களுக்கான உணவு வழங்கல் தொடர்பாக உரையாற்றும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
மாணவர்களுக்கான உணவு வழங்கல் திட்டம் பூரணமான வெற்றியை இன்னும் பெற்றுத்தரவில்லை. உணவு வழங்குவது தொடர்பாக பாடசாலைகளுக்கு வழங்கப்படும் பொருள்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன.
உதாரணமாக சுத்தமான பருப்பு வழங்கப்படுவதில்லை. வழங்கப்படும் பருப்பு சமையலுக்கு ஏற்றதல்ல.
சமையல்காரர்கள் சிலர் சமையலுக்கான உணவுப் பொருள்களின் ஒரு பகுதியை திருட்டுத்தனமாக வீட்டுக்கு எடுத்துச் செல்கின்றனர். இது கவலைக்குரிய விடயமாகும்.
அடுத்து மாணவர் பதிவேட்டில் மாணவர் தொகையும் சமையலுக்காக எடுக்கப்படும் உணவுப் பொருள்களின் அளவும் வேறுபடுகின்றது. இது ஒரு சாதாரண விடயமல்ல.
சில பாடசாலைகளில் சமையல் காரருக்கு கொடுப்பதற்கென மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுகின்றது. இவை யாவும் அதிபரின் பதவிக்கு ஆபத்தை ஏற்படுத்துவனவாக உள்ளன.
எனவே பாடசாலைகளில் உணவு வழங்கல் தொடர்பாகப் பல குறைபாடுகள் காணப்படுவதாக யாழ். மாவட்ட செயலகத்துக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.
அந்தத் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டபின் அவை பற்றி கலந்துரையாடப்பட்டது.
மேலும் இந்த நிலை நீடிக்காது தடுத்து நிறுத்தும் பொறுப்பு பாடசாலைகளைச் சாரும். இல்லையேல் இவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க நேரி டும்- என்றார். (எ-35)

# பொதுநோக்கு மண்டபத்தை பூர்த்தி செய்யுமாறு கோரிக்கை

கிளிநொச்சி பழைய கோரக்கன்கட்டு பொதுநோக்கு மண்டபக் கட்டடத்தைப் பூர்த்தி செய்து வழங்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கிளிநொச்சி- கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பழைய கோரக்கன் கட்டுப் பகுதியில் கடந்த 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இதன் கட்டுமானப் பணிகள் நிறைவு பெறாத நிலையில் காணப்படுகின்றன.
இந்தக் கிராமத்தில் சுமார் 60 குடும்பங்கள் வசித்து வருகின்றன. கட்டுமானப் பணிகள் நிறைவு பெறாத நிலையில் காணப்படும் இந்தப் பொதுநோக்கு மண்டபத்தில் தற்போது முன்பள்ளி யொன்று இயங்கி வருகிறது. ஏனைய கலந்துரையாடல்கள் மற்றும் பொதுத் தேவைகளுக்கும் அரைகுறையாக அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் காணப்படும்.
குறித்த மண்டபத் தின் கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்து தருமாறு இந் தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## மாநகர சபையின் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.26
உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு குருநகர் யாழ். மாநகர சபை பிரதேசத்தில் இலவசமருத்துவமுகாம்ஒன்றை அண்மையில் நடத்தியது.
யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.யசிந்திரன் தலைமையில் இந்த இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றது.
பற்றிக்ஸ்வீதியில் உள்ள லொயலாஸ்மண்டபத்தில் இடம்பெற்ற இந்த இலவச மருத் துவ முகாம் காலை ஆரம்பித்து மாலை வரை இடம்பெற்றது.
இந்த மருத்துவ முகாமில் முந்நூறுக்கும் மேற்பட்டோர் பங்குபற்றி பயன்பெற்றனர். (வ-17)





யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 91 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை நேற்று வெள்ளிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் கொண்டாடியது. நிகழ்வில் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (வ-17)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் இரு தினங்கள் கண் கிளினிக்

கிளிநொச்சி, ஒக்.26
கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வாரத்தில் இரு தினங்கள் கண் சிகிச்சை கிளினிக் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
பிரதிசெவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் கண் சிகிச்சை நிபு ணரால் கண் பரிசோதனை மேற்கொள்ளப்படும். தற்போது கிளிநொச்சி மாவட்ட மக்கள் கண் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் அல்லது சாவகச்சேரி வைத்தியசாலைக்குச் சென்று வருவது குறிப் பிடத்தக்கது.
இதேவேளை மாவட்டத்தில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வடமாகாண சமூக சேவை கள் திணைக்களத்தினரால் இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன.
எனவே குறித்த மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் மாவட்டப் பொது வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவில் பரிசோதனையை மேற்கொண்டு கண்ணாடி பெறுவதற்காக வழங்கப்படும் பரிசோதனை அட்டையை தத்தமது பகுதிப் பிரதேச சமூக சேவைகள் பிரிவில்வழங்கிமூக்குக் கண்ணாடிக்கு விண்ணப் பிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (வ-9)

# பயன்தரும் திட்டங்களை வலி.தென்மேற்கு பிரதேச சபை தயாரிக்க வேண்டும்

### சபைத் தவிசாளர் மகேந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.26
மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிக்கும் போது வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபைக்குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளும் நன்மை அடையக் கூடியதாக பொருளாதார-சமூக-உட்கட்டுமான திட்டங்களை முன்வைக்க வேண்டும். 2014, 2015, மற்றும் 2016 ஆகிய மூன் றாண்டுகளுக்கான அபிவிருத்தி முன் மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு யாழ். அரச அதிபர் கோரியுள்ளார்.
எனவே பிரதேச அபிவிருத்தியை மையமாகக் கொண்டு திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்-என்று வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் சின்னதுரை மகேந்திரன் தெரிவித்தார்.
வலி.தென்மேற்கு பிரதேச அபிவிருத்தி தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நீண்டகாலமாக சபையின் உட்கட்டுமான அபிவிருத்தி, சுகாதார அபிவிருத்தி, திண்மக்கழிவு அகற்றல் செயற்பாடு, வீதி அபிவிருத்தி, உல்லாச மற்றும் சுற்றுலா அபிவிருத்தி தொடர்பாக பேசப்படுகின்ற போதும் இதுவரையில் எந்தவித அபிவிருத்திகளும் ஏற்படவில்லை.
வடமாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சுப் பொறுப்பு முதலமைச்சர் சி.வி. விக் கினேஸ்வரனிடம் உள் ளதால் நலிவடைந்துள்ள மானிப்பாய் பிரதேச சபை உட்பட வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளும் புதிய பரிமாணத்தில் முன்னேறும்.
இதற்கென ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைகளிலிருந்தும் பிரத்தியேக மான கல்விமான்களை இணைத்து புதி ய ஆலோசனைச் சபை ஒன்றை அமைத்துச் செயற்படுத்த முதலமைச்சர் முன் வர வேண்டும்.
மூன்றாண்டுத் திட்டம் தயாரித்து அனுப்பும்போது யாழ். அரச அதிபர் தகவலுக்காக மட்டுமன்றி அதற்கான நிதியைப் பெற்றுக் கொள்ளவும் முயல வேண்டும் -என்றார். (வ-50)

# பிரிட்டன் – இந்தியாவை கவர்ந்திழுக்க கோத்தாவின் வடக்கு முதல்வர் கதை

## நவசமசமாஜக்கட்சி சாட்டை

கொழும்பு.ஒக்.26

பிரிட்டனையும் இந்தியாவையும் எப்படியாவது கவர்ந்திழுத்து. பொது நலவாய மாநாட்டில் பங்கேற்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கி லேயே பாதுகாப்புச் செயலர் கோத் தபாய ராஜபக்ஷ, வடக்கில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலை நாட்டும் பொறுப்பு முதல்வருக்கே உரியது என்று கூறியுள்ளார்.

இவ்வாறு நவசமசமாஜக் கட்சி வியா ழக்கிழமை தெரிவித்தது.

நாட்டில் நல்லிணக்க ஆணைக் குழு வின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த முன்னர், நடத்தப்படும் பொது நலவாய மாநாட்டுக்கு எமது கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவிக்கிறது என்று அந்தக் கட்சி தெரிவித்தது.

இதுதொடர்பாக நவசம சமாஜக் கட்சி யின் பொதுச் செயலர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது புதுப்புதுப் பிரச்சி னைகள் தினமும் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. இந்த நிலையில் பொதுநலவாய மாநாட் டுக்கு கனடா வரப்போவதில்லை என உறுதியாகத் தெரிவித்து விட்டது.

இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் வருவது இன்னமும் உறுதியாகத் தெரியவில்லை. இந்தநிலையில், பிரிட்டன் பொதுநலவாய மாநாட்டுக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


அதுவும் அரசுக்கு அழுத்தம் கொடுக் கும் ஒரு செய்தியுடனேயே வரவுள்ளதாக அந்த நாடு உறுதிப் படுத்தியுள்ளது.

இதுபோன்ற கார ணங்களால் அரசு தற்போது செய்வ தறியாது குழம்பிப் போயுள்ளது என்றே கூற வேண்டி யுள்ளது.

இதனால், எப்படியாவது இந்தியா வையும் பிரிட்டனையும் கவர்ந்து விட வேண்டும் என்ற நோக்குடன் வடக்கு முதலமைச்சருக்கே சட்டம் மற்றும் ஒழுங்குப் பொறுப்புகள் இருப்பதாக பாதுகாப்புச் செயலர் தெரிவித்துள்ளார். இது வேறும் வாய் வார்த்தை மட்டுமே ஒழிய இதை நடைமுறைப்படுத்த அரசு நிச்சயமாக முன்வராது என்பதை எம்மால் உறுதியாகக் கூறமுடியும்.

பொதுநலவாய மாநாட்டுக்கு எப்ப டியாவது அரச தலைவர்களை கவர்ந்து விட வேண்டும் என் நோக் குடன் புதைக்கப்பட்ட பழைய பிரச்சி னைகளை மீண்டும் ஆராய்ந்து அதற்கான தீர்வினை அரசு அவசர அவசரமாகக் கொடுத்து வருகின் றது.

இதன் மூலம் சர்வதேசத்துக்கு. இலங்கையிலும் சட்டம், நீதி என்பன இன்னமும் இருக்கின்றன எனக் காண்பித்து சர்வதேச நாடுகளை வரவழைத்துக் கொள்ள முடியும்



என்பதே இந்த அரசின் திட்டமாகும். இதற்காகவே, பாதுகாப்புச் செயலர் பொதுநலவாய மாநாடு நடைபெற விருக்கும் இந்த நேரத்தில் வடக்கு முதலமைச்சருக்கே அனைத்து அதிகாரமும் உள்ளன என்ற கருத்தைக் கூறியிருக்கின்றார். - என்றார். (ச-சி)

# பொதுநலவாய உச்சி மாநாடு; செய்மதியில் ஒளிபரப்ப முடிவு

## 15 குழுக்கள் நியமனம்

கொழும்பு.ஒக்.26

பொதுநலவாய மாநாட்டின் ஆரம்ப நிகழ்வுகளை செய்மதி மூலம் சர்வ தேசமெங்கும் ஒளிபரப்ப நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது என்று தகவல் ஊடகத்துறை அமைச்சின் செயலர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.

பொதுநலவாய மாநாடு தொடர்பான ஏற்பாடுகள் குறித்துத் தகவல் வழங் கியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரி வித்ததாவது:-

15 குழுக்கள் உருவாக்கப்பட்டு பரந் தளவில் மாநாட்டு ஏற்பாடுகள் வெற்றி கரமாக முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

வெளிநாட்டு அமைச்சின் தலை மையில் இதற்கான செயற்திட்டங் கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஏற்பாட்டு வலையமைப்பில் 15 உபகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இதில் ஊடகப் பரப்புரை செயற் பாடு களுக்கான குழு. தகவல் ஊடகத் துறை அமைச்சை முதன்மையாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

பொதுநலவாய மாநாடு சம் பந்த மான எமது இணையத் தளம் இயங்கி வருகிறது. இந்த இணையத்த ளத்தை இது வரை நாலரை லட் சம் பேர் பார்வையிட்டுள்ளனர்.

பொதுநலவாய மாநாட்டு செயற் பாடு களில் 1000 ஊட கவியலாளர்கள் இணைத் துக்கொள்ளப்பட்டுள்ள னர். அதில் வெளிநாட்டு ஊடகவிய லாளர்களும், உள்ளூர் ஊடகவிய லாளர் களும் உள்ளடங்கு கின் றனர்-என்றார். (ச)

# வெலிவேரியா மக்கள் மீண்டும் போராடுவர்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு.ஒக்.26

கம்பஹா, ரத்துபஸ்வெல மக் களின் குடிதண்ணீர்ப் பிரச்சி னைக்கு அது தொடர்பான இறுதி அறிக்கையினூடாக தீர்வு கிடைக்குமா எனக் கேள்வி எழுப்பிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, பிரச்சினைக் குத் தீர்வு காணப்படா விட்டால் அந்த மக்கள் மீண்டும் கிளர்ந் தெழக்கூடிய நிலை ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் வியாழக்கி ழமை விசேட கூற்றொன்றை விடுத்து உரை யாற்றுகையி லேயே நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித் ததாவது:

சுத்தமான குடிதண்ணீர் கோரி வெலி வேரிய ரத்துபஸ் வெல மக்கள் கடந்த ஒகஸ்ட் மாதம் நடத்திய போராட்டத் தில் மேற்கொள்ளப்பட்ட தாக் குதலில் மூவர் கொல்லப்பட்டனர். தற்போது இந்த மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை யைத் தீர்ப்பதற்காக தற்காலிகமாக குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. இவ் வாறு வழங்கப்படும் தற்காலிக குடிதண் ணீர் அங்குள்ள மக்களுக்குப் போது மானதாக இல்லை.

ரத்துபஸ்வெல குடி தண்ணீர் குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளில் அந்த நீரின் தன்மை குறித்து தெளி வாகக் கருத்து வெளியிடப்படவில்லை. இதனால் அங்குள்ள மக்கள் மீண்டும் கிளர்ந்தெழக் கூடிய நிலை ஏற்பட வாய்ப் புள் ளது.



எனவே, ரத்து பஸ்வெல சம்ப வம் தொடர்பான இறுதி அறிக் கையை நாட்டு மக்க ளுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

அந்த அறிக்கையை நாடாளுமன்றி லும் சமர்ப்பிக்க வேண்டும். இது தொடர் பான இறுதி அறிக்கை எந்த நிபுணர் குழு வால் தயாரிக்கப்படுகிறது? அந்த அறிக் கையினூடாக ரத்துபஸ்வெல மக்களின் குடி தண்ணீர்ப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு கிடைக்குமா? - எனவும் அவர் கேள்வி எழுப் பினார். (ச)

## மரண அறிவித்தல்

### சிவராஜா சிவானந்தா



நல்லூரைப் பிறப்பிடமாக கொண்ட சிவராஜா சிவானந்தா 23.10.2013 அகால மரணமானார்.

அன்னார் சிவராஜா-யோகராணி தம்பதியரின் அன்பு மகனும், பொன்னுத்துரை-நாகம்மா தம்பதி யரின் மருமகனும், கௌசலாதேவியின் (சந்திரா) அன்புக் கணவரும், சுஜித்தன், தர்ஷிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவராஜாவின் அன்பு மாமனும், சசிதேவி, சிறிதரன், காலஞ்சென்ற சாந்தி, கிரிதரன் ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2013) சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(33309)
(10,14)

தகவல்:
சந்திரா (மனைவி )
சுஜித்தன் (மகன்)

## மரண அறிவித்தல்

### விநாசித்தம்பி வேலுப்பிள்ளை



பருத்தித்துறை ஊரியவத்தையை பிறப்பிடமாகவும், வராத்துப்பளையை யும், உத்திராவத்தையையும் வசிப்பிட மாகவும் கொண்ட விநாசித்தம்பி வேலுப்பிள்ளை நேற்று முன்தினம் (24.10.2013) வியாழக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி-பொன்னம்மா தம்பதி யரின் மகனும், காலஞ்சென்றவர்க ளான கந்தையா-அன்னம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கனகம் மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான செல்லம்மா, தங் கம்மா பாக்கியம் ஆகியோரின் சகோதர னும், கமலாகரன்,கமலேந்திரராணி, காலஞ்சென்ற வசந்தராணி ஆகியோரின் தந்தையும், புஸ்பராணி, செல்வராசா, விவேகானந் தன் ஆகியோரின் மாமனும், பிரதீபன், பிரியா, தாரணி, சாரங்கன், வஸ்னிதா, அர்ச்சனா, பிரகாஸ், பிரதீபன், வாகிசன், ராகுல் ஆகி யோரின் பேரனும், சாகித்தியா சயின், கபின், அஸ்வின், அபிநாத், கிசான், அப்கரன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி வடகிழக்கு,
உத்திராவத்தை,
பருத்தித்துறை.

(33312)
(10,14)

தகவல்:
குடும்பத்தினர்.

# வர்த்தகர் மீது துப்பாக்கி சூடு

கொழும்பு.ஒக்.26

புத்தளம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம் பவத்தில் வர்த்தகர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

மொத்த வியாபார நிலையத் தின் உரிமையாள ரான குறிப்பிட்ட வர்த்தகர், தனது வர்த்தக நிலை யத்தை மூடிவிட்டு வீட்டை நோக்கிச் சென்றுள்ளார். மோட்டார் சைக்கிளில் அவரைப்பின் தொடர்ந்த இனந்தெரியாத குழுவினர் வர்த்தகர் மீது துப் பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு 10 லட்சம் ரூபாவை கொள்ளையிட்டுச் சென்றுள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரி வித்தார்.

சம்பவத்தில் காயமடைந்த வர்த்தகர் புத்தளம் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச)

# மீனவர்களின் குடும்பங்களுக்கு கிடைத்தன உலர் உணவுகள்

திருமலை. ஒக்.26

இந்தியாவில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப் பட்டுள்ள இலங்கை மீனவர்களின் குடும்பங்க ளுக்கு உலர் உணவுகள் வழங்கப்பட்டன.

இந்த உலர் உணவுகள் மாவட்ட பிரஜைகள் குழுவால் வழங்கப்பட்டது.

இலங்கை மீனவர்கள் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்படுகின்றனர். இந்தப் பிரச்சினை இனியும் தொடராமல் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்று பிரஜைகள் குழுவின் தலைவர் ஜெய ஒவிட்ட பியதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

(ச-291)

## கார் விற்பனைக்கு

KF-xxxx தொடரிலக்க Nissan FB 15 (2003 Model) கார் விற்பனைக்கு

T.P: 077 382 5588

(சி/13487) (10,14)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
05.03.1932

மறைவு
27.09.2013



திருமதி
### தனேஸ்வரியம்மா தங்கராஜா

கடந்த 27.09.2013 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து துயரில் பங்குகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர் களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (26.10.2013) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும், அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங் களை அன்புடன் அழைக்கின்றோம்.

"ஈஸ்வரிவாசா"
பத்தமேனி, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

(33310)(10.14)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

பிறப்பு
01.07.1943

இறப்பு
26.09.2013



அமரர்
### கந்தையா தவராசா

பிறந்த பலனுக்காய் நன்மை செய்திட்டார்
பெற்ற பலனுக்காய் சேய்களை உயர்த்திட்டார்
காலத்தின் பலனுக்காய் இறையடி சேர்ந்திட்டார்.

கடந்த 26.09.2013 இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (26.10. 2013) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தவராசா இல்லம்
டச்சு றோட், சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்.

(உ/13408) (10.14)

# முதல்வரும், ஆளுநரும் கட்டடத்தை திறந்தனர்

வடக்கு மாகாண சபைக்கான புதிய கட்டடத்தை நேற்று வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டதன் பின்னர், வடக்கு மாகாண சபைக்கான தனிக் கட்டடம் கைதடியில் 450 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதில் மாகாண சபை அமர்வுகளை நடத்தும் பகுதி மட்டும் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரினால் மாகாண சபைக் கட்டட பெயர்ப் பலகைகள் திரை நீக்கம் செய்யப்பட்டதுடன் கட்டடமும் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோனாதிராசா, ஈ.சரவணபவன், க.சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்திஆனந்தன் ஆகியோர் கலந்துகொண்ட னர்.

திறப்பு விழா முடிந்ததும், வைத்திய உதவி தேவைப்படும் 50 பேருக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன. (த-5-86)

## நவம்பர் 11 முதல் அமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.26

வடக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு அடுத்த மாதம் 11 ஆம் திகதி இடம்பெறும் என்று நேற்றைய கன்னி அமர்வில் தவிசாளர் சி.வி.கே. சிவஞானம் அறிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் கன்னி அமர்வு நேற்று இடம் பெற்றது. இதில் நன்றியுரை நிகழ்த்திய தவிசாளர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவித்தார். (த-5)

## அங்கஜன் வரவில்லை

யாழ்ப்பாணம், ஒக்.26

வடக்கு மாகாண சபையின் கன்னி அமர்வில் எதிர்க் கட்சி சார்பில் இரு உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை.

வடக்கு மாகாண சபையின் கன்னி அமர்வு நேற்று வெள்ளிக்கிழமை கைதடியில் உள்ள அதன் பேரவைக் கட்டடத்தில் இடம்பெற்றது.

இதில் ஆளுங்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 30 உறுப்பினர்களும் பங்கெடுத்திருந் தனர்.

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் ஒருவரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஒருவருமாக இரு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவர் அமர்வில் பங்கெடுக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்ட இராமநாதன் அங்கஜன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்ட மொஹமட் ரயூஸ் ஆகிய இருவரும் பங்கேற்கவில்லை.

இருவரும் சபைக்கு முன்னறிவித்தல் வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இராணுவம்

ணுவ சிப்பாய் என்ற நிலை வடக்கில் காணப்படும் போது சிவில் நிர்வாகத்தை நாம் நடத்த முடியாது.

எமது மக்கள் எமது கட்சிக்கு ஏகோபித்த ஆதரவை வழங்கியதி லிருந்து, இராணுவத்தைக் கட்டுப்படுத்திப் படிப்படியாக வடக்கு மாகாணத்திலிருந்து வெளியேற வேண்டும் என்ற எங்கள் கோரிக்கையை அவர்கள் அங்கீகரித்துள்ளார்கள்.

படிப்படியான இராணுவ வெளியேற்றம் பற்றி அரசு கூறினாலும், நடைமுறையில் நாம் அதைக் காணவில்லை.

இந்த விடயம் தொடர்பில் நாங்களும், அரசும் பேச்சின் பின்னர் திட்டம் தீட்ட வேண்டி வரும்.

சர்வதேச ரீதியாகக் கைது செய்யப்பட்டவர்கள், சரணடைந்த போராளிகள் எவ்வாறு ஆயுத நீக்கத்துக்கும், இராணுவக் கலைப்புக்கும், மீள் சமூக இணைப்புக்கும் உட்படுத்தப் படுகின்றார்கள். அதேபோன்று பாதுகாப்புக்கோணம் சார் சீர்திருத்தங்கள் இராணுவத்தினரைக் குறைத்து, பாதுகாப்பு நிறுவனங்களைக் கூடிய தொழில் திறனுடன் செயற்பட வழி வகுக்கின்றன.

ஐ.நா. அமைதிப்படையில் இலங்கைச் சிப்பாய்களைச் சேர்த்துக் கொள்ள முடியுமா என்பது பற்றியும் ஆராயலாம். போர் வீரர்கள் இராணுவ வாழ்க்கையிலிருந்து குடிமக்கள் வாழ்க்கைக்கு மாறச் சர்வதேச உதவிகள் பெறக்கூடுமா என்பதைப் பற்றியும் அரசு ஆராயலாம்.

இராணுவத்தினர் வடக்கிலிருந்து உரியவாறு விலகிச் செல்வதை உறுதிப்படுத்துவது அரசின் கடமையாகும்.

**துணைப்படை கலைப்பு**

வடக்கில் மற்ற இயக்கங்கள் சார்ந்த துணைப்படைகளும் ஆயுத நீக்கத்துக்கும், படைக் கலைப்புக்கும், மீள் சமூக இணைப்புக்கும் உட்படுத்தப் பட வேண்டும்.

தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில் இராணுவத்தை வடக்கு மாகாணத்தில் நிறுத்தி வைக்க வேண்டிய நிலைமையை உருவாக்க எமது மக்கள் இனிமேல் எப்பொழுதும் இடமளிக்க மாட்டார்கள் என்று ஆணித்தரமாக கூறுகின்றோம்.

இராணுவத்தினரோ துணை இராணுவத்தினரோ இராணுவத்தை வெளியேறாது தடுக்க நாடகங்கள் இயற்றக்கூடும் அவற்றுக்கு எவரும் எமாந்து விடக்கூடாது.

காணி சுவீகரிப்பை நிறுத்த வேண்டும்.

இராணுவ பாவனைக்காகப் பொதுமக்களின் காணிகளை இராணுவம் சுவீகரிப்பதை நிறுத்த அரசு முன்வர வேண்டும். கைப்பற்றப்பட்ட காணிகள் அதன் உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்கப்படல் வேண்டும்.

இராணுவத் துணையுடன் இங்கு நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்களை கண்டிக்கின்றோம்.

எங்கள்பொலிஸ்படைவேண்டும். வடக்கு மாகாணத்தில் சட்டத்தின் ஆட்சி நிறுவப்பட வேண்டும். இதற்கு எங்கள் மக்களின் மொழி,கலை, கலாசாரம், வாழ்க்கை முறை ஆகியவற்றை புரியாத பொலிஸ் படை தொடர்ந்து இருப்பது தடையாக இருக்கின்றது.

எனவே உள்ளூரிலிருந்து தமிழ் பேசும் பொலிஸார் தேர்வு செய்யப்பட வேண்டும். 13 ஆவது திருத்தத்தில் சொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் -என்றார். (த-5)

## தமிழரின்

நாங்கள் ஒத்துழைப்புக் கரத்தை நீட்டத் தயாராகவே உள்ளோம். உயரிய இராஜதந்திரத்தைக் காட்ட அரசுக்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. அவர்களுக்கு நேசக்கரம் நீட்டுவார்கள் என்று நான் எண்ணுகின்றேன்.

எமது எதிர்த்தரப்பு சகோதரர்களுக்கும், நேசக்கரத்தை நீட்டுகின்றோம். அவர்களில் அநேகர் ஏற்கனவே எங்களுக்கு ஒத்துழைப்பு நல்குவதாகக் கூறியுள்ளமை மன மகிழ்வை ஏற்படுத்துகின்றது - என்றார். (த-5)

## பொதுநலவாய

வடக்கு மாகாணசபையின் கன்னியமர்வு முடிவடைந்த பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்றது.

இதில் ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினருக்கும் ஒவ்வொரு அமைச்சின் கீழான பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கிடையிலான கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், ஈ.பி. ஆர். எல்.எவ். செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவரும் மாகாணசபை உறுப் பினருமான த.சித்தார்த்தன், ரெலோவின் செயலாளர் நாயகமும் மாகாணசபை உறுப்பினருமான க.சிவாஜிலிங்கம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ. சுமந்திரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பேச்சு மூன்று மணி நேரம் நீடித்தது. தற்போதைய அரசியல் நிலவரம் மற்றும் வடக்கு மாகாண சபையின் எதிர்கால வேலைத் திட்டம் தொடர்பிலும் இதில் ஆராயப் பட்டது.

அத்துடன் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கெடுப்பது தொடர்பாகவும், இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் பங்கேற்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இதன்போது அனைவரும் பொதுநலவாய மாநாட்டில் முதலமைச்சர் பங்கேற்கக் கூடாதென்றே வலியுறுத்தியுள்ளனர். (த-5)

## பஸ்ஸுடன்

ளான இராமச்சந்திரன் விக்னேஸ்வரன் (வயத -36) ரவிச்சந்திரன் அபிலக்ஷன் (வயது -18) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியாவைச் சேர்ந்த இந்த இருவரும் மீசாலையில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றுக்காக வந்திருந்தனர். இதன்பின் மோட்டார் சைக்கிளில் வவுனியா நோக்கிப் புறப்பட்டுள்ளனர். முகமாலைப் பகுதியில் வீதியின் ஓரமாக பஸ் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் மோட்டார் சைக்களில் வேகமாகச் சென்ற இவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளாகினர் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தை அடுத்து இருவரையும் வீதியில் சென்றவர்கள் மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அவ்வாறு கொண்டு செல்லும் வழியில் ஒருவர் உயிரிழந்தார். மற்றையவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு வரப்பட்ட வேளை உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரின் சடலங்களும் வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-4-6-9-17)

## மும்மொழிக்

கள் வைக்கப்பட்டிருந்தன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான அறிமுகச் செயலமர்வு யாழ். ரில்கோ விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், மாகாண அமைச்சர்கள், மாகாண சபையின் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

அத்துடன் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் ரணவக்கவும் இதில் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்திய பிரதம செயலாளர், திருமதி ஆர்.விஜயலக்சுமி, வடக்கு மாகாண சபையால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் விலாவாரியாக எடுத்துக் கூறினார்.

இதன்போது மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் அவர் தெரிவித்தார். வடக்கு மாகாண சபையின் திணைக்களங்கள் எல்லாவற்றிலும் மும்மொழியிலான பெயர்ப் பலகை வைக்கப்பட்டிருப்பதுடன், சகல இடங்களிலும் மும்மொழி அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாக அவர் தனது உரையில் கூறினார்.

ஆயினும் இந்தச் செயலமர்வுக்கு வந்திருந்த வடக்கு மாகாண சபை அதிகாரிகளின் வாகனங்களில் தனிச் சிங்களத்தில் பெயர்ப்பலகைகள் வைக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இதுதானா மும்மொழிக் கொள்கையின் நடைமுறைப்படுத்தல் என அங்கு வந்தவர்கள் பேசிக் கொண்டனர். (த-5-21)

## மாற்ற வேண்டும்

மாகாண ஆளுநர் எவ்வாறு வெளிப்படையாக வடக்கு மாகாணத் தேர்தல் விடயங்களில் பக்கச் சார்பாக நடந்து கொண்டார் என்பது நாடறிந்த விடயம்.

சிவில் நிர்வாகத்தை உண்மையில் ஜனாதிபதி வரவேற்கின்றார் என்றால், ஆளுநர் பதவிக்கு தகைமையுடைய இராணுவத்தினர் அல்லாத ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிக்கக் கோருகின்றோம்.

போருக்குப் பின்னரான சூழலில் புனர்நிர்மாணம், புனருத்தாரணம், புனரமைப்பு, அபிவிருத்தி ஆகியவை சம்பந்தமான அனுபவத்தையும் பெண்கள், குழந்தைகள், முதியோர்கள், இளைஞர்கள், முன்னாள் போராளிகளின் வாழ்வில் கரிசனையும் கொண்டவரே ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் - என்றார். (த-5)

## தமிழகத்தின்

யாகவுள்ளது.

தென்னிந்திய இளைஞர் - யுவதிகளின் அரசியல் சார்பற்ற உணர்ச்சி வேகம் எமக்குப் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை நான் கூறியே தீர வேண்டும்.

வருங்காலத்தில் தமிழகமும், வட மாகாணமும் பல விதங்களில் ஒத்துழைக்க வேண்டியிருக்கும் என்பதையும் குறிப்பிடுகின்றேன் - என்றார். (த-5)

## கன்னி

டார். பிரதித் தவிசாளராக மாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன் தெரிவானார்.

இதன் பின்னர் நேற்றைய கன்னி அமர்வு தவிசாளர் சி.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபை நிர்வாகத்தை நடத்திச் செல்லும் செயற்பாடுகளை நேற்று முதல் ஆரம்பித்தது.

இதேவேளை, வடக்கு மாகாண சபையின் எதிர்காலச் செயற்பாடுகளை இலங்கை அரசும் சர்வதேச சமூகமும் உன்னிப்பாக அவதானித்துள்ளதாக ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள விக்னேஸ்வரன் நீதியரசராகக் கடமையாற்றியவர் என்பதால் மாகாண சபைச் செயற்பாடுகளை அவர் சட்ட ரீதியான முறையில் கையாள்வார் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது. (த-5)

## தலைவர்

ளின் மனதில் உற்சாகத்தையும், வேறு சில மக்களின் மத்தியில் கொடுஞ்சினத்தையும் வெளிப்படுத்தியது என்பதை யாவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இதை அறிந்து தான் நான் கெப்பிட்டிபொல திசாவையைப் பற்றி அதே நேரத்தில் கூறி வைத்தேன். எம் ஒவ்வொருவரினது காட்சிக் கோணமே, இப்படியான மனோ நிலைகள் என்பதை உணரும் காலம் உதயமாகியுள்ளது.

கெப்பிட்டிபொல திசாவை எவ்வாறு ஆங்கிலேயர் மத்தியில் வெறுப்பையும் தற்காலச் சிங்கள மக்கள் மத்தியில் உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளார் என்பதை உணர்ந்து எமது சினங்களைத் தணிய வைக்க நாம் பழக்கிக்கொள்ள வேண்டும்.

**கடவுளே காப்பாற்று**

சாதாரண தமிழ் மக்களின், சகோதர, சகோதரிகளின் எதிர்பார்ப்பும் என்னைச் சில்லிட வைக்கின்றது. இறைவா! இவர்கள் யாவரையும் காப்பாற்று என்று உளமார இறைஞ் சுவதைவிட என்னால் வேறொன்றும் கூறமுடியாமல் இருக்கின்றது. எனினும் எங்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கை திரும்பியுள்ளது என்பதை உணர்கின்றேன்.

**13 ஆவது மாகாண சபை ஒன்றுக்கும் உதவாது**

எமது மாகாண சபையில் முறையற்ற முன்னைய ஆட்சி தொடர்கின்றது. 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தேர்தலில் வெற்றிபெற்று வந்துள்ளோம். ஆனால் 13 ஆவது திருத்தம் ஓட்டைகள் உள்ள ஒரு பாத்திரம் போல் ஒன்றுக்கும் உதவாதது போல் காட்சியளிக்கின்றது.

எங்கள் தேர்தல் அறிக்கையை தொடர்ந்து வந்த தேர்தல்களில் மக்கள் ஏற்றதன் மூலம், 13 ஆவது திருத்தம் குறைபாடுடையது என்றும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தன்மை அதற்கு இல்லை என்பது தெளிவாகின்றது. சுதந்திரமான மாகாண சபை திறம்படச் செயற்பட 13 ஆவது திருத்தம் வழி சமைத்துக் கொடுக்கவில்லை.

மக்கள் எமக்களித்த ஆணைக்கு அரசு மதிப்பளித்து, எம்மு டன் இணைந்து செயலாற்ற வேண்டும். சர்வதேச நாடுகள் எங்களுக்கு நிதி வழங்கி எமக்குப் பக்கத்துணையாகவும் பலமாகவும் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

புலம்பெயர்ந்த எமது உறவுகள் மனித வளம், பொருள் வளம் சம்பந்தமாக எமக்கு அனுசரணையாக இருப்பார்கள் என்று நம்புகின்றேன். உங்கள் ஒத்துழைப்பும், உதவியும் எமக்கு அவசரமாகத் தேவையாக உள்ளது.

புலம் பெயர் தமிழர்கள், போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு உதவி வழங்குவதற்கு ஏதுவாக நடைமுறைச் சாத்தியப் பொறிமுறை அமைப்பொன்றை ஏற்படுத்த அரசுடன் பேச்சு நடத்த வேண்டும்.

**அரசியல் தீர்வு**

நாங்கள் பிரிவினையை ஏற்கவில்லை என்பதை சிங்கள மக்கள் உணர வேண்டும். உள்ளக சுயநிர்ணயம் ஒரு நாட்டைப் பிரிவு படுத்தாமல் ஒற்றுமைப் பாதையில் கொண்டு செல்லக்கூடும் என்பதை அரசும், சிங்க மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்றுபட்ட நாட்டின் இறைமையை ஏற்கும் அதேநேரத்தில் தேசிய பாதுகாப்பு, சர்வதேச உறவுகள் போன்றவை மத்திய அரசின் நெறிப்படுத்தலுக்குட்பட்டவை என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால் அரசியல்யாப்பில் எதேச்சாதிகாரத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அந்தஸ்தை நாம் எதிர்க்கின்றோம்.

**திட்டமிட்ட இனப்பரம்பல் மாற்றம்**

மீளக்குடியேற்றம் என்ற போர்வையில் வடக்கு மாகாணத்தில் என்றுமே குடியிருக்காத மக்களைக் கொண்டு வந்து குடியேற்றுவதை நாம் கண்டிக்கின்றோம். வடக்கு -கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்டுக் கட்டாயமாக மக்கள் பரவலை மாற்றி அமைக்கும் அரசுசார் நடவடிக்கைகளை எதிர்க்கின்றோம்.

இலங்கைக் குடிமக்கள் என்பதில் சிங்கள மக்கள் பெருமை கொள்வதற்கு ஒப்பாக நாங்களும் பெருமை அடைகின்றோம் என்பதைச் சிங்கள மக்களும் தங்கள் மனதில் எடுக்க வேண்டும்.

ஆனால் நாங்கள் கூட்டுப் பங்காளிகள் என்ற முறையிலேயே பெருமை கொள்கின்றோமே தவிர குத்தகைக் காரர்களாக அல்ல என்பதையும் நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

13 ஆவது திருத்தைத் தாண்டி தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஐ.நா. செயலருக்கு 2009 மே 22 ஆம் திகதி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொடுத்த வாக்குறுதியை இத்தருணத்தில் நினைவுறுத்துகின் றோம் - என்றார். (த-5)

## சாஹிராவின் உதைபந்தாட்டம் இன்று கொழும்பில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 26
இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் கொழும்பு சாஹிராக் கல்லூரி 9 ஆவது ஆண்டாக நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

இந்தச் சுற்றுப் போட்டித் தொடரில் பங்கு பற்றுவதற்காக மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி கொழும்பு பயணமாகியுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2011 ஆம் ஆண்டில்-இருந்து இந்த சுற்றுப்போட்டியில் பங்கு கொண்டு வருகின்றது.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி




மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2011 ஆம் ஆண்டில் இருந்து இந்த சுற்றுப்போட்டியில் பங்கு கொண்டு வருகின்றது.

'பிளேட்' சம்பியன் ஆனதுடன் 2012 ஆம் ஆண்டு மிகச் சிறந்த பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டு அதற்கான விருதையும் தனதாக்கிக் கொண்டது. (த-23)

# யாழ். மத்தி, இந்துமகளிர் அணிகள் இறுதி ஆட்டத்துக்கு





யாழ்ப்பாணம், ஒக். 26
யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வன் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் பெண்கள் பிரிவில் யாழ். இந்தது மகளிர் கல்லூரி அணியும் ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி அணியும் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான அரையிறுதி ஆட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி என்ற 32:28 புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல் லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 49:29 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. (த-23)



91 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டச் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சமாசம் நடத்திய விளையாட்டு போட்டியில் வெற்றிபெற்ற பணியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் வெற்றி பெற்ற வீரர் ஒருவருக்கு கேடயம் வழங்குகிறார். (த-17)

## உடுவில் கோட்ட உதைபந்தில் இன்று

வலி.வடக்கு, ஒக்.26
உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளன.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

16 வயதுப் பிரிவு
இணுவில் மத்திய கல்லூரி. எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.
குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம். எதிர் ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்.

சனிக்கிழமை மேற்படி போட்டிகளைத் தொடர்ந்து 14 வயதுப் பிரிவினருக்கான காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்களும் 16 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டங்களும் இடம் பெறவுள் ளன. (த-86)



கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகத்துக்கு விருந்தினர்கள் வெற்றிக் கிண்ணம் வழங்குகின்றனர். (த-23)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 26
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

முதலாவது ஆட்டத்தில் மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரண்டாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## கனகபுரம் வி.க நடத்தும் கிரிக்கெட் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.26
கனகபுரம் விளையாட்டுக் கழகம் நடத்தும் 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன.


இந்தச் சுற்றுப் போட்டித் தொடரில் 30 விளையாட்டுக் கழகங்கள் பங்கு கொள்ளவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

# சென்றலைட்ஸ் வி.கவின் மின்னல் வேக கூடைப்பந்து

## இன்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில்

யாழ்ப்பாணம், ஒக்.26
யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வன் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னல் வேக கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-



**பிற்பகல் 3 மணி**
சென்றலைட்ஸ் (சொக்ஸ்) விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்.பல்கலைக்கழக அணி.
**பி.ப.3.30 மணி**
கே.ஸி.ஸி.ஸி. 'பி' அணி எதிர் சென்றலைட்ஸ் 'கோல்ட்ஸ்' அணி.
**மாலை 4.30 மணி**
பற்றியன்ஸ் 'பி' அணி எதிர் ஏஞ்சல் வி.க
**மாலை 4.30 மணி**
ஜொலிஸ்ரார் 'சி' அணி எதிர் கே.ஸி.ஸி.ஸி 'ஏ' அணி.
**மாலை 5 மணி**
ஜொலிஸ்ரார் அணி எதிர் முல்லைத்தீவு அணி.
**பி.ப 5.30 மணி**
கோப்பாய் விளையாட்டுக் கழக அணி எதிர் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணி.
**மாலை 6 மணி**
கே.ஸி.ஸி.ஸி 'பி' அணி எதிர் ஜொலிஸ்ரார் 'ஏ' அணி
**மாலை 6.30 மணி**
பற்றிசியன்ஸ் வி.க.'ஏ' அணி ஏஞ்சல் வி.க
**இரவு 7 மணி**
ஜொலிஸ்ரார் 'பி' அணி எதிர் சென்றலைட்ஸ் கோல்ட்ஸ் அணி.
**இரவு 7.30 மணி**
யாழ்.பல்கலைக்கழக அணி எதிர் கே.கே.எஸ்.அணி
**இரவு 8.00 மணி**
ஜொலிஸ்ரார் 'சி' அணி எதிர் முல்லைத்தீவு அணி.
**இரவு 8.30 மணி**
பற்றிசியன்ஸ் 'ஏ' அணி எதிர் சென்றலைட்ஸ் புளூஸ் அணி. (த-23)

# இரட்டைச் சதத்தை தவறவிட்ட வோர்னர்

முதல் தர ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் இரட்டைச் சதம் அடித்த முதல் ஆஸ்திரேலியர் என்ற சாதனையை மூன்று ஓட்டங்களினால் டேவிட் வோர்னர் தவறவிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் ரியோபி கிண்ணத்துக்கான முதல் தர ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது. சிட்னி நகரில் நியூ சவூத் வேல்ஸ், விக்டோரியா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் நியூ சவூத் வேல்ஸ் அணி வெற்றி பெற்றது. அந்த அணிக்காக



விளையாடிய வோர்னர் 144 பந்துகளில் 197 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார். இதில், 10 சிக்ஸகள், 20 பவுண்டரிகள் அடங்கும்.

இது, முதல் தர கிரிக்கெட்டில் ஆஸ்தி ரேலிய வீரர் ஒருவர் அடித்த அதிகபட்ச ஓட்டமாகும். இதற்குமுன், 2004ஆம் ஆண்டு ஜிம்மி மெஹர் அடித்த 187 ஓட்டங் களை எடுத்திருந்தார். அந்த சாதனையைத் தற்போது வோர்னர் முறியடித்துள்ளார்.

ரியோபி கிண்ணத் தொடரில் 4 ஆட் டங்களில் விளையாடியுள்ள வோர்னர், 3 சதங்களை விளாசியுள்ளார்.

தனது, ஒழுங்கீனமான நடவடிக்கையால் தேசிய அணியிலிருந்து வோர்னர் நீக்கப்பட் டுள்ளார். தற்போது உள்ளூர் கிரிக்கெட்டில் சிறப்பாக விளையாடி வருவதால், ஆஷஸ் தொடரில் அவர் மீண்டும் இடம் பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)



# காலிறுதியில் பெடரர்

சுவிட்சர்லாந்தில் நடைபெற்றும் வரும் ரென்னிஸ் போட்டி யின் காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார் ரோஜர் பெடரர். சுவிட்சர்லாந்தின் பசல் நகரில் ரென்னிஸ் போட்டிகள் நடைபெறுகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த 2ஆம் சுறறில் உஸ்பெஸ்கிஸ்தானை சேர்ந்த டேனிஸ் இஸ்டோமினுடன்- உள்ளூர் நாயகனாக பெடரர் மோதினார்.

நீண்ட போராட்டத்துக்குப் பின்னர் 4:6, 6:3, 6:2 என்ற செற கணக்கில் பெடரர் வெற்றி பெற்றுக் காலிறுதியை எட்டினார். இந்த பருவகாலத்தில் நடைபெற்ற ரென்னிஸ் தொடர் களின் லீக் சுற்றுகளில் தரவரிசையில் பெடரர், தன்னை விடக் கீழ் உள்ளவர்களிடம் தோற்று போட்டியிலிருந்து வெளியேறுவது தொடர்ந்து வருகிறது. எனவே உள்ளூரில் நடைபெறும் போட்டியிலாவது பட்டம் வெல்ல வேண்டும் என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து உள்ளனர். ஜேர்மனியில் கடந்த ஜீன் மாதம் நடைபெற்ற ஜெர்ரி ஓபனைத் தவிர வேறெந்த பட்டத்தையும் இந்த பருவத்தில் பெடரர் வெல்லவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (த)

# பொண்டிங், லாராவை விட சச்சின் தான் சிறப்பானவர்




ரிக்கி பொண்டிங், பிரையன் லாராவை விட சச்சின் டெண்டுல்கரின் ஆட்டம் தான் சிறப்பானது என ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஷான் டெய்ட் கருத்து தெரிவித்துள்ளார்.

மும்பாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஷான் டெய்ட் கலந்து கொண்டு பேசுகையில், பிரையன் லாரா, ரிக்கி பொண்டிங், சச்சின் ஆகியோருக்கு எதிராக நான் விளையாடி இருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் லாரா, பொண்டிங்கைவிட சச்சின் ஆட்டம் மேலானது. 2011 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டம்தான் நான் கடைசியாக விளையாடியது. அந்தப் போட்டியில் 50 ஓட்டங்கள் எடுத்து நல்ல நிலையில் இருந்தார் சச்சின், அவரது இலக்கை வீழ்த்தியது நான்தான்.

அதில் இந்தியா எங்களை தோற்கடித்தது. டெண்டுல்கரின் இலக்கை வீழ்த்தியது என்றும் மறக்க முடியாது. முதலாவது ஐ.பி.எல் போட்டியில் மும்பாய் அணியின் தொடக்க வீரராக டெண்டுல்கர் களமிறங்கினார்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கான தொடக்க பந்துவீச்சாளராக நான் இருந்தேன், அப்போது நாங்கள் இருவருமே நல்ல நிலையில் இருந்தோம் என்று தெரிவித்துள்ளார். (த)

# இலங்கையில் 20/20 போட்டிகளில் கென்யா

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொள்ளவுள்ள கென்ய அணி, இலங்கை ஏ அணிக்கெதிராக 7 20/20 போட்டிகளில் பங்கு பற்றவுள்ளது. இதற்கான அறிவிப்பை இலங்கை கிரிக்கெட் சபை விடுத்துள்ளது.

கென்ய அணி உலக 20/20 தொடரின் தகுதிகாண் போட்டிகளில் பங்குபற்றவுள்ள நிலையில் அவ்வணிக்கான பயிற்சிகளாகவும், இலங்கை வீரர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்காகவும் இந்தத் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கவுள்ள இத்தொடரில் இலங்கை ஏ அணியின் தலை வராக டினேஷ் சந்திமால் செயற்படவுள்ளார்.

கென்ய அணி சார்பாக 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தோடு ஓய்வுபெற்ற அவ்வணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் ரிக்கலோ தனது ஓய்விலிருந்து வெளியே வந்து, இத்தொடரிலும், உலக 20/20 தகுதிகாண் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளார்.

போட்டி அட்டவணை:

முதலாவது போட்டி: ஒக்ரோபர் 27 - பிற்பகல் 2.15 - என்.சி.சி மைதானம்

இரண்டாவது போட்டி: ஒக்ரோபர் 29: காலை 9.45 - என்.சி.சி மைதானம்

மூன்றாவது போட்டி: ஒக்ரோபர் 29: பிற்பகல் 2.15 - என்.சி.சி மைதானம்

நான்காவது போட்டி: ஒக்ரோபர் 31: காலை 9.45 - சி.சி.சி மைதானம்

ஐந்தாவது போட்டி: ஒக்ரோபர் 31: பிற்பகல் 2.15 - சி.சி.சி மைதானம்


ஆறாவது போட்டி: நவம்பர் 2: காலை 9.45 - என்.சி.சி மைதானம்

ஏழாவது போட்டி: நவம்பர் 2: பிற்பகல் 2.15 - என்.சி.சி மைதானம்

தொடருக்கான குழுக்கள்:

கென்யா: கொலின் ஒபுயா, றாகெப் பட்டேல், மொறிஸ் ஒனுமா, நஹேமியா ஒடியம்போ, ஹிரேன் வரய்யா, ஷெம் கோச்சே, ஸ்டீவ் ரிக்கலோ, றாகெப் அகா, நெல்வன் ஒடியம்போ, எலியா ஒட்டினோ, திரேன் கோன்டாரியா, தோமஸ் ஒடோயோ, குர்தீப் சிங், எமானுவேல் புண்டி, டங்கன் அலன், இர்பான் கரிம்

இலங்கை ஏ: டினேஷ் சந்திமால், லஹிரு திரிமன்ன, குசால் ஜனித் பெரேரா, மஹேல உடவத்த, ஷெஹான் ஜெயசூரிய, உபுல் தரங்க, அஷன் பிரியஞ்சன, கித்துருவன் விதானகே, அஞ்சலோ பெரேரா, தனுஷ்க குணதிலக, யசோதா லங்கா, நிரோஷன் டிக்வெல்ல, றமிம் றம்புக்வெல்ல, சத்துராங்க டீ சில்வா, அகில தனஞ்சய, சீக் குகே பிரசன்ன, மிலிந்த சிரிவர்தன, இசுரு உதான, இஷான் ஜெயரத்ன, கோசல குலசேகர, லஹிரு ஜெயரத்ன, டில்ஹார லொக்குஹெட்டிகே, ஜீவன் மெண்டிஸ், ஷமிண்ட எரங்க. (த)



# பாகிஸ்தான் துடுப்பாட்டம் வட்மோர் கடும் அதிருப்தி



தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தமது வீரர்களின் துடுப்பாட்ட தவறுகள் குறித்து பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

டுபாயில் நடைபெறும் இந்தப் போட்டியின் நேற்று முன் தினம் முதல் நாளில் பாகிஸ்தான் அணி அதன் முதல் இன்னிங்ஸ்ஸில் 99 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது. ஆட்டமிழப்புக்களுக்கு அவர்களே காரணமாக இருந்ததாகவும் டேவ் வட்மோர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை போட்டியில் தனது முதல் இன்னிங்ஸ்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஆட்டநேர நிறைவில் 3 விக்கெட் இழப்பிற்கு 128 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அணித் தலைவர் கிரஹம் ஸ்மித் ஆட்டமிழக்காமல் 67 ஓட்டங்களைப் பெற்றிருந்ததுடன், அல்வீரோ பீற்றசன் 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். (த)

# இந்தியாவின் வெற்றி பெரும் கேள்விக்குறி



இந்தியா- ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான 5ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடக்குமா என்பது பெரும் கேள்விக்குறியாகி உள்ளது.

இந்தியா வந்துள்ள ஆஸ்திரேலிய அணி ஒரு 20/20 மற்றும் 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது.

இத்தொடரில் 2-1 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் ராஞ்சியில் நடைபெற்ற 4ஆவது ஒருநாள் போட்டி மழையால் பாதிக்கப்பட்டு நிறுத்தப்பட்டது.

இதற்கிடையே நாளை 5ஆவது ஒருநாள் போட்டி ஒடிஷா மாநிலம் கட்டாக்கில் உள்ள பாரபதி மைதானத்தில் நடைபெற உள்ளது.

இங்கு கடந்த நான்கு நாள்களாக பெய்து வரும் கனமழையால் மைதானம், மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இன்னும் 36 மணிநேரத்துக்கு மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. எனவே இங்கு போட்டி நடைபெறுவதில் பெரும் சிக்கல் நிலவுகிறது.

கடந்த ஒக்ரோபர் மாதம் ஒடிஸாவை தாக்கிய பைலின் புயலால், ஒடிஸாவின் பல பகுதிகள் பாதிப்புக்குள்ளாகியது. 17 மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. பைலின் புயலின் பாதிப்பு இன்னும் அடங்காத நிலையில் இங்கு இதுபோன்ற ஒரு போட்டியை நடத்துவது சரியில்லை என்று அந்த மாநில அரசின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஆனால் போட்டியை நிறுத்தும் உரிமை மாநில அரசின் கையில் இல்லை எனவும், அது கிரிக்கெட் சபையின் கையில் தான் உள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் ஒடிஸா கிரிக்கெட் சங்க அதிகாரி ஆசிர்பத் பெஹெறா, நாளை(இன்று) காலையில் மழை நிற்குமானால் நாங்கள் போட்டியை நடத்த தயாராக உள்ளோம் என தெரிவித்துள்ளார்.

அடுத்து வரும் மூன்று போட்டியிலும் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் உள்ள இந்திய அணிக்கு இது பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. (த)

# ரியல் மட்ரிட் வெற்றி



ஜுவன்டஸ் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டப் போட்டியில், கிறிஸ்டியானோ ரொனால்டோ இரண்டு கோல் அடித்து கை கொடுக்க, ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றது.

ஐரோப்பிய உதைபந்தாட்டஅணிகள் பங்கேற்கும், சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடர் முக்கிய நகரங்களில் நடக்கிறது.

மான்செஸ்டர் யுனைடெட், பேயர்ன் முனிச் உள்ளிட்ட 32 அணிகள் 8 பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றன.

ஸ்பெயினில் உள்ள மட்ரிட் நகரில் நடந்த பி' பிரிவு லீக் போட்டியில், ரியல் மட்ரிட், ஜுவன்டஸ் அணிகள் மோதின. ஆட்டத்தின் 4ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ முதல் கோல் அடித்தார். இதற்கு 22ஆவது நிமிடத்தின் ஜுவன்டஸ் அணியின் பெர்ணான்டோ லோரன்டி டோரஸ், பதிலடி கொடுத்தார். ஆட்டத்தின் 29ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்டனைஉதைவாய்ப்பை, ரியல் மட்ரிட் அணியின் ரொனால்டோ கோலாக மாற்றினார். கடைசி நிமிடம் வரை போராடிய ஜுவன்டஸ் அணியினரால் கூடுதலாக ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் ரியல் மட்ரிட் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதுவரை விளையாடிய மூன்று போட்டியிலும் வெற்றி பெற்ற ரியல் மட்ரிட் அணி 9 புள்ளிகளுடன், பி' பிரிவில் முதலிடம் பிடித்தது. ஏ' பிரிவில் நடந்த போட்டியில், மான்செஸ்டர் யுனைடெட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் ரியல் சோசிடாட் அணியை தோற்கடித்தது. (த)


## தேவை

1) அலுவலக உதவியாளர்:-
(பியோன்)
யாழ்ப்பாணம், நல்லூர்,கோப்பாய் பகுதிகளைச் சேர்ந்த தரம் 10 தகைமையுடைய 40 வயதிற்குட்பட்ட ஆண், பெண் தொடர்பு கொள்ளலாம்.

2) எழுதுவினைஞர்:- (Clerk)
(பெண்கள்)
AL 3 பாடங்கள் சித்தி, கணினி அறிவு முக்கியம், ஆங்கில அறிவும் எதிர் பார்க்கப்படும்.

**0217904941**



ஐக்கிய அமெரிக்காவில் படிக்க
மாதம் 3 1/2 இலட்சம் உழைக்க
அரிய வாய்ப்பு

விரைவான விரிவான சட்ட ஆலோசனைக்கு

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
021 221 9016,
021 568 9090
(33299)



## வெளிநாட்டு உயர்கல்வி

பகுதி நேர வேலைவாய்ப்புடன்

ஹோட்டல் முகாமைத்துவம் சிங்கப்பூர் மலேசியா

ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L

- மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவு 100,000/-
- பாடநெறிக்கட்டணம் 350,000/- 1 வருடம்

கட்டணம் 100% வீசா வந்தபின்
வீசா 14 நாட்களில்

Hotline:
077 3013060

மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு

Spoken English with Grammar Duration : 2 months

புதிய பிரிவுகள் ஆரம்பம் 02.11.2013

iCS Study Overseas
இல. 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
021 7306000 , 077 3013060
107, 8-1/1 காலி வீதி, கொழும்பு-06,
011 434 3322 . 077 3013060



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

After A/L What Next?

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

Batch - 1 28.10.2013 | Batch - 2 02.11.2013 | Batch - 3 04.11.2013 | Batch - 4 09.11.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hotlines:0777585913,0777222422,0714299935,0777730074


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.